Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 04 ஞாயிற்றுக்கிழமை (20.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276

# 20 ஆவது திருத்தச் சட்டத்தை
## மாற்றம் செய்யாது நிறைவேற்ற வேண்டும்
### அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய



(கொழும்பு)
20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்துக்கான பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன். அதில் திருத்தங்கள் எதுவும் செய்யாது அப்படியே நிறைவேற்றுங்கள் என அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15



சாண்டில்யன்
எழுதிய
'கடல் புறா'
சரித்திர நாவல்
ஒவ்வொரு ஞாயிறும்
சங்குநாதத்தில்

## நவாலி வயலில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
நவாலியில் உள்ள வயல் ஒன்றிலிருந்து முதியவர் ஒருவர் நேற்றைய தினம் சடலமாக மீட்கப்பட்டார்.
உறவினர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்து வயல் வேலைகள் செய்து வந்த நிலையில் அவர் நேற்றுக் காலை

15

### உயிரிழந்தவர்களை நினைவுகூருவது அடிப்படை உரிமை
# திலீபனின் நினைவேந்தலுக்கு அனுமதி தாருங்கள்
## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதி, பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)
**உயிரிழந்தவர்களை நினைவுகூருவது அடிப்படை உரிமையாகும். தியாகி திலீபனின் நினைவுகூரலை நடத்தும் அடிப்படை உரிமையை வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதமருக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் கையெழுத்திட்ட கடிதம் நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

வடக்கு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் இல்லத்தில் நேற்று ஒன்றுகூடிய தமிழ் தேசியம் சார் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து கையெழுத்திட்டுள்ளார்கள்.
இந்தக் கடிதத்தில், இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, புளொட் அமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி, தமிழ் தேசியக் கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகிய தமிழ் தேசிய சார்பு கட்சிகள் கையெழுத்திட்டுள்ளன.
இதன்படி, இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, சீ.வீ.கே.சிவஞானம், சிவஞானம் சிறீதரன் ஆகியோர்

16

## வாள்வெட்டுடன் தொடர்புடைய 9 பேர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற பல வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் வன்முறை கும்பலை சேர்ந்த 9 பேர் விசேட அதிரடிப் படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

16

### அரசின் அடக்குமுறைக்கு எதிராக
## தமிழ்க் கட்சிகளுடன் முன்னணியும் நேற்று இணைந்து கொண்டது
### முறைப்படி அழைக்காததாலேயே முதலில் கலந்து கொள்ளவில்லையாம்

(யாழ்ப்பாணம்)
அரசின் அடக்குமுறைக்கு எதிராக தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்த நிலையில் நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து கொண்டது.
முறைப்படி அழைக்

15

## 13ஆவது திருத்தத்தை ஒழிக்க இலங்கை தீவிர முயற்சி
### அவசரமாக மைத்திரியை சந்தித்த இந்திய தூதுவர் கோபால் பாக்லே

(கொழும்பு)
நடைமுறைப்படுத்தப்படவுள்ள 20ஆவது திருத்தச் சட்டத்தினூடாக தற்போது நடைமுறையிலுள்ள 13ஆவது திருத்த சட்டத்தை இரத்து செய்யுமாறு அரச தரப்பிலுள்ள பலரும் ஜனாதிபதி கோட்டாபய

15

## மாகாண சபை நீக்கப்படாது
### வாசுதேவ உறுதி

(கொழும்பு)
அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை இரத்து செய்வது தொடர்பில் அரசாங்கம் இதுவரையில் எவ்விதமான தீர்மானங்களையும் உத்தியோகபூர்வ

16

### டெனீஸ்வரன் விவகாரத்தை எனக்கு எதிரான
# பொறியாகப் பாவிப்பதற்கு திரைமறைவில் முயற்சித்தனர்
### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
டெனீஸ்வரன் விவகாரத்தை வேறு சிலர் எனக்கு எதிரான பொறியாகப் பாவிப்பதற்கு திரைமறைவில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

15

## எதிர்வரும் 6 மாதத்துக்குள் அரசை கவிழ்ப்போம்
### ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)
எதிர்வரும் ஆறு மாத காலத்திற்கு முன்னர் தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்க போவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
எந்த வகையிலும் மேலும் ஆறு மாதங்களுக்கு இந்த அரசாங்கம் முன்

16

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(4024)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.



**AAA AND Co**

**கணக்கீடு, கணக்காய்வு நிறுவனம்**

வியாபார நிறுவனங்களின் கணக்குகள், கணக்காய்வு வேலைகள், வங்கிக் கடன்கள் பெறுவதற்கான ஆலோசனைகளும், கணக்கு உதவிகளும் எம்மால் செய்து தரப்படும்.

- உதவி கணக்காளர் பயிலுநர் பதவி வெற்றிடம் உண்டு.
- A/L வணிகப்பிரிவு அல்லது AAT மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

(4033)

**Tel : 077 694 4543**


# கிளிநொச்சியில் விபத்து இளம் பெண் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் இள ம்பெண் ஒருவர் காயமடைந் துள்ளார்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் ஒன்று கிளிநொச்சி 55ஆம் கட்டைப் பகுதியில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த போது பஸ்ஸின் பின்பக்கமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் பெண் ஒருவர் பஸ்மீது மோதி காயமடைந்துள்ளார். காயமடைந்த பெண் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-03.350)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
சைவசித்தாந்த
முதுகலைமாணி மாணவன்
**திரு. சி. குகதாசன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

**ஆறுமுகம் சிதம்பரப்பிள்ளை**

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சைவ சித்தாந்த முதுகலைமாணி மாணவர்கள்,**
**உயர் பட்டப்படிப்புகள் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(4027)


**வேலை ஆட்கள் தேவை**

யாழ். திருநெல்வேலியிலுள்ள எமது கட்டடத்திற்கு வேலையாட்கள் தேவை.
மேசன், மாபிள் பதிப்பவர்கள், மேசன் உதவியாளர்.

(4035)

**077 105 6694**



**நல்லூர் பாம் சென்றர்**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், ஊர்க்கோழி
**காலை 6.00 மணி -இரவு 8.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.**
**டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.**

(4019)

**நல்லூர் பாம் சென்றர்,**
19, முருகேசர் லேன், யாழ்ப்பாணம்.



**வேலை வாய்ப்பு**

எமது கணக்காளர் நிறுவனத்திற்கு கணக்கியல் பயிலுனர், Account Trainee . தேவை. HNDA, CHARTED, CIMA மாணவர்கள் மற்றும் A/L Commerce சித்தியடைந்தவர்கள்.
mrandco2011@yahoo.com
**இற்கு விண்ணப்பிக்கவும்.** (4035)

**தொடர்பு : 077 953 0496**



**விற்பனையாளர் தேவை ( Sales Man )**

- எமது நிறுவனத்திற்கு விற்பனையாளர் ( ஆண் ) தேவை.
- வயது - 30 வயதுக்கு மேல்.
- வதிவிடமும், நற்சான்றிதலும் கிராமசேவையாளரால் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.

**நேர்முகத் தேர்வு : 23.09.2020 புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை**

(4029)

தொடர்புகளுக்கு :- **MALBA ROPES (PTE) LTD.**
- 212, Hospital Road, Jaffna.
☎-021 222 0090 ✉ - kandee7030@gmail.com



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## மரண அறிவித்தல்

திருமதி
**ஜெகராசதில்லையம்மா சுப்பிரமணியம்**



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகராசதில்லையம்மா சுப்பிரமணியம் 18.09.2020 வெள்ளிக் கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் நற்குணசீலன் (இ.மி.ச), நற்குணவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் S.K.N. தவராஜா (ஓய்வுநிலை சிரேஷ்ட உதவிப்பதிவாளர், யாழ். பல்கலைக் கழகம்), ராதிகா (முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுவாஸ்கர் (அமெரிக்கா), சுவாஸ்கர் (கனடா), வைகுந்தன் (Maga Engineering (Pvt) Ltd.), கௌஸ்துபன் (மாணவன்-யாழ். இந்துக் கல்லூரி), சிவாஸ்கர் (கொமர்ஷியல் கிறடிட்), பிரசாந்தன் (பிரான்ஸ்), கிஷாந்தன் (விற்பனைப் பிரதிநிதி - Hutch ), றெஜினா (அமெரிக்கா), துளசி (சட்டத்தரணி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கிழக்கு ஆலடி வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று காலை 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4026)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:-
சு. நற்குணசீலன் (மகன்)
S.K.N. தவராஜா ( மருமகன்)

## மரண அறிவித்தல்

**சுந்தரம்மா ஆறுமுகம்**



காரைநகர், பாலாவோடை, களபூமியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்மா ஆறுமுகம் நேற்று (19.09.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற A.V. ஆறுமுகத்தின் (பத்திரிகை முகவர் - பரந்தன் ) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, V.R. தம்பிப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், மயில்வாகனம், நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் சந்திரமலர், சத்தியபாமா (கனடா), ரஞ்சினிதேவி, காலஞ்சென்ற சிவஞானசுந்தரம் மற்றும் கனகசுந்தரம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சூரியமூர்த்தி (பரந்தன்), தனபாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவப்பிரியா, சிவனருள், சிவ - அரசன், சிவசூரியா, குமரன், காயத்திரி, சசிதரன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் திவாணியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 9.00 மணியளவில் தில்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4032)

பாலாவோடை,
களபூமி, காரைநகர்.

தகவல்:-
குடும்பத்தினர்

# பேருந்து நிலைய அங்காடி கடைகளை அகற்றுமாறு மாநகரசபை உத்தரவு;

# குத்தகை அடிப்படையில் வர்த்தக நடவடிக்கைகளை தொடர அனுமதியுங்கள்

## அங்காடி வியாபாரிகள் சங்கத்தினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாநகர சபைக்குட்பட்ட யாழ்.மத்திய பேருந்து நிலையத் தரிப்பிடத்தின் உட்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை உடனடியாக அகற்றுமாறு குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு யாழ்.மாநகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

எனினும் இதுவரை காலமும் குத்தகை அடிப்படையில் வர்த்தக நிலையங்களை நடத்த அனுமதித்தது போன்று தொடர்ந்தும் குத்தகை அடிப்படையில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என குறித்த வர்த்தக நிலையங்களில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் யாழ்.மத்திய பேருந்து நிலைய வாழ்வாதார அங்காடி வியாபாரிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் விடயம் தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் கடந்த சில காலம் யாழ்.மநாகர சபைக்கும் சில காலம் இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் குத்தகை வழங்கி எமது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் உட்பகுதியில் 67 வர்த்தக நிலையங்கள் உள்ளன. இவற்றை உடனடியாக அகற்றினால் இதையே வாழ்வாதாரமாகக் கொண்ட 67 வர்த்தக நிலைய உரிமையாளர்களின் குடும்பத்தின் நிலை கேள்விக் குறியாகிவிடும்.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு இவ்வளவு காலமும் பெற்று வந்த குத்தகையின் அடிப்படையில் தொடர்ந்தும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விடயம் தொடர்பில் எமக்கு உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் சாத்வீகமாக போராட்டங்களை முன்னெடுப்போம் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (2-8)

# ஐ.நா.மனிதவுரிமைகள் பேரவையின் கருத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஏற்றுக் கொள்கின்றது



## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படும் ஆபத்து இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் பேரவை முன்வைத்திருக்கும் கருத்தை ஏற்றுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். இதேவேளை ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கருத்தையே எதிர்க்கட்சி கூற முற்படவில்லை என்றும், ஆனால் இரு கருத்தும் ஒரே விளக்கத்தையே அளிப்பதாகவும் தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கருத்து தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியை பொறுத்தமட்டில் அதனை நிறைவேற்றக் கூடாது என்ற நிலைப்பாடே காணப்படுகின்றது. இந்த திருத்தத்தில் ஜனநாயக கொள்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதன் காரணமாகவே நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றோம். ஆனால் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் பேரவையும் எம்மை போன்றே 20 ஆவது திருத்தத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளுக்கு பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக தெரிவித்துள்ளது. ஆனால் ஐ.நாவின் கருத்துக்கும் எமது கருத்துக்கும் தொடர்பில்லை என்றாலும், நாங்கள் இருவருமே 20 ஆவது திருத்தம் தொடர்பில் ஒரே கருத்துக் கணிப்பிலேயே இருக்கின்றோம். இதேவேளை எதிர்க்கட்சி என்ற வகையில் நாட்டு மக்களின் நலனை கருத்திற் கொண்டே நாங்கள் இவ்வாறு கூறிவருகின்றோம். எமது எண்ணம் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு 19 பிளஸ் ஊடாக செல்வதேயாகும்.

அரசாங்க நிர்வாக பதவிகளில் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை நியமிப்பது ஆரோக்கியமற்றது என்று ஐ.நா. சபை கூறியிருக்கும் கருத்தை நாங்களும் ஏற்றுக் கொள்கின்றோம். நாங்கள் இராணுவத்தினரையோ, பாதுகாப்பு படையினரையோ குறைவாக மதிப்பிட்டு இவ்வாறு கூறவில்லை. பொதுவாக பொலிஸார் மற்றும் இராணுவ படையினர் நாட்டின் பாதுகாப்பு மற்றும் மக்களின் நலன் தொடர்பில் பாரிய சேவையை செய்து வருபவர்கள். அவர்களின் செயற்பாடுகளுக்கு நாங்கள் எப்போதும் மதிப்பளிக்கின்றோம். ஆனால் அதற்கும் பொது நிர்வாகத்திற்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. இதன் காரணமாகவே நாங்கள் பொது நிர்வாக பிரிவுகளில் இராணுவத்தினரின் தலையீடு பொருத்தமற்றது என்று கூறிவருகின்றோம்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையிலிருந்து விலகுவது தொடர்பில் ஆளும் தரப்பு அமைச்சர்கள் கூறிவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான பேச்சுகள் எமது நாடு போன்ற தனிநாட்டுக்கு பெரும் சிக்கல்களை ஏற்படுத்தும். பொதுவாகவே வளர்ந்து வரும் நாடுகள் ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும்.

எமது நாடும் இதுவரையில் அவ்வாறே செயற்பட்டு வந்துள்ளது. அதற்கமைய நாம் பல நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கூட செய்து கொண்டுள்ளோம் ஐ.நாவுடன் பகைமையை ஏற்படுத்திக் கொள்வது என்பது சர்வதேச நாடுகளுடன் பகைமை ஏற்படுத்திக் கொள்வதற்கு நிகரானதாகும்.

இந்நிலையில் எமது நாடு ஏனைய நாடுகளிடமிருந்து தனித்து செயற்படும் அளவுக்கு இன்னும் வளர்ச்சி காணவில்லை. அதனால் இதுபோன்ற தீர்மானங்களை எடுக்கும் போது நாட்டின் நிலைமை தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே எமது கருத்து என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# மனித குலத்திற்கு அச்சுறுத்தலாக அமையும் கொரோனா இல்லாதொழிக்க தற்காப்பு நடவடிக்கைகள் அவசியம்

## வைத்தியர் யமுனாநந்தா

(யாழ்ப்பாணம்)

கொவிட்-19 வைரஸினை உலகில் இல்லாது செய்ய பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியம் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

கொவிட்-19 இனை உலகில் இல்லாது செய்தல் என்னும் தொனிப்பொருளில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இன்று உலகெங்கும் பரவித் தாக்கத்தை ஏற்படுத்தும் கொவிட்-19 வைரஸினை உலகில் இல்லாது செய்ய மேற்கொள்ள வேண்டிய முற்காப்பு நடவடிக்கைகள் பற்றிச் சிந்திப்பது அவசியம்.

இலங்கை போன்ற நாடுகளில் நோய் கட்டுப்பாட்டில் உள்ளமையால் புதிதாகக் கண்டறியப்படும் நோயாளர்களில் இருந்து வைரஸ் கிருமி ஏனைய மனிதர்களிற்கும் இளஞ்சூட்டுக் குருதியுடைய முள்ளந்தண்டுள்ள விலங்குகளிற்கும் பரவுவதைத் தடுத்தல் வேண்டும்.

மருத்துவ ஆய்வு கூடங்களில் இருந்து தவறுதலாக கொவிட்-19 வைரஸ் மாதிரிகள் நீண்ட நாட்களுக்குப் பாதுகாக்கப்படல் தவிர்க்கப்படல் வேண்டும்.

கொவிட்-19 நோயாளிகள் பராமரிக்கப்படும் வைத்தியசாலைச் சுற்றாடல் மிகவும் சுத்தமானதாகவும் அவ் வைத்தியசாலைச் சூழலில் நோய்க் கிருமிகளை தவறுதலாகப் பரப்பும் ஏதுக்கள் இல்லாத நிலையும் பேணப்படல் வேண்டும்.

கொவிட்-19 வைரஸ் உயிரியல் போர் ஆயுதங்களில் மிகவும் ஆபத்தான நிலைக்குரிய கிருமிகள் ஆகும். எனவே கொவிட்-19 வைரஸ் மாதிரிகள் ஆய்வு கூடங்களில் இருந்து தவறானவர்களின் கைகளிற்குச் செல்லல் தடுக்கப்படல் வேண்டும்.

கொவிட்-19 பரிசோதனை ஆய்வு கூடங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். அன்றேல் மண்ணில் புதைக்கப்பட்ட நிலக் கண்ணிவெடிகள் எவ்வாறு பல தசாப்தங்களுக்கு சமூகத்திற்கு அச்சுறுத்தலாக அமைகின்றதோ அவ்வாறே கொவிட் வைரஸும் மனித குலத்திற்கு பல தசாப்தங்களிற்கு அச்சுறுத்தலாக அமையும் என வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-8)

# தேசிய நெருக்கடியை எதிர்கொள்வதற்கு கட்சிபேதங்களை மறந்து ஒன்றிணையுங்கள்

## அவுஸ்திரேலிய தமிழ் வானொலிக்கு வழங்கிய செவ்வியில் சிற்பரன்

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் தமிழ்த் தேசியம் பெரும் நெருக்கடிக்குள்ளாகியிருப்பதால், இந் நெருக்கடியை எதிர்கொள்ள கட்சிபேதமின்றி சகல தமிழ் அரசியல் கட்சிகளும் மக்களும் ஒற்றுமைப்படுவதன் மூலம் தியாகதீபம் தீலிபனின் நினைவேந்தலுக்கு விடுக்கப்பட்ட தடையுத்தரவை எதிர்கொண்டு நினைவேந்தலை செலுத்த முடியும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் உப செயலாளர் தவச்செல்வம் சிற்பரன் தெரிவித்துள்ளார்.**



அவுஸ்திரேலிய தமிழ் வானொலிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தியாக தீபம் தீலிபனின் நினைவேந்தலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவை எவ்வாறு எதிர்கொள்வது என்பதை ஆராய்வதற்காக அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா விடுத்த அழைப்பு தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில்,

தமிழ்த் தேசியத்திற்கு நன்மை பயக்கும் எவ்வாறான முயற்சிகளுக்கும் தமிழ் மக்கள் கூட்டணி வலுச்சேர்க்கும்.

இதனை எமது கட்சித் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் தேர்தல் கால கூட்டங்களிலும் மற்றும் பாராளுமன்றத்திலும் தெரிவித்திருக்கின்றார்.

எந்தக்கட்சியாக இருந்தாலும் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் எந்தவொரு பிரேரணையை பாராளுமன்றிற்கு கொண்டு வந்தால் ,அதனை எமது கட்சி வரவேற்று வலுச்சேர்க்கும் என்பது எமது கட்சியின் நிலைப்பாடு. அவ்வாறே இப்பொழுது தமிழ்த் தேசியத்திற்கு ஏற்பட்டுள்ள பெரும் நெருக்கடியை தமிழ் மக்கள் தேசிய எழுச்சியாக எதிர்கொள்ள, தமிழ் மக்கள் பேரவையை கட்சிசார்பற்ற அமைப்பாக இயங்க வைக்கும் தேவையும் அவசியமும் கருதி எமது கட்சித் தலைவர் விக்னேஸ்வரன் பேரவையின் இணைத் தலைவர் பதவியை இராஜினாமா செய்து, தமிழ் மக்களின் தேசிய எழுச்சிக்கு வலுச்சேர்க்கும் வகையில் தனது ஒத்துழைப்பை வழங்கியுள்ளார்.

மேலும் தமிழ்மக்கள் பேரவையின் பின்னால் கட்சி பேதங்களைக் கடந்து அனைத்துக் கட்சிகளும் இணைந்து இத் தமிழ்த்தேசிய நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டும்.

மரணித்த எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தக்கூட எமக்கு தடையுள்ளது. இது எமது அடிப்படை உரிமையை பாதிக்கின்றது.

இதில் கட்சி பேதங்களைக் கடந்து தமிழ்த் தேசியத்திற்கு வலுச் சேர்க்க எமது கட்சி பின்நிற்க மாட்டாது என்பதில் சந்தேகம் இல்லை.

இப்பிரச்சினையை -மக்கள் எழுச்சியாக மாற்ற மக்கள் இயக்கத்தின் பின்னே கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைவரும் இணைந்து செயற்றிட்டங்களை வகுத்து இந் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியது .காலத்தின் கட்டாயமாகும்.

எமது கட்சி, மக்கள் இயக்கமான தமிழ் மக்கள் பேரவையின் பின்னே நின்று தமிழ் மக்கள் சந்தித்துள்ள தேசிய நெருக்கடியை எதிர்கொள்ள தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-6-10)

# "பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்"

## கொரோனா குறித்து இராணுவத் தளபதி மீண்டும் எச்சரிக்கை

(கொழும்பு)

சமூகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்படா விட்டாலும் வைத்தியசாலைகளில் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் பொதுமக்கள் இந்த நிலைமைகளை மறந்து சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாமல் நடந்து கொள்வது பாரதூரமானதாகும் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதனைத் தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

சமூகத்தினுள் கொவிட் -19 வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் இனங்காணப்படாவிட்டாலும் வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் பெரும்பாலானவர்கள் தொற்றுக்குள்ளாகின்றனர்.

எனினும் சமூகத்தில் தொற்றாளர்கள் இனங்காணப்படாவிட்டாலும் வைத்தியசாலைகளில் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உற்சவங்கள் நடத்தப்படும் போதும் பொறுப்பற்று செயற்படுவதாக எமக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தனிமைப்படுத்தல் நிலையங்களாக உள்ள ஹோட்டல்களிலுள்ள ஊழியர்களும் சுகாதாரப் பாதுகாப்புடன் பொறுப்பாக செயற்பட வேண்டும் என்று கோருகின்றோம் எனத் தெரிவித்தார். (ஜ-4)



# கொழும்பு மருத்துவபீட மாணவனின் சி.பி.ஆர்.கருவி பிரதமரிடம் அறிமுகப்படுத்தப்பட்டது


(கொழும்பு)

சுகாதாரத் துறையின் செயற்றிறனை மேம்படுத்துவதன் மூலம் கொவிட் -19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்கு கொழும்பு மருத்துவபீட மாணவனான டில்ஷான் அபேசிங்க உருவாக்கியுள்ள சி.பி.ஆர்.கருவி (CPR) பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சுகாதாரத் துறையின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு புதிய கண்டு பிடிப்பாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதயத்தை மீண்டும் உயிர்ப்பிக்கும் ஒரு சிகிச்சையாக சி.பி.ஆர். கருவியைப் பெற்றுக் கொடுப்பதற்கான இயந்திர அமைப்பும் இதன்மூலம் அறிமுகப்படுத்தப்படும். (ஜ-4)

# புதிய அரசியலமைப்புத் திருத்தம் பொருத்தமற்றது



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை வைத்து புதிய அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டு வருவது பொருத்தமற்றது என எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தலைவராக வரப்போவது யார் என்பது தெரியாமல் தற்போதுள்ள தலைவருக்கு பொருத்தமாக அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை கொண்டு வருவது உகந்தது அல்ல.

நாட்டுக்கு பொருத்தமான புதிய அரசியலமைப்புச் சட்டமே உருவாக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

# சிலாபத்தில் இளைஞனுக்கு கொரோனா

(சிலாபம்)

சிலாபம் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்ட பின்னர் இரணவில் கொரோனா சிகிச்சை மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டவர் ஆனமடுவ பகுதியில் வசிக்கும் 23 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.

அவர் கடந்த மாதம் 16 ஆம் திகதி டுபாயிலிருந்து நாட்டிற்கு வந்தார். இவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்த நிலையில் சிகிச்சைக்காக வெலிகந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு மூன்று பி.சி.ஆர்.பரிசோதனைகளை மேற்கொண்டனர், மூன்றாவது பரிசோதனையில் அவர் கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)

# குணமடைந்தோர் 3070

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து மேலும் 10 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்குச் சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று சனிக்கிழமை அறிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 70 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்று உறுதியானவர்களில் 198 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் இதுவரை 3 ஆயிரத்து 281 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அடுத்த வருடத்திற்குள் மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவு

(கொழும்பு)

2021ஆம் ஆண்டிற்குள் இலங்கை மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் என்று விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் சுப ஹீன்கெந்த தெரிவித்துள்ளார்.

இதுவரையில், சுமார் 1500 ஹெக்டேயர் பரப்பில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் 2021 பெப்ரவரி மாதத்திற்குள் சுமார் 22,500 மெட்ரிக் தொன் மஞ்சள் அறுவடை செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அறுவடையில் இருந்து 4,000 மெட்ரிக் தொன் விதைகள் அகற்றப்பட்டாலும், மீதமுள்ளதைக் கொண்டு நாட்டின் மஞ்சள் தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டில் ஆண்டுதோறும் மஞ்சள் நுகர்வு 7500 மெட்ரிக் தொன் ஆகும். 2019ம் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மஞ்சளின் அளவு 1200 மெட்ரிக் தொன் மட்டுமே.

ஏனைய தேவைகளை பூர்த்திசெய்ய கடந்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சளின் அளவு 5382 மெட்ரிக் தொன் ஆகும். இதற்காக 1200 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தற்போது மஞ்சள் இறக்குமதி செய்ய தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தீர்வாக உள்ளூர் விவசாயிகள் மஞ்சள் உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# கட்டுப்பாட்டையிழந்த கார் விபத்து ஒருவர் உயிரிழப்பு;இருவர் காயம்

(கல்முனை)

மட்டக்களப்பு செங்கலடி நகரில் நேற்று முன்தினம் வேக கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று விபத்தை ஏற்படுத்தியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இது தொடர்பில் தெரிய வருவதாவது, செங்கலடி எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்னால் வேகக் கட்டுப் பாட்டை இழந்த கார் வீதியால் நடந்து சென்ற ஒருவர் மீதும், துவிச்சக்கர வண்டியில் சென்ற ஒருவரையும் மோதித் தள்ளியது.

இதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஜ-2)

# 53 சீனர்களை ஏற்றி வந்த விமானம்

(கொழும்பு)

நாட்டில் முன்னெடுக்கப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டப் பணிகளில் சேவையாற்றி வரும் சீனப் பிரஜைகளை ஏற்றிய சைனா ஈஸ்டன் விமான சேவைக்கு சொந்தமான புதிய விமானம் ஒன்று சீனாவின் ஷங்காய் நகரில் இருந்து நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளது. நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் பணியாற்றும் 53 பிரஜைகளே இவ்வாறு வந்தனர். இதனையடுத்து இந்த விமானம் இலங்கையில் பணியாற்றி வரும் மேலும் 206 சீனப் பிரஜைகளை ஏற்றிக் கொண்டு ஷங்காய் நோக்கி புறப்பட்டுச் சென்றுள்ளது.(ஜ-4)

# புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடந்தோறும் மாவட்ட மட்டங்களில் நடத்தப்படும் புத்தகக் கண்காட்சியானது இம்முறை எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை ஆவரங்கால் சிவசக்தி கல்யாண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கண்காட்சியில் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகம் சார் எழுத்தாளர்களின் நூல்கள் காட்சிக்காகவும் விற்பனைக்காகவும் வைக்கப்படவுள்ளன.

கோப்பாய் பிரதேச எழுத்தாளர்கள் தமது நூல்களை காட்சிப்படுத்த விரும்பின் பிரதேச செயலக கலாசார பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலாளர் அறியத்தந்துள்ளார். (2)


## தேவை

வெல்டிங் வேலை தெரிந்த ஆண் வேலையாள் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

0768267703 (4023)

## பொதியிடுபவர் (Packer) தேவை

அச்சுவேலி கைத்தொழில்பேட்டையில் இயங்கும் பிரபல உற்பத்தி தொழிற்சாலைக்கு பொதியிடல் வேலைக்கு பெண் ஊழியர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:
0773395775 (4021)


# "மரக்கறிகளுக்கான கழிவுமுறை நீக்கப்பட வேண்டும்" இதனை இன்னமும் கடைப்பிடிக்காத வியாபாரிகள்

## சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் மரக்கறி வகைகளுக்கான 10:01 என்ற கழிவு முறைமையை இன்னமும் நீக்காமல் வியாபாரிகள் நகரசபைத் தீர்மானத்தை அவமதித்து வருவதாக நகரசபை உறுப்பினர் சு.நிதிகேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், விவசாயிகளின் நன்மை கருதி சாவகச்சேரி பொதுச் சந்தையில் நடைமுறையில் காணப்பட்ட மரக்கறி வகைகளுக்கான 10:01 என்ற கழிவு முறைமையை அண்மையில் சாவகச்சேரி நகரசபை முற்றாக நீக்கி இருந்தது.

ஆனால் நேற்று முன்தினம் சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் மூன்று வியாபாரிகள் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு 10 கிலோவிற்கு ஒரு கிலோவினை கழித்து கொள்வனவு செய்துள்ளனர்.

இவ்விடயம் உடனடியாக நகரசபை தவிசாளரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பில் விவசாயிகள் விழிப்புணர்வுடன் நடந்து கொண்டு கழிவு விதிக்கும் பட்சத்தில் அதனை நகரசபையின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

நகரசபைத் தீர்மானத்தை மீறும் வியாபாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அண்மையில் யாழ்.வந்திருந்த விவசாய அமைச்சர் கூட மரக்கறிகளுக்கான கழிவு முறைமை நீக்கப்பட வேண்டும் எனக் கூறியிருந்தார்.

எனவே நகரசபை இவ் விடயத்தில் உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (2-4-30)


## ஒப்செற் மெசின் இயக்குனர் தேவை

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்குள் இயங்கும் அச்சகம் ஒன்றிற்கு ஒப்செற் (Offset) மெசின் இயக்குனர் முழுநேரம் அல்லது பகுதி நேர வேலைக்கு ஆட்கள் (ஆண்கள்), கணனி வேலை தெரிந்தவர்கள் மற்றும் அச்சக வேலைகள் பழக விரும்புபவர்கள் தேவை.

தொடர்பு கொள்ள: 0779790815, 0773104899 (C-358)

## வெளிவந்து விட்டது

பிரபல உயிரியல் ஆசிரியர்
M.M.ALPHONS (Rat.st.John's College)
உயிரியல் மாணவர்களுக்கான
(2020 / 2021)
அனைத்து அலகுகளையும் உள்ளடக்கிய

**150 கட்டுரை வினா விடைத்தொகுப்பு**

தொடர்புகளுக்கு:
ஆசிரியர் - 0771331529
Book Lab - 0771285749
(யாழ்.பல்கலைக்கழகம் முன்)

# நிறுவை, அளவை, நிறுக்கும் கருவிகள் முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினால் நிறுவை, அளவை மற்றும் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் வலி.கிழக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் நாளை 21 ஆம் திகதி வலி.கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திலும் எதிர்வரும் 24 ஆம் திகதி புத்தூர் உப அலுவலகத்திலும் 25 ஆம் மற்றும் 28 ஆம் திகதி அச்சுவேலி உப அலுவலகத்திலும் 29 ஆம் திகதி மற்றும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி உரும்பிராய் உப அலுவலகத்திலும் இடம்பெறவுள்ளது.

எனவே பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சந்தை வியாபாரிகள் உட்பட சகல வர்த்தகர்களும் தவறாது தங்களது நிறுவை, அளவை மற்றும் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு பிரதேச சபை தவிசாளர் தி.நிரேஷ் அறிவித்துள்ளார். (2-4).

# வயல் காணிகளின் எல்லைகளை நிர்ணயிக்கும் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச செயலகமும்கமநலசேவைத்திணைக்களமும் இணைந்து வேலணைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட நீண்டகாலமாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத வயல் நிலங்களை இனம் கண்டு அவற்றை மீண்டும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் வகையில் பயிர்ச் செய்கைக்காக மட்டும் ஆர்வமுள்ள விவசாயிகளிடம் கையளிக்கின்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத சரவணை, தெங்கங்குளத்தை அண்மித்த வயல் காணி உரிமையாளர்கள் தங்கள் வயல் காணிகளுக்கான எல்லைகளை வரையறுக்க எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சரவணை தெங்கங்குள வயல் பிரதேசத்தில் ஒன்றுகூடுமாறு வேலணைப் பிரதேச செயலர் அ.சோதிநாதன் அறிவித்துள்ளார். (2)

# கித்துள் உற்பத்தியை ஊக்குவிப்பது போன்று பனை உற்பத்தியையும் ஊக்குவிக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண பனை உற்பத்திப் பொருட்களுக்கு தெற்கில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் சிறந்த கேள்வி நிலவுகின்ற நிலையில் குறித்த துறையை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.**

கனடாவில் யாழ்.மாவட்டத்தின் பனை சார்ந்த உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தக்கூடிய இரு கற்பகங்களை ஆரம்பிக்கவுள்ளதாக வடமாகாண பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்தி பத்திராஜா தெரிவித்தார்.

பனைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களிற்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 5000 கிலோ பனங்கட்டி வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு தேவைப்பட்டது. எனினும் 2000 கிலோ பனங்கட்டியே எமக்குக் கிடைத்தது.

யாழ்ப்பாண பனை உற்பத்திப் பொருட்களுக்கு தெற்கில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியிலும் சிறந்த கேள்வி நிலவுகின்ற நிலையில் குறித்த துறையை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

பனை உற்பத்தியாளர்களை ஊக்கிவிக்கும் பொருட்டு அரசாங்கம் சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்று தரும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் நீர்கொழும்பில் புதிய கற்பகதருக் கடைத் தொகுதி திறக்கப்பட உள்ளது எனத் தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த பனம் உற்பத்தியாளர்கள் அரசாங்கம் கித்துள் உற்பத்திக்கு மானியம் வழங்குகிறது. பனம் உற்பத்திகளுக்கு மானியம் வழங்குவதில்லை. இதனால் பனை உற்பத்தியாளர்கள் தொழில் ரீதியான நெருக்கடிகளுக்கும் வாழ்வாதார ரீதியான நெருக்கடிகளுக்கும் உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது கித்துள் உற்பத்திகளுக்கு வரிவிலக்கை அரசாங்கம் வழங்கியுள்ளதுடன் பனை உற்பத்திப் பொருட்களுக்கும் தொழில் நடவடிக்கைகளுக்கும் அரசாங்கம் வரி அறவிடுகின்றது. இலங்கை மதுவரி சட்டத்தில் கித்துள் பாணி உள்ளடங்காத போதிலும் பதநீர் மதுவரி சட்டத்தில் ஏற்கப்பட்டுள்ளது.

பனையில் இருந்து எடுக்கப்பட்ட பதநீரானது 11 மணித்தியாலத்திற்கு பின்னரே மதுவாக மாறுகின்ற நிலையில் மருத்துவ குணங்கள் உடைய இயற்கை பானமாக பலரும் இதை அருந்துகிறார்கள். ஆகவே அரசாங்கம் பனை உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு சலுகைகளை வழங்கும் பட்சத்தில் குறித்த உற்பத்தி துறையை வீழ்ச்சி அடையாமல் முன் னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருஷாந்தி பத்திரராஜா, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-4)

# கல்வியங்காடு வாள் வெட்டுடன் தொடர்புடையவர் விளக்கமறியலில்

## மிதிவெடி, கைக்குண்டு விசாரணையின் பின் மீட்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கல்வியங்காடு பகுதியில் வாள்வெட்டு தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் யாழ்.செம்மணி பகுதியில் மிதிவெடி, கைக்குண்டு ஆகியன குறித்த சந்தேக நபரால் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மீது பிறிதொரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கிலும் சந்தேக நபருக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை காலை ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பில் வன்முறைக் கும்பலைச் சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் அவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதவான் நளினி சுதாகரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர், ஒருவரை வெட்டி படுகாயம் ஏற்படுத்தியுள்ளார்.

அத்தோடு அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் செம்மணி பகுதியில் கைக்குண்டு மற்றும் ஜொனி ரக மிதிவெடி என்பனவும் மறைத்து வைத்திருந்தமை காண்பிக்கப்பட்டுள்ளது.

அவை நீதிமன்றின் உத்தரவில் மீட்கப்படவேண்டும் என பொலிஸார் நீதிமன்றில் மன்றுரைத்தனர். சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், பிணை விண்ணப்பத்தை முன்வைத்தனர்.

இருதரப்பு விண்ணப்பத்தையும் ஆராய்ந்த மன்று, சந்தேக நபரை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் மறைத்து வைக்கப்பட்ட மிதிவெடி, கைக் குண்டுகளை மீட்டு நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் மறைத்து வைக்கப்பட்ட கைக்குண்டு, மிதிவெடி என்பன விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் நேற்றுக்காலை மீட்கப்பட்டன.

இதேவேளை, குறித்த சந்தேக நபருக்கு எதிராக தற்போது 11 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4-8)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக மனிதாபிமான ரீதியில் ஒன்றிணையுங்கள்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக மனிதாபிமான ரீதியில் மனிதவுரிமை விவகாரமாக அணுகக்கூடிய உரிய நடைமுறைகளைப் பின்பற்றி இணைந்து செயலாற்ற முன்வர வேண்டும் என குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அண்மையில் ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் "தமிழர்" என்ற ஒரே காரணத்திற்காக தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், நெருக்கடிகள் மற்றும் அடையாளச்சிக்கல்கள், இன அழிப்புக்கள் இங்கு வரலாறாக உள்ளது. இதன் தாக்கம், வலிகள், இழப்புக்கள் இன்றைய தலைமுறையையும் அடுத்த தலைமுறையையும் இன்னும் பாதித்துக் கொண்டுதான் உள்ளது.

குறிப்பாக இதுவரையான "போரும் வாழ்வும்" ஏற்படுத்திய தாக்கம்,அழிவுகள் யாவற்றிற்கும் இன்னும் நியாயமான தீர்வு, சமூகப் பாதுகாப்பு, சமூக சமத்துவம், உறுதிப்படவில்லை. தமிழ் மக்களினது வாழ்வியல் தெரிவிற்கான கூட்டுரிமைக்கான சமூக ஜனநாயகம், சமூக நீதி, சமூக சமத்துவம் கிடைப்பதற்கான, அதனை உறுதிப்படுத்துவதற்கான 'அரசியல் பண்பாடு' இன்னும் உருவாக்கம் பெறவில்லை.

இந்நிலையில் போர்க் காலத்தின் போது கைது செய்யப்பட்டு 15 முதல் 25 வருடங்களாக சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பில் உடனடியாக அக்கறைப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கைதிகள் விடுதலை குறித்து இந்தத் தருணத்தில் மீண்டும் மீண்டும் பேசு பொருளாக்க வேண்டிய அவசியப்பாடு உருவாகியுள்ளது.

பாராளுமன்றத்தில் தற்போது பேசுபொருளாக விவாதிக்கப்படும் விடயம் குறித்தும், அதனுடன் தமிழ்க்கைதிகள் விவாகாரத்தையும் தொடர்புபடுத்தி சிந்திக்க வேண்டியுள்ளது. பொதுவெளியில் உரையாடல் களங்களை அகலித்து திறந்து விடவேண்டியுள்ளது.

• மரணதண்டனை விதிக்கப்பட்ட கொலைக் குற்றவாளி பிரேமலால் ஜெயசேகரவுக்கு மக்கள் ஆணைக்கு மதிப்பளிப்பதாக தெரிவித்து அரசியலமைப்புக்கு அப்பால் சென்று பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

• இதேபோன்று கொலைக் குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் இருந்துவரும் முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றம் சென்று வர அனுமதி பெற்றுள்ளார்.

இந்த இருவரும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் சிறையில் இருந்தவாறே மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. தற்போது கொலைக் குற்றம் சாட்டப்பட்டோர் மக்கள் பிரதிநிதிகளாக பகிரங்கமாக பாராளுமன்றம் செல்ல முடியும் எனும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் சந்தேகத்தின் பெயரில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் எவரும் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.

அதேநேரம் தேர்தல் சட்டவிதிக்கமைய சிறையில் உள்ள கைதிகள் வாக்களிக்க முடியாது. ஆனால் தேர்தலில் வேட்பாளராக போட்டியிட முடியும். இவர்கள் வெற்றிபெற்றால் பாராளுமன்றம் செல்லவும் முடியும் என்பதனை சமகாலம் நிரூபித்துள்ளது.

• தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 90 அரசியல் கைதிகளுள் வயோதிபர்கள், இளைஞர்கள், குடும்பஸ்தர்கள், மாற்றுத் திறனாளிகள் எனப்பலவகையினரும் அடங்குகின்றனர். மேலும் 15 முதல் 25 வருடங்களாக சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் அநேகமானவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

• இலங்கையின் சிறைக் கட்டடத் தொகுதியில் பன்னிரண்டாயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்திருக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. ஆனால் இங்கு தற்போது இருபத்தொன்பதாயிரத்து ஐந்நூறு கைதிகளை அடைத்து வைத்துக் கொண்டு சமூக இடைவெளி பற்றிப் பேசப்படுகின்றது.

• நீதிமன்ற விளக்கத் தவணைகளுக்கு அழைக்கப்படும் வழக்குகள் விசாரணைகள் எதுவுமின்றி, மூன்று முதல் ஆறு மாதகாலம் என மிக நீண்ட தவணை திகதியிடப்பட்டு வருகிறது. இதனால் கைதிகள் மனச் சஞ்சலத்திற்கும் பலவித நெருக்கடிகளுக்கும் உள்ளாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

• கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி "தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு ஆணைக்குழு ஒன்றை அமைத்து மூன்று மாதங்களுக்குள் உகந்த தீர்வினை எட்டுவதாகத் தெரிவித்தார். ஆனால் இது தொடர்பில் எந்த உருப்படியான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

• அதேபோன்று தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியிடம் கேட்டபோது "பன்னிரண்டாயிரம் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வளித்து விடுதலை செய்த எமக்கு மிகச் சொற்ப அளவிலானஅரசியல் கைதிகளை விடுதலை செய்வதில் என்ன பிரச்சினை இருக்கப் போகிறது.?" என்பதில் வினா தொடுத்துள்ளார். இங்கு பிரச்சினை ஜனாதிபதிக்கு அல்ல. கைதிகளாக சிறைகளில் வாழ்க்கையைத் தொலைத்து வாழும் கைதிகளுக்குத் தான் இது ஒரு பிரச்சினை. இவர்கள் சார்ந்த குடும்பத்தினருக்கும் இது ஒரு பிரச்சினை.

• குற்றச்சாட்டுக்களுக்கான தண்டனைக்கும் மேலதிகமான காலத்தை விளக்கமறியலில் கழித்துவிட்ட அரசியல் கைதிகளின் விடயத்தில் இனி மேலும் 'விசேட நீதிமன்றம்' அமைத்து விசாரணையை துரிதப்படுத்துகிறோம் என்று காலம் தாழ்த்தாது விசேட அரசியல் தீர்மானமொன்றை எடுத்து மனிதாபிமான ரீதியில் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும். தமிழ்த் தலைமைகள் அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் குறித்து இன்னும் உருப்படியாக நடைமுறை சாத்தியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உந்துதலும், சிந்தனையும், திட்டமிடலும் இல்லாதவர்களாக உள்ளனர்.

ஒவ்வொருவருக்கும் உயிர் வாழ்க்கைச் சுதந்திரம், பாதுகாப்புரிமை உண்டு. ஆனால் அரசியல் சிறைக்கைதியாக தொடர்ந்து வைத்திருத்தல் என்பதனூடாக மனித உரிமைக்கு மாறாக இயங்கும் அரசாக இலங்கை தன்னைக் காட்டிக் கொள்கிறது. இன்னொருபுறம் தமிழ் அரசியல் கைதிகள் என்று தனியாக நடத்தும் அணுகும் பாரபட்சக் கொள்கை சார்ந்தும் இயங்கும் அரசாகவும் உள்ளது.

இந்தப்போக்குகளில் இருந்து இலங்கை அரசு முற்றிலும் தம்மை விடுவித்து தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தில் மனிதாபிமானத்துடன் இயங்க வேண்டும்

இன்று தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாவரும் கூட்டாக இணைந்து செயற்பட வேண்டியுள்ளது. இது இன்றைய காலத்தின் அவசர தேவையாகின்றது.

இதனால் மனிதவுரிமைச் செயற்பாட்டாளர்கள், தமிழ்த் தலைமைகள் மற்றும் தமிழ்ச் சட்டத்தரணிகள் யாவரும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஒன்றிணைந்து உழைக்க முன்வரவேண்டும். தொடர்ந்து அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. (ஜ-4)


### வாடகைக்கு

வெள்ளவத்தையில் Harmes Avenue யில் குறைந்த விலையில் நாள், கிழமை, மாத வாடகைக்கு.

2,3,6 Bed Rooms சுபகாரியங்களுக்கும் கொடுக்கப்படும். MARKET, Station அருகில்.

தொடர்பு:- (C-1033)

SATHIYA - 077 766 7511, 011 250 3552.


# ஆறு பொறியியல் பீடங்களுக்கு மேலதிக மாணவர்கள் இணைப்பு

(கொழும்பு)

கடந்த 2019 ஆம் ஆண்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக உள்ளீர்ப்பில் பிரதான 6 பொறியியல் பீடங்களுக்கு மேலதிகமாக 405 மாணவர்களை உள்ளீர்க்க இணக்கம் காணப்பட்டது.

உயர்கல்வி அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

பெரதெனியா, ஸ்ரீஜயவர்தனபுர, யாழ்ப்பாணம், ருஹுணு, மொரட்டுவை, தென்கிழக்கு பல்கலைக் கழகங்களில் இந்த 405 மாணவர்களும் இணைக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அமைச்சர் என்ற வகையில், பல்கலைக்கழகங்களின் நிர்வாகத்தில் தலையிடும் எண்ணம் எனக்கோ, எமது அரசாங்கத்திற்கோ இல்லை.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள, சுபீட்சத்தின் நோக்கு பிரகடனத்திற்கு அமையவே செயற்பட விரும்புகிறோம். அதன் இலக்குகளை அடைவதே எமது நோக்கம்.

குறிப்பாக பல்கலைக்கழக கல்வி மற்றும் வேலை வாய்ப்பு இடையில் காணப்படும் பொருந்தாத தன்மைக்கு தீர்வு காண வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக, தொழில் சார்ந்த பாட நெறியான பொறியியலில் இவ்வாண்டு, மேலும் 405 மாணவர்களை இணைக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

(ஜ-2-6)


### வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. தோட்டம் சம்பந்தமாக சகல வேலைகளும் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். குடும்பமாக தங்க வசதி உண்டு. தோட்டத்தில் தனியாக வேலை செய்து பழக்கப்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

ஆரம்பச் சம்பளம்:- 30,000.00 (C-253)

T.P:- +94 77 168 1697, +94 77 113 3667

### சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Center (C-1034)

076 568 4346

Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

STUDENT VISA Study, Work & Settle

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம் - Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

VISIT VISA பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

REFUSED VISA உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.



Sponsor Letters

Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

flex Institute Step Towards a Bright Future (C-1036)

Hotline: 0777-761 346

6A, Parakumba Place, Colombo 06.

E-mail: flexinstitute04@gmail.com

www.flexinstitute.lk

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்

10 வருட கால நம்பிக்கையான சேவை

FLEX Graphic

# அரசு சர்வதிகார நோக்கில் செயற்பட்டால் சர்வதேச உதவிகள் நிறுத்தப்படலாம்

## எச்சரிக்கின்றார் ஹர்ஷன



**(கொழும்பு)**

**சர்வதேசத்திலிருந்து நாட்டிற்கு கிடைக்கப்பெறும் நலன்கள் நிறுத்தப்பட வாய்ப்புள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருணா எச்சரிக்கை விடுத்தார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போது அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தை கொண்டு வந்து ஒருவர் இறக்கும் வரையில் அவரே நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிப்பதற்கான ஏற்பாடுகளை கொண்டு வந்திருந்தனர்.

தற்போது 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாகவும் அதனையே செய்ய முயற்சிக்கின்றார்கள். இந்நிலையில் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தேர்தலை நடத்துவதற்கான உரிமையையும் நீக்குவார்களா? என்பதை கூற முடியாது.

இந்நிலையில் தற்போது ஆளும் தரப்பினரே ஆளும் தரப்பு உறுப்பினர்களை அழிக்கும் செயற்பாடுகளே முன்னெடுத்து வருகின்றனர். அதன் காரணமாகவே பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை அவர்களே நீக்க முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் அரசியல் தலையீடுகள் இன்றி எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று நம்பிக்கை கொள்ள முடியுமா? 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற மோசடிகளுக்கே இன்னும் நியாயம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

இந்நிலையில் மீண்டும் அவ்வாறான மோசடிகள் இடம்பெற்றால் எவ்வாறு நியாயத்தைப் பெற்றுக் கொள்வது.

இரட்டைக் குடியுரிமை உடைய ஒருவர் இந்நாட்டின் ஆட்சி அதிகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புவர் என்றால் அவரால் ஏன் ஒரு குடியுரிமையை விட்டுக் கொடுக்க முடியாது.

இவ்வாறு இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒருவர் ஆட்சி அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டு நாட்டிலுள்ள சொத்துக்களை கொள்ளையிட்டு சென்றால் அவர் தொடர்பில் எவ்வாறு நடவடிக்கை எடுப்பது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை பேரவையிலிருந்து விலகுவது தொடர்பில் ஆளும்தரப்பினர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இதனால் சர்வதேசத்திலிருந்து நாட்டிற்கு கிடைக்கப்பெறும் நலன்கள் நிறுத்தப்பட வாய்ப்புள்ளது.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆட்சியின் போது இவர்கள் விட்ட பிழையை தற்போது திருத்திக் கொள்வார்கள் என்று எதிர் பார்த்தாலும் ஆளும் தரப்பினரின் செயற்பாடுகளைப் பார்க்கும் போது அவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

இந்நிலையில் ஜனநாயக கொள்கைகளுக்கு யாராவது பாதிப்பை ஏற்படுத்த முயற்சித்தால் அது தொடர்பில் ஏனையோர் கேள்வி எழுப்புவது வழமையே.

அதற்கமைய அரசாங்கம் சர்வாதிகார ஆட்சியை முன்னெடுக்கும் நோக்கில் செயற்பட்டால் சர்வதேச நாடுகளிடமிருந்து நாட்டுக்கு ஏற்படும் எதிர்ப்புகளை தடுக்க முடியாது.

இதேவேளை மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கப் பெற்றுள்ளது என்பதற்காக ஒரு குடும்பத்தின் நலனை கருத்திற் கொண்டு அரசியலமைப்பு திருத்தத்தை செய்வதற்கு முன்னர், தற்போது மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பாரிய வாழ்வாதாரச் சுமையை குறைப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (ஜ-2)

# மனித இனத்தின் மற்றுமொரு யுகம் பலாங்கொடையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

பலாங்கொடையில் மனித இனத்தின் மற்றுமொரு யுகம் தொடர்பான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர் தெரிவித்தார்.

பலாங்கொடை, கிரிந்திகல பிரதேசத்தில் தனியார் காணி ஒன்றில் 50 அடி ஆழத்தில் மேற்கொள்ளப்பட்ட சுரங்க அகழ்வின் போது சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் இவ்வாறான பல இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 50 அடிக்கு கீழ் கண்டு பிடிக்கப்பட்ட இந்த புதைபடிவ துண்டுகள் மூலம் ப்லய்ஸ்டோசின யுகம் அல்லது சுமார் 250,000 ஆண்டுகளுக்கு முன்பு பூமியின் பரிணாமத்தை கண்டறிய முடியும்.

இதன்மூலம் 121 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பொலோசின யுகம் அல்லது நவீன மனிதனின் தோற்றம் குறித்து பல விடயங்களை ஆய்வு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

(ஹற்றன்)

நாடளாவிய ரீதியில் நிலவும் சீரற்ற வானிலையால் 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் களுத்துறை , கேகாலை , நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

அத்தோடு நேற்று முன்தினம் குறித்த மாவட்டங்களில் அதிகளவிலான மழை வீழ்ச்சி பதிவாகிய காரணத்தினாலேயே இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# சுற்றிவளைப்பில் 560 பேர் கைது

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நடத்தப்பட்ட விசேட தேடுதலில் போதைப்பொருளுடன் 560 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் ஆலோசனைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட இந்த தேடுதலின் போது குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 150 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 120 | 160 |
| தக்காளி | 200 | 120 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 110 | 80 |
| கோவா | 130 | 150 | 140 | 120 |
| கரட் | 100 | 200 | 200 | 200 |
| பூசணி | 120 | 100 | 120 | 120 |
| புடோல் | 100 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 120 | 130 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 160 | 180 |
| பெரிய வெங்காயம் | 180 | 140 | 180 | 150 |
| பாகற்காய் | 400 | 200 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 | 140 |
| பயற்றங்காய் | 250 | 180 | 200 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 90 | 100 |
| கறிமிளகாய் | 300 | 250 | 260 | 320 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 250 | 200 |
| போஞ்சி | 350 | 250 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 60 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 250 | 200 | 200 | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 30 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | -- | 50 | 80 |

## இராசிபலன்

20.09.2020
புரட்டாதி 04, ஞாயிற்றுக்கிழமை
திருதியை முற்பகல் 10.19 மணிவரை
சித்திரை காலை 6.15 மணிவரை
சுவாதி பின்னிரவு 4.38 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சந்திராஷ்டமம்- ரேவதி
சதுர்த்தி விரதம்

வளவன்

**மேஷம்**: உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பொன்னான நாள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**: குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்**: பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்**: புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்**: சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவு பகை பாராமல் உதவும் நாள், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி**: குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்**: உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர் நலன் கருதி சற்று அலைய நேரலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**விருச்சிகம்**: பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள், உடல்நலனில் கவனம் தேவை.

**தனுசு**: தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**மகரம்**: எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்**: நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் நாள்.

**மீனம்**: காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் சிறு சிறு வாக்குவாதம் ஏற்பட்டு விலகும், வரவும் செலவும் சமமாகும் நாள், கௌரவக் குறைவான நாள்.

எதைத்தேடி நாம் அலைகிறோமோ அது நமக்குள்ளே இருக்கிறது.

# மூன்று கடைகள் தீக்கிரை



(கொழும்பு)


நுவரெலியா - இராகலை ஸ்ரீகதிர்வேலாயுத ஆலயத்திற்கு செல்லும் பிரதான வீதியின் அருகில் அமைந்துள்ள கடைத்தொகுதிகளில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் சில்லறை கடை, கோழி கடை மற்றும் தொடர்பாடல் நிலையம் ஆகிய மூன்று கடைகள் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீ ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் மின்சார ஒழுக்கு காரணமாக இத் தீ ஏற்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

ஏற்பட்ட தீ காரணம் தொடர்பாகவும், சேத விபரங்கள் தொடர்பாகவும் இராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# மண்மேடு சரிந்து விழுந்ததில் வீடுகள், அலுவலகம் சேதம்



(கொட்டக்கலை)

கொட்டகலை, பத்தனை பிரதேசத்தில் மண்மேடொன்று சரிந்து வீழ்ந்ததில் இரண்டு வீடுகளும், தொழிற்சங்க அலுவலகமொன்றும் சேதமடைந்ததாக திம்புள்ள - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

மலையகத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மண்சரிவு அனர்த்தங்களும் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு பத்தனை நகரிலும் மண்சரிவு அனர்த்தம் ஏற்பட்டது.

வீடுகள் மற்றும் தொழிற்சங்க அலுவலகத்துக்கு பின்புறத்திலேயே மண்மேடு சரிந்து விழுந்துள்ளது. இதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. எனினும், இரு வீடுகளில் இருந்த எட்டு பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். (ஜ-2)

# 20 ஆவது திருத்தம் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்கப்படும்



(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக விரைவில் கூடி ஆராய்ந்து முடிவு அறிவிக்கப்படும் என தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

20ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக சமூகத்தில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. மேற்படி சட்டமூலத்திலுள்ள உள்ளடக்கங்கள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம்.

20ஆவது திருத்தச் சட்டமூலத்திலுள்ள சில சரத்துக்கள் தொடர்பாக அரசாங்கத்துக்குள்ளேயே ஒருமித்த நிலைப்பாடு இல்லை. ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி திருத்தப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்படும் என்றார்கள்.


ஆனால், பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போதே திருத்தப்படும் என தற்போது அறிவித்துள்ளனர். எனவே, எவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது எமக்குத் தெரியாது.

பாராளுமன்றத்தில் சட்டமூலம் முன்வைக்கப்பட்ட பின்னர் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் உயர்பீடம் கூடி ஆராய்ந்து 20 குறித்த நிலைப்பாட்டை அறிவிக்கும். ஜனநாயகத்துக்கும், நாட்டுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்பதே பொதுவான கருத்தாகும். அதனையே நாமும் விரும்புகின்றோம்" எனத் தெரிவித்தார். (ஜ-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பொறுப்பேற்றால்

# பூஜிதவுக்கு சலுகை வழங்குவதாக கூறிய மைத்திரி

## முன்னாள் பாதுகாப்புச் செயலர் சாட்சியம்



(கொழும்பு)

**பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு பதவியில் இருந்து விலகினால் சலுகைகளை வழங்குவதாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்ததாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.**

நேற்று முன்தினம் மூன்றாவது நாளாகவும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கினார்.

இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஓய்வூதியத்துடன் பூஜித ஜயசுந்தர பணியாற்ற விரும்பும் எந்த நாட்டிலும் தூதுவராக பணியாற்ற ஒரு பதவி என்ற சலுகை வழங்கப்படும் என மைத்திரி தெரிவித்திருந்தார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த அறிவிப்பின் பின்னர், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர இது தொடர்பாக தனது ஆலோசனையைப் பெற வந்ததாகவும் சுட்டிக் காட்டினார்.

இருப்பினும் தன்னால் முன்னாள் பொலிஸ்மா அதிபரின் விடயம் ஒரு தீவிரமான பிரச்சினை என்பதால் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் விவாதிக்குமாறு தான் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கான காரணங்கள் மற்றும் பின்னணியை ஆராய்ந்த உயர் நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொட தலைமையிலான ஆணைக்குழுவில் இருந்து விடுவிக்க முடியும் என்றும் முன்னாள் ஜனாதிபதி பூஜித ஜயசுந்தரவுக்கு தெரிவித்திருந்தார் எனவும் தெரிவித்தார். (ஜ-2)

# ஒரு லட்சம் மெற்றிக்தொன் அரிசி இறக்குமதி செய்வதற்கு தீர்மானம்

## கையிருப்பை தக்க வைக்கவே என்கிறார் பந்துல

(கொழும்பு)

அமைச்சரவை அனுமதியின் ஊடாக ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கும், விலை அதிகரிப்பை தடுப்பதற்கும் ஏற்ற வகையில் போதிய அரிசி இருப்பை தக்க வைத்துக்கொள்வதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுடன்



நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

எனினும், உள்நாட்டு அரிசி ஆலை உரிமையாளர்கள் தம்மிடம் இருப்பில் உள்ள அரிசியை சந்தைகளுக்கு பெற்றுக் கொடுக்கும் பட்சத்தில், இவ்வாறு அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்காலத்தில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படுவதால், நுகர்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தடுக்கும் வகையில் இம்முறை ஒரு இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரிசி விலையை அதிகரிக்க ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

# சட்டவிரோத ஆட்கடத்தலை தடுக்க அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோத ஆட் கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக அலி சப்ரி தெரிவித்தார்.



புலம்பெயர்ந்தோர் தொடர்பான சர்வதேச அமைப்பின் இலங்கை பிரதிநிதி சரத் டாஸ் மற்றும் நீதி அமைச்சர் அலிசப்ரி ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது நாட்டில் புலம்பெயர் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சட்டவிரோதமாக இடம்பெறும் ஆட் கடத்தல்களை தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அதற்காக தற்போதுள்ள சட்ட முறைமைகள் தொடர்பில் இதன்போது கருத்துகள் பரிமாறப்பட்டுள்ளன.

அத்துடன், ஆட்கடத்தல் காரணமாக ஏற்பட்டிருக்கும் மோசமான விளைவுகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுப்பதற்கு அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக முன்னெடுத்து வருவதாக நீதியமைச்சர் தெரிவித்தார். (ஜ-4)



**கொவிட்-19 நோய்த்தொற்று காலத்தில் மிகவும் ஆபத்தான சூழ்நிலையிலும் தமது உயிரை பணயம் வைத்து செயலாற்றிய பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அடையாள ரீதியாக உத்தியோக பூர்வ மோட்டார் சைக்கிள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.**

# சீரற்ற வானிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரிப்பு

(ஹற்றன்)

மலையகப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சென். கிளயார் மற்றும் டெவோன்



நீர்வீழ்ச்சிகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த நீர்த்தேக்கங்களை அண்மித்து வாழும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ஜ-4)

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 17.09.2020 - 16.10.2020

## கூடுதல் கவனம் தேவை



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் தன ஸ்தானத்தில் தனலாபாதிபதி புதனோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். பஞ்சம ஸ்தானத்தில் குரு வீற்றிருந்து உங்கள் இராசியைப் பார்க்கின்றார். யோகம் தரும் செவ்வாய் வக்கிரம் பெற்று இருந்தாலும் மேஷத்தில் சொந்த வீட்டில் சஞ்சரிக்கின்றார். 'குருமங்கள யோகம்', 'குரு சந்திர யோகம்', 'புத ஆதித்ய யோகம்' ஆகிய மூன்று யோகங்களும் இருப்பதால் இந்த மாதம் ராஜயோகத்தை வழங்கும் மாதமாக அமையப் போகின்றது.

குருவின் பார்வை உங்கள் இராசியை மட்டுமல்லாமல் 9, 11 ஆகிய இடங்களையும் பார்ப்பதால் பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சலுகைகளைப் பெறுவீர்கள்.

10 ஆம் இடத்தில் ராகுவும், 4 ஆம் இடத்தில் கேதுவும் இருக்கிறார்கள். எனவே புதிய தொழில் தொடங்கும் திட்டத்தை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வு பெற்று வெளியில் வந்து, நண்பர்களுடன் இணைந்து தொழில் தொடங்குவீர்கள். கேதுவின் பலத்தால் மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாததாக அமையும். புதனின் வக்கிர காலங்களில் மட்டும் கூடுதல் கவனம் தேவை.

### துலாம் புதனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 21 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 3ஆம் இடத்தில் சஞ்சரிப்பதால் வெற்றிகள் ஸ்தானம் பலமடைகின்றது. எனவே தடைப்பட்ட சில காரியங்கள் இப்பொழுது நடைபெறும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள்.

### சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 28ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். சகாய




ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன், உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம்சிறப்பாக இருக்கும். பெண்வழிப்பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்டசலுகைகள்கிடைக்கும். வீடுவாங்க, வாகனம் வாங்க எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

### புதனின் வக்கிர இயக்கம்

செப்டெம்பர் 30 ஆம் திகதி துலாம் இராசியிலும், ஒக்டோபர் 8 ஆம் திகதி மீண்டும் கன்னி இராசியிலும் புதன் வக்கிர இயக்கத்தில் வருகின்றார். உடன்பிறப்புகளும், உடன்இருப்பவர்களும் ஒத்துழைப்பு தருவார்கள். வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்த முயற்சி வெற்றி தரும். ஆயினும் உள்நாட்டிலேயே இருப்பது தான் இக்காலத்தில் உகந்தது. புதிய வாகனம் வாங்கும் யோகம் சிலருக்கு உண்டு. இம்மாதம் ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவபெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. திருவாசகம் படித்து வழிபடுவதன் மூலம் பொருள் வளம் பெருகும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். தளராத முயற்சியால் தடைகளை அகற்றிக் கொள்வீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதியும், கல்யாணம் சம்பந்தமாகவும் எடுத்த முயற்சிகள் வெற்றி- பெறும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த ஊதிய உயர்வும், உத்தியோக உயர்வும் கிடைக்கும். குலதெய்வ வழிபாடும், முருகப்பெருமான் வழிபாடும் குடும்ப முன்னேற்றத்திற்கு வித்திடும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்!



சார்வரி வருடம் புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் புதன் உச்சம் பெற்றிருக்கின்றார். அதேநேரம் விரயாதிபதி சூரியன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். லாபாதிபதி சந்திரன் விரய ஸ்தானத்தில் இருக்கின்றார். சுபச்செலவுகளை மேற்கொள்வதன்மூலம்வீண் விரயங்களிலிருந்து விடுபட இயலும். அர்த்தாஷ்டம குரு, அர்த்தாஷ்டம சனி ஆகியவற்றின் ஆதிக்கம் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கின்றது. சில நேரங்களில் இனம்புரியாத கவலைகள் அதிகரிக்கும். தாயின் உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

அஷ்டமத்தில் செவ்வாய் வக்கிரம் பெற்றிருப்பதால், உடன்பிறப்புகளில் ஒருசிலர் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். சொத்துப் பிரச்சினை காரணமாக உங்களை விட்டுப் பிரிந்து சென்ற சொந்தங்கள், இப்பொழுது மீண்டும் வந்திணையலாம். பொதுவாக அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்க காலத்தில் எதையும் உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வதே நல்லது. குருவின் பார்வை பலத்தால் 8, 10, 12 ஆகிய இடங்கள் புனிதமடைவதால் மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மகத்தான செல்வாக்கு மிக்க வர்கள் மறைமுகமாக உங்களுக்கு உதவிகளைச் செய்வர்.

### துலாம் புதனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 21 ஆம் திகதி, துலாம் இராசிக்கு புதன் செல்கின்றார். உங்கள் இராசிநாதனாகவும், 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் தன ஸ்தானத்திற்கு வருவதால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். தொழில் தொடங்க வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு வெளியில் வரலாம். பிறகு புதிய கூட்டாளிகளுடன் இணைந்து செயற்படலாம். மனக்குழப்பங்கள் அகலும்.

### சிம்ம சுக்கிரனின் சஞ்சாரம்

செப்டெம்பர் 28 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி சுக்கிரன். எனவே இக்காலம் உங்களுக்கு ஒரு இனிய காலமாகவே அமையும். அசுர குரு 12இல் வரும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். ஆதாயம் தரும் தகவல்கள் வரும். இடமாற்றங்கள், வீடு




மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் போன்றவை தானாகவே வந்து சேரும். சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை அறிந்துகொண்டு, கற்றுணர்ந்த வல்லுநர்களிடம் வியாபார நுணுக்கங்களை அறிந்துகொண்டு செயற்பட்டால் இழப்புகளில் இருந்து தப்பிக்க இயலும்.

### புதனின் வக்கிர இயக்கம்

செப்டெம்பர் 30 ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிரம் பெறுகின்றார். ஒக்டோபர் 8ஆம் திகதி மீண்டும் கன்னி இராசிக்கு வக்கிர இயக்கத்தில் புதன் வருகின்றார். இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. விரயங்கள் அளவிற்கு அதிகமாக இருக்கும். வீடு மாற்றங்கள் பற்றிச் சிந்திப்பீர்கள். ஆரோக்கியத் தொல்லைகள் அடிக்கடி அதிகரிக்கும். தொழிலில் பங்குதாரர்கள் தொல்லை காணப்படும். தொகை வந்த மறுநிமிடமே செலவாகும்.

இம்மாதம் புதன்கிழமை தோறும் இல்லத்து பூஜையறையில் அனுமன் படம் வைத்து விளக்கேற்றி அனுமன் கவசம் பாடி வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் ஆரோக்கியத் தொல்லைகளைச் சந்திக்க கூடிய வாய்ப்பு உண்டு. குடும்பச்சுமை கூடுதலாகவே இருக்கும். கணவன்-மனைவி ஒற்றுமையில் குறுக்கீடுகள் அதிகரிக்கும். சகோதர வர்க்கத்தினரால் சில பிரச்சினைகள் தலைதூக்கும். பிள்ளைகளுக்கான சுப காரியங்களை பேசி முடித்தாலும், கொஞ்சம் தாமதம் ஏற்படத்தான் செய்யும். குரு கவசம் பாடி இல்லத்து பூஜையறையில் குருவை வழிபடுவது நல்லது.

(தொடரும்...)

# 305 கிலோ மஞ்சள் கட்டிகளுடன் மன்னாரில் ஒருவர் கைது



(மன்னார்)


மன்னார் பிரதான பாலத்திற்கு அருகாமையில் உள்ள கடல் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு படகு ஒன்றினுள் வலைகளுக்குள் மறைத்துக் கொண்டு வரப்பட்ட ஒரு தொகுதி மஞ்சள் கட்டிகளை மன்னார் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதோடு, மன்னார் எழுத்தூர் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டிகள் சுமார் 305 கிலோ 400 கிராம் எடை கொண்டது என மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, கைது செய்யப்பட்ட நபரை தனிமைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸ் ஊழல் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (2-4-285)

# வெடிபொருள் வைத்திருந்த இருவர் கைது



(முறிகண்டி)

வெடிபொருட்கள் வைத்திருந்த சந்தேகத்தில் நேற்று முன்தினம் இருவர் பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பளை பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலிற்கு அமைய கிளாலி பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது இவை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி ஓரத்தில் குறித்த சந்தேக நபர்கள் இருவரும் சந்தேகத்திற்கிடமான செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸார் சோதனையிட முற்பட்டனர். இதன்போது இருவரும் தப்பிச் செல்ல முற்பட்ட வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு குறித்த இடத்தில் காணப்பட்ட பையொன்றிலிருந்து .வெடிபொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட இருவர் மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பளை பொலிஸார் தெரிவித்தனர். (4-100)

# அனுமதி இல்லாத விடுதிகளுக்கு சீல் நகரசபையில் தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் அனுமதி பெறாது நுணாவில் பகுதியில் இயங்கி வருகின்ற விடுதி ஒன்றினை சீல் வைத்து மூடுவதற்கு சாவகச்சேரி நகர சபை தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சாவகச்சேரி நகரசபையினர் கடந்த மாதம் நகரசபை எல்லைக்குட்பட்ட சகல விடுதிகளையும் 14 தினங்களுக்குள் நகரசபையில் பதிவினை மேற்கொள்ள வேண்டும் எனவும் மீறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்தல் ஒன்றினை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் 14தினங்கள் கடந்து இதுவரை நகரசபையில் அனுமதி பெறாத காரணத்தால் நுணாவில் பகுதியில் உள்ள விடுதி ஒன்றினை மூடுவதற்கு தீர்மானித்துள்ளனர். சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள விடுதிகளில் கலாசார சீர்கேடு இடம்பெற்று வருவதாக சபை உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடுத்து நகரசபையினர் சகல விடுதிகளையும் பதிவு செய்து அவற்றைக் கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-4-30)

# உரக் களஞ்சியத் திறப்பு விழா

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன் புலோ கமக்கார அமைப்பிற்கான அலுவலகமும் அதனோடு இணைந்த உரக் களஞ்சியமும் மக்கள் மயப்படுத்தும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திக் குழுவின் தலைவரும், பாராளுமன்ற பிரதிக் குழுக்களின் தலைவருமான அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்வார். (2-4-30)

# சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்தவர் கைது




(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அரச மதுபானம் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என மது ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி டீ.எம். சதுரங்க தெரிவித்தார். (2-4-316)

# 12 குட்டிகளுடன் தாய் முதலையும் கிணற்றிலிருந்து மீட்பு



(நெளுக்குளம்)

வறண்ட வானிலை காரணமாக நீர்நிலைகளை தேடியலைந்த பன்னிரெண்டு குட்டி முதலைகளும், தாய் முதலையும் வவுனியா குருந்துபிட்டி பகுதியில் உள்ள ஒரு கிணற்றில் இருந்து மீட்கப்பட்டு காட்டுப் பகுதிக்குள் விடுவிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

நேற்று காலை காணி உரிமையாளரினால் தோட்டத்திலுள்ள கிணற்றை சுத்தம் செய்வதற்காக சென்ற போது ஒரு முதலை இருப்பதை கண்டார். பின்னர் அப்பகுதி மக்களின் உதவியுடன் முதலை மீட்கப்பட்டதுடன் மேலும் 12 குட்டிகளையும் கிணற்றில் இருந்து மீட்டனர். மீட்கப்பட்ட முதலைகள் அப் பகுதி மக்களால் பாதுகாப்பாக காட்டுப் பகுதியில் விடப்பட்டது. (2-4-299)



வவுனியா மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்ட சேவையில் ஈடுபடும் இ.போ.ச.மற்றும் தனியார் பேருந்து சாரதிகள், நடத்துநர்கள் 60 பேருக்கு வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்றையதினம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. (படங்கள்-குருமன்காடு செய்தியாளர்)



வயாவிளான் மத்திய கல்லூரியின் 75 ஆவது ஆண்டு பவள விழாவை முன்னிட்டு 75 தென்னை மரங்கள் நாட்டும் திட்டத்தின் முதல் கட்ட நிகழ்வு கல்லூரி வளாகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்:- செ. ரவிசாந்)



வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்மன் ஆலய தேர் திருவிழா நேற்று நடைபெற்றது. பெருந்திரளான அடியார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் . (படம்-கரணவாய் செய்தியாளர்)

மனிதன், தன் உரிமைக்காக, இன்னொரு மனிதனிடம்தான் போராட வேண்டியிருக்கிறது.
– வி.எஸ். காண்டேகர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் ஆதங்கத்தை அடையாளப்படுத்துகின்ற கடிதம்

தியாகி திலீபனின் நினைவேந்தலுக்கு நீதிமன்றம் தடைவிதித்தமை தெரிந்ததே. நீதிமன்றத்தின் தீர்ப்புகள், உத்தரவுகள் விமர்சனத்துக்குரியவை அல்ல என்ற வகையில் மேற்படி விடயத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவினதும் பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷவினதும் கவனத்துக்குக் கொண்டுவருவதென தமிழ் அரசியல் கட்சிகள் கூட்டாக முடிவு செய்துள்ளன.

இதன் பிரகாரம் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

இவ்வாறு அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மட்டுமன்றி சிங்கள மக்களும் கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில் இக்கடிதம் வித்தியாசமானது. உலகில் எந்தவொரு மக்கள் சமூகத்துக்கும் ஏற்பட்டிருக்க முடியாத விடயத்தை உள்ளடக்கியுள்ளது.

இக்கடிதத்தில் தனிநாடு கோரப்படவில்லை. வடக்கு கிழக்கு இணைப்பை அங்கீகரியுங்கள் என்று கேட்கப்படவில்லை.

ஏன்? யுத்தத்தால் எல்லாம் இழந்து நிர்க்கதியாகியுள்ள தமிழ் மக்களின் துயரத்தைப் போக்குங்கள் என்றும் கூறப்படவில்லை. தமிழ் அரசியல் கைதிகளின் அவலத்தை, காணாமல்போனவர்களின் உறவுகள் படும் வேதனையை விபரிக்கவில்லை.

மாறாக உயிரிழந்த எங்கள் உறவுகளை நினைவுகூர அனுமதியுங்கள் என்பதற்காகவே இக்கடிதம் அனுப்பப்படுகிறது.

தன் உறவை, தன் இனம் சார்ந்தவனை, உலகுக்கே தியாகத்தை உணர்த்திய உத்தமனை, போரில் மரணித்த மறவர்களை, உறவுகளை நினைவுகூருவதற்கு அனுமதியுங்கள் எனக் கேட்கின்ற கடிதம் இது.

இவ்வாறானதொரு கடிதம் அனுப்பப்படுகின்ற அளவிலேயே தமிழர்களின் வாழ்வும் இருப்பும் உள்ளதெனில், அதுபற்றி சிங்கள மக்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இந்தச் சிந்தனைக்கு பௌத்த சிங்களப் பேரினவாதம் தடையாக இருந்தால், பரவாயில்லை. ஒரு கணம் நீங்கள் சிறுபான்மையாகவும் தமிழர்கள் ஆளும் பெரும்பான்மையாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

இந்தக் கற்பனை கூட உங்களைக் கடுமையாக வாட்டிக் கொள்ளும். ஏற்க மறுக்கும். பொறுத்துக் கொள்ளுங்கள். இந்தக் கற்பனையில் மரணித்துப் போன உங்கள் உறவுகளை, இனப்பற்றாளர்களை, போரில் உயிர் நீத்தவர்களை நினைவுகூர முடியாது என்று தமிழர் அரசு அறிவித்தால் உங்களுக்கு எப்படியிருக்கும்.

கற்பனையிலும் ஜீரணிக்க முடியாத கொடுமை என்று நீங்கள் சொல்வீர்கள். அந்தக் கொடுமையை தமிழ் மக்கள் தமது நிஜவாழ்வில் சதா அனுபவிக்கின்றனர்.

ஒவ்வொரு நினைவேந்தலுக்கும் தடையும் படையும் என்றால் நாம் என்ன செய்ய முடியும்.

எனவே தமிழ் அரசியல் தலைவர்கள் ஒப்பமிட்டு அனுப்புகின்ற இக்கடிதம் தமிழ் மக்களின் மன ஆதங்கத்தின் அடையாளம்.

ஆகவேண்டியதைச் செய்வதே இன ஒற்றுமைக்கான ஆதாரமாகும்.

### கொரோனாவால் வெளிநாட்டில் சிக்கிய
# 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கி இருந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களை தனிமைப்படுத்துவதற்காக சுற்றுலா விடுதிகளை பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட 18 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளனர்.

இவர்கள் விசா அனுமதி காலம் முடிந்து அமெரிக்காவில் தங்கியிருந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இவர்கள் அமெரிக்காவின் வொஷிங்டனில் இருந்து கென்யாவின் நைரோபி ஊடாக கென்யா நாட்டுக்கு சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

கட்டுநாயக்க வந்த இவர்கள் பிசிஆர் பரிசோதனையின் பின்னர் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

21 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவினர் இவர்களிடம் விசாரணைகளை நடத்தவுள்ளனர். (ம-03)

### தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக
# புலிகள் அமைப்பை தோற்கடிக்க நானே பெரிய பணியை செய்தேன்
### முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பை தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக தோற்கடிக்க தான் மிகப் பெரிய பணியை செய்ததாக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செயற்பட்ட தன்னை பயங்கரவாதிகளுக்கு தகவல் வழங்கியதாக அரசாங்க ஊடகங்கள் வெளியிட்டு வரும் அவதூறான கருத்துக்களை கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பகிரப்படுத்திய கொலை செய்ய வேண்டியவர்களின் பட்டியலில் தனது பெயர் முன்வரிசையில் இருந்தாகவும், ஈழத்திற்கு எதிராக பிரதான எதிரியாக புலிகள் அமைப்பு தன்னை அடையாளம் கண்டிருந்தது எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் அமைப்பு கொழும்பில் குண்டுகளை வெடிக்க செய்த சந்தர்ப்பத்தில் வெளிவிவகார அமைச்சராக அந்த நேரத்தில் தான் செய்த பணியை தற்போதுள்ள போலியான வீரர்கள் மறந்து விட்டனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

புலிகள் அமைப்பை சர்வதேச ரீதியாக தோற்கடிப்பதற்காக அந்த அமைப்புக்கு வரும் வெளிநாட்டு உதவிகளை நிறுத்துவதற்கும் அன்றைய வெளிவிவகார அமைச்சராக அதிகளவான பங்களிப்பை தானே செய்ததாகவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அன்றைய காலக்கட்டத்தில் பிரபாகரன் கரும் புலிகள் தினத்தில் உரையாற்றும் போது தானே முதலாம் எதிரி என அறிவித்தார் எனவும் முன்னாள் அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ம-03)

## 20 ஆவது திருத்தத்திற்கு எதிராக நாடு முழுவதும் கருத்தரங்குகள்
### ஜே.வி.பி. தீர்மானம்

(கொழும்பு)

அரசாங்கம் முன்வைத்துள்ள 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் சம்பந்தமாக மக்களுக்கு விளக்கப்படுத்தும் கருத்தரங்குகளை நடத்த மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் இந்த கருத்தரங்குகள் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படும் என அந்த முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் ஊடாக நாட்டின் ஜனநாயகம் மற்றும் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து விளக்குவது இந்த கருத்தரங்குகளின் நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கம் கொண்டுவர உத்தேசித்துள்ள 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால், மக்களின் ஜனநாயக உரிமைகள் பறிக்கப்படும்என்பதுடன், தனி நபரிடம் அனைத்து அதிகாரங்களும் செல்லும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-03)

# விபத்தில் காயமடைந்த இராணுவ வீரர் மரணம்

(வவுனியா)


கெப்பிற்றிகொல்லாவை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் மரணமடைந்தார்.

கெப்பிற்றிகொல்லாவை பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த குறித்த இராணுவ வீரரை இலகுரக வாகனம் ஒன்று மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் மீட்கப்பட்டு பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளிற்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்தார். சம்பவத்தில் கெப்பிற்றிகொல்லாவை பகுதியை சேர்ந்த அமரசேன வயது 28 என்ற இராணுவ வீரரே மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (ம-03,299)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- அகத்தூய்மையுடையோர்க்கு எல்லாமே தூய்மை. கெட்டழிந்தவர்களுக்கும் நம்பாதவர்களுக்குமோ எதுவுமே தூய்மை இல்லை.
- அகங்காரம் வரும் போது அதற்குப் பின்னே அவமானமும் வந்து சேரும்.
- அக்கிரமக்காரர் எதிர்பார்ப்பது அழிந்துபோகும். நேர்மையானவனோ இடுக்கண்ணிலிருந்து விடுவிக்க படுவான்.
- தன்னிலே அசுத்தம் என்று எதுவுமில்லை. ஆனால் எதையும் அசுத்தம் என்று மதிப்பவனுக்குத் தான் அது அசுத்தமாயிருக்கிறது.
- கடவுள் நமக்கு அச்சம் நிறைந்த ஜீவனைக் கொடுக்கவில்லை. சக்தியும், அன்பும், மனஅமைதியும் உள்ள ஜீவனைத்தான் கொடுத்திருக்கிறார்.
- ஒடுக்கி அமுக்கப்பட்டவர்களுக்குக் கடவுளே அடைக்கலமானவர்.
- பலசாலியை விடக் கோபம் கொள்வதில் மிதமாக இருப்பவனே சிறந்தவன். ராஜ்யங்களைக் கைப்பற்றுபவனை விடத் தன் உணர்ச்சியை அடக்கியாளுபவனே சிறந்தவன்.

# இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள்






இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் ஆண்டு தோறும் அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட தொடரின் 2020ஆம் ஆண்டுக்கான போட்டிகள் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி ஆரம்பமாகியது.

முதற்போட்டியில் கலந்து கொண்ட உடுப்பிட்டி நவஜீவன்ஸ் எதிர் கீரிமலை சிவானந்தா கழகங்களிடையிலான போட்டியில் முதல் இரு சுற்றுக்களையும் நவஜீவன்ஸ் தமதாக்கிய போதும் அடுத்த இரு சுற்றுக்களையும் சிவானந்தா தமதாக்க வெற்றியைத் தீர்மானிப்பதற்கான இறுதிச் சுற்றில் 15:10 என்ற புள்ளியடிப்படையில் நவஜீவன்ஸ் வெற்றி பெற்றது.

2ஆவது தெரிவுப் போட்டியில் புத்தூர் வளர்மதியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதியது. 5 சுற்றுக்களை கொண்ட இப்போட்டியில் தனது அதிரடியான ஆட்டத்தால் 3:0 என்ற அடிப்படையில் வெற்றியை தனதாக்கி காலிறுதிக்குள் நுழைந்தது புத்தூர் வளர்மதி.

அடுத்த போட்டிகள் நாளை திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் இளவாலை மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (4)

# சென்னை அணியின் அபாயகரமான வீரர் டோனி- ரிக்கி பொண்டிங்





சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் அபாயகரமான வீரர் என்றால் அது டோனி தான் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் எம்.எஸ்.டோனி ஓய்வுபெற்றுவிட்டார். எனினும், ஐ.பி.எல். போட்டிகளில் கலந்து கொண்டு தனது திறமையை மீண்டும் நிரூபிக்க காத்திருக்கிறார்.

இந்த நிலையில், அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங், டோனி ஐ.பி.எல். தொடரில் வெற்றிகளை குவிக்க மிகுந்த ஆவலுடன் உள்ளார். சுமார் 438 நாட்களுக்கு பின்னர் டோனி கிரிக்கெட்டில் களம் இறங்கவுள்ளார்.

ஐ.பி.எல். வரவலாற்றில் மிகவும் வெற்றிகரமான அணி என்றால்,அது சென்னை அணி தான் என்றும் சென்னை அணியின் அபாயகரமான வீரர் டோனிஎன்றும்டோனி4 ஆவது இடத்தில் களமிறங்கினால் அதிக ஓட்டங்களை குவிப்பது உறுதி என்றும் பொண்டிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (4)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இங்கிலாந்து கிரிக்கெட் வீரருக்கு கொரோனா



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரரான டேவிட் வில்லிக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது தானும், தனது மனைவியும் 14 நாட்களுக்கு சுய தனிமைப்படுத்தலில் இருக்கப் போவதாக டேவிட் வில்லி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

30 வயதான வில்லி கடந்த மாதம் அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இங்கிலாந்து அணிக்காக கடைசியாக விளையாடினார். வில்லி இதுவரை 49 ஒருநாள் மற்றும் 28 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார். ஐ.பி.எல். தொடரில் 2018 ஆம் ஆண்டு சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடினார். (4)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# நொதேன் பிறீமியர் லீக்- 2K20
## கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்




- நோ நேம் கிளப் எதிர் கொக்குவில் ஸ்ரார்ஸ்
- கொக்குவில் ஸ்ரார்ஸ் 100/9
- நோ நேம்- 64/10
- கொக்குவில் ஸ்ரார்ஸ் 36 ஓட்டங்களால் வெற்றி

ஆட்ட நாயகன்-யகீரதன்-4 விகெட்டுக்கள்.




- அரியாலை கில்லாடி 100 எதிர் நோ நேம் கிளப்
- அரியாலை கில்லாடி-61/09
- நோ நேம்- 62/08
- நோ நேம் 2 விக்கெட்டுக்களால் வெற்றி
- ஆட்ட நாயகன் - உமைசுதன்- 3 விக்கெட்டுக்கள்




- வல்வை றைனோஸ் எதிர் ஜப்னா றோயல்ஸ்.
- ஜப்னா றோயல்ஸ் - 82/05
- வல்வை றைனோஸ்- 83/05
- வல்வை றைனோஸ்-5 விக்கெட்டுக்களால் வெற்றி
- ஆட்ட நாயகன் - ஜொனி-32 ஓட்டங்கள்

## முதியவர் ஒருவர்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாவிட்டபுரத்தை சொந்த இடமாகக் கொண்ட செல்லத்துரை கனகரத்தினம் (வயது - 68) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,104)

## தமிழ்க் கட்சிகளு...

காததாலேயே முன்னர் நடைபெற்ற கூட்டத்தில் முன்னணி பங்கேற்கவில்லை என அக்கட்சியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அஞ்சலி உரிமையை வலியுறுத்தி ஜனாதிபதி, பிரதமருக்கு அனுப்பும் கடிதத்தில் அனைத்து தமிழ்க் கட்சிகளும் கையெழுத்திட்டன.

நேற்றுக் காலை 11 மணிக்கு வடக்கு மாகாண முன்னாள் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் இல்லத்தில் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் இணைந்து கையெழுத்திட்டனர்.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சட்டத்தரணிகள் க.சுகாஷ், ந.காண்டீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-3)

## 13ஆவது திருத்...

ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து நீண்ட பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்தில் இச்சந்திப்பு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை அண்மைய நாட்களாக இந்திய தூதுவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பொறியாகப்...

உதாரணத்துக்கு ஒரு கட்சிக்காரர் எந்தக் காலத்திலும் மன்றுக்கு வராது இருக்க அவரின் சட்டத்தரணி மட்டும் முழு மூச்சில் நடவடிக்கைகளில் பங்குபற்றினார் எனத் தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன்.

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த கேள்வி பதில் அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

**கேள்வி:** நடைபெற்று முடிந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் வட மாகாண முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் நடந்து கொண்ட விதம் உங்களுக்குத் திருப்தி அளித்ததா? அத்துடன் இந்த வழக்கு பற்றி உங்கள் கருத்தென்ன? நீங்கள் பிழை செய்தீர்களா?

**பதில்:** நான் மாகாண சபையில் எடுத்த நடவடிக்கையானது எனது தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் பால் எடுக்கப்பட்ட நடவடிக்கையன்று.

அமைச்சரவையின் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அந்த அமைச்சர்கள் பதவி விலகி தம்மீதான விசாரணையை எதிர்கொண்டு அதனூடாகத் தம்மை நிரபராதிகள் என்று நிரூபிப்பதன் மூலமாக மாகாண சபை நிர்வாகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பவே விரும்பியிருந்தேன். அதில் டெனீஸ்வரன் அவர்கள் தாம் குற்றமற்றவர் என்ற வகையில் தான் பதவி விலக முடியாது என்று மறுத்தார்.

ஆனால் அவர் குற்றமுடையவர் என்ற கணிப்பில் நான் அவரை விலகச் சொல்லவில்லை. அவர் மீது குற்றம் சாட்டிய ஒருவர் புதிய அமைச்சர் அவையில் இருந்த காரணத்தினால் குற்றஞ் சாட்டியவரும் குற்றம் சாட்டப்பட்டவரும் ஒருமித்து அமைச்சர் அவையில் இடம் பெறுவது உசிதமில்லை என்று நினைத்தே அவரைப் பதவி துறக்கச் சொன்னேன். குற்றம் சாட்டியவர் விசாரணைத் தினத்தில் ஜெனிவா செல்ல வேண்டியிருந்ததால் அவரால் சாட்சியம் அளிக்க முடியவில்லை. கால நீடிப்பு வழங்க ஆணைக்குழு உறுப்பினர்கள் சம்மதிக்கவில்லை. ஆகவே இரு அமைச்சர்கள் மீதான விசாரணை நடைபெறவில்லை.

டெனீஸ்வரன் தவிர்ந்த மற்றைய அமைச்சர்கள் எனது கோரிக்கைக்கு உடன்பட்டு தமது பதவிகளைத் துறந்தார்கள். மேற்கண்ட காரணங்கள் நிமிர்த்தம் எல்லோரையும் சமமாக நடத்த வேண்டும் என்ற கடப்பாட்டில் நான் அவரைப் பதவி விலக்கியிருந்தேன்.

அவர் அதற்கு எதிராக நீதிமன்றை நாடியிருந்தார். டெனீஸ்வரனைப் பொறுத்தவரையில் இது அவருக்கு ஒரு மானப்பிரச்சினையாக இருந்தது என்பதைப் புரிந்துகொள்கின்றேன்.

ஆனால், இந்த விவகாரத்தை வேறு சிலர் எனக்கு எதிரான பொறியாகப் பாவிப்பதற்கு திரைமறைவில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

உதாரணத்திற்கு ஒரு கட்சிக்காரர் எந்தக் காலத்திலும் மன்றுக்கு வராது இருக்க அவரின் சட்டத்தரணி மட்டும் முழு மூச்சில் நடவடிக்கைகளில் பங்கு பற்றினார். தோகை விரித்தாடும் மயில் போல் அங்கும் இங்கும் திரிந்து தமது முக்கியத்துவத்தை வெளிக்காட்டினார்.

கட்சிக்காரருக்கு மன்றில் என்ன நடந்ததென்று தெரிந்திருந்ததோ எனக்குத் தெரியாது. எனக்கு எதிரான வழக்கைத் தொடர்ந்து நடத்துமாறு சிலர் டெனீஸ்வரனுக்கு அழுத்தங்களை பிரயோகித்திருந்திருக்கலாம் என்று உணர்கின்றேன்.

ஆனால், எத்தகைய அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் இறுதி நிமிடத்தில் டெனீஸ்வரன் அவர்கள் சுதாகரித்து நல்லதொரு முடிவை எடுத்திருக்கின்றார். இன உணர்வு சார்ந்த அவரின் இந்த செயலை நான் பாராட்டுகின்றேன்.

அவரின் செயல் சுயநல சிந்தனையுடனும் மற்றும் இன ரீதியாகச் சிந்தித்த சிலரினதும் வாயில் மண் அள்ளிப் போடச் செய்துள்ளது.

இந்த வழக்கு Much ado about nothing என்ற வில்லியம் ஷேக்ஸ்பியரின் நாடகத்தை நினைவூட்டுகின்றது. அதாவது சிறு விடயத்திற்கு ஊரைக் கூட்டுவதாக இந்த வழக்கு அமைந்திருந்தது.

டெனீஸ்வரன் அவர்களைப் பதவி நீக்கம் செய்த விடயத்தை வர்த்தமானியில் ஆளுநரோ அவரின் செயலாளரோ பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த வழக்கே பதிந்திருக்க முடியாது.

டெனீஸ்வரனின் வெற்றிடத்திற்குப் பதில்-அமைச்சர்களை நியமித்து வர்த்தமானியில் பிரசுரித்த ஆளுநர் டெனீஸ்வரனின் பதவி நீக்கத்தை வர்த்தமானியில் பிரசுரிக்காது இருந்தமை வியப்பை ஊட்டுகின்றது. ஆளுநருக்கு இருந்த அவரது அதிகாரத்தை நான் ஏற்றே உத்தியோகபூர்வ அறிவித்தல் டெனீஸ்வரனுக்கு விரைவில் கிடைக்கும் என்று டெனீஸ்வரனுக்கு அறிவித்தல் செய்திருந்தேன்.

உத்தியோகபூர்வ அறிவித்தல் என்பது வர்த்தமானிப் பிரசுரிப்பையே. ஏன் அவ்வாறு பிரசுரிக்கவில்லை என்று ஆளுநரிடம் கேட்கப்பட்டிருந்தால் அல்லது பிரசுரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தால் இவ்வளவு அமர்க்களங்கள் ஏற்பட்டிருக்காது. நான் ஏற்கெனவே ஆளுநரின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டிருந்தேன். அதனால் தான் உத்தியோகபூர்வ அறிவித்தல் வரும் என்று குறிப்பிட்டிருந்தேன். அப்படியிருந்தும் ஆளுநரிடம் எதுவும் கேட்கப்பட வில்லை. அவரும் நீதிமன்றம் வந்ததில்லை.

அதனால்தான் இதனை ஒரு துன்பியல் நிகழ்வென்றேன். நான் எந்தப் பிழையும் செய்யவில்லை. ஆளுநரின் பிழை என்னை அவதிக்குள்ளாக்கி விட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 20ஆவது திருத்த...

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்வதாக நாட்டுக்கு கூறியதாகவும் அதில் ஒரு பகுதியை வைத்துக் கொள்வதாக வாக்குறுதி வழங்கவில்லை எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த திருத்தச் சட்டத்தை செய்ய முடியாது என்றால், 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை அப்படியே முன்னெடுத்து 20ஆவது திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற்று, புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படும்வரை முன்னோக்கி செல்ல முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக சில நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றிய பின்னர், கொண்டு வரப்படும் அரசியலமைப்புச் சட்டத்தில் குறைபாடுகளை தீர்க்கலாம் என ஜனாதிபதி இறுதியாக கூறியுள்ளார். அமைச்சரவையும் இறுதியில் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. (ம-3)


### மெகா பவர்
திகதி 19/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0617
W 12 23 44 45 78

### கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2545
F 43 48 61 63

### மஹஜன சம்பத
திகதி 2020/09/19
சீட்டிழுப்பு இலக்கம் 4250
G 8 2 8 0 0 1

### சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/09/19
சீட்டிழுப்பு இலக்கம் 1536
சுபிரி இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 02 16 34 46

### ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 1056
Z 4 3 7 4 2 9

### உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 368
திகதி 19.09.2020
வர்ணம் சிவப்பு
W 01 05 34 8
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 11,963,056
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1220
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 19.09.2020
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
F 16 27 60 67
57,071,508.40
SUPER 500 2 2 5 4

### அத கோடிபதி
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1046
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2020.09.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 71,191,545/-
வெற்றி இலக்கங்கள் 03 35 38 48 T
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 3645
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 421
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.19
சீட்டிழுப்பு இல.: 3376
வர்ணம் : பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 41,637,119.20
வெற்றி இலக்கங்கள் 14 47 50 64 O
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 3197
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்
திகதி 19.09.2020
வெற்றி வாரம் 2927
வர்ணம் இளநீலம்
வெற்றி இலக்கங்கள் 06 21 35 56
விருச்சிகம்
ரூ.500 பரிசுக்குரிய 7440
ரூ.100 பரிசுக்குரிய 539
விசேட இல.
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,362,840
தொ. பே.: 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# இரட்டை குடியுரிமை விவகாரத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்

## ஞானசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலை புலிகள் அமைப்பு நாட்டில் இல்லாதொழிக்கப் பட்டாலும் அவர்களின் பிரிவினைவாத கொள்கை உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. புலம் பெயர் தமிழர் அமைப்புக்கள் இரட்டை குடியுரிமை விவகாரத்தை பிரிவினைவாத கொள்கைகயை செயற்படுத்த பயன்படுத்திக் கொள்வார்கள். ஆகவே இரட்டை குடியுரிமை விவகாரத்தை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இரண்டாம் குடியரசு யாப்பு இதுவரை காலமும் 20 'சீர் திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது. பிரதான இரு கட்சிகளும் ஆட்சியமைக்கும் போது தங்களுக்கு தேவையான விதத்தில் அரசியமைப்பினை திருத்தம் செய்து கொள்கிறார்கள். இதனால் அரசாங்கத்துக்கு நன்மை ஏற்பட்டுள்ளதே தவிர நாட்டுக்கு எவ்வித அபிவிருத்திகளும், மாற்றங்களும் ஏற்படவில்லை.

அரசியமைப்பின் 17 ஆவது திருத்துக்கு ஆதரவு வழங்கிய அரசியல்வாதிகள் 18 ஆவது திருத்திற்கும், 19 ஆவது திருத்திற்கும் ஆதரவு வழங்கினார்கள். அரசியமைப்பின் 19 ஆவது திருத்தம் கடந்த காலங்களில் அரச மற்றும் சமூக மட்டத்தில் பிரதான பேசுபொருளாக காணப்பட்டது. 19ஆவது திருத்தத்தை ஆதரித்த அரசியல்வாதிகள் அரசியல் தேவைகளுக்காக அதனை எதிர்க்கவும் ஆரம்பித்தார்கள். அது அரசியல்வாதிகளுக்கே உரித்தான தனித்துவ இயல்பு.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இரத்து செய்து புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதாக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். தற்போது அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட் டுள்ளது. இத்திருத்தத்தில் இரட்டைகுடியுரிமையினை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியும் என ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

விடுதலை புலிகள் நாட்டில் இல்லாதொழிக்கப்பட்டாலும் அவர்களின் பிரிவினைவாத கொள்கை உலகம் முழுவதும் வியாபித்துள்ளது. இரட்டை குடியுரிமை கொண்ட வர்கள் அரசியலில் பங்குப்பற்ற முடியும் என்பதை புலம்பெயர் தமிழ் அமைப் புக்கள் நிச்சயம் தமக்கு சாதகமாக பயன் படுத்திக் கொள்வார்கள். சீனர்கள், இந்தியர்கள், ஆகியோர் எதிர் காலத்தில் இலங்கை பாராளுமன்றில் உறுப்பினராக செயற்படுவார்கள் என்பதில் எவ்வித



ஆச்சரியமும் கிடையாது. ஆகவே அர சாங்கம் இரட்டை குடியுரிமை விவகாரத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்றார். (ம-03)

## வாள்வெட்டுடன்...

சந்தேக நபர்கள் 9 பேரும் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

9 பேர் ஒன்றுகூடியுள்ளதால் வன்முறைச் சம்பவம் இடம்பெறலாமென கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று சிறப்பு அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (ம-3,8)

## மாகாண சபை...

மாக எடுக்கவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாண சபை முறை பலப்படுத்தப்படுமே தவிர ஒருபோதும் நீக்கப்படாது என நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தையும், மாகாண சபை முறைமையினையும் இரத்து செய்ய வேண்டும் என ஆளும் தரப்பினர் உறுப்பினர்கள் குறிப்பிடும் தனிப்பட்ட கருத்துக்களை அரசாங்கத்தின் கருத்தாக ஏற்றுக்கொள்ள முடியாது. இனப்பிரச்சினைக்கு தீர்வாகவே மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. மாகாண சபை முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டமையினால் ஒப்பீட்டளவில் ஒரு சில பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொள்ள முடிந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த, மாகாண சபை தேர்தலை நடத்தினால் வடக்கு கிழக்கில் தனது கட்சி படுதோல்வியடையும் என்பதை நன்கு அறிந்து மாகாண சபை தேர்தலை நடத்தினார். வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தங்களுக்கு தேவையான பிரதிநிதிகளை ஜனநாயக முறையில் தெரிவு செய்து கொண்டார்கள். தேர்தலில் தோல்வியடைவோம் என்பது குறித்து அப்போதைய அரசாங்கம் மாகாண சபை தேர்லை நடத்தாமல் இருக்கவில்லை. மக்களின் அடிப்படை உரிமை பாதுகாக்கப்பட்டது.

மாகாண சபை தேர்தல் உரிய காலத்தில் இடம் பெற்றிருந்தால் இன்று அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கும், மாகாண சபை முறைமைக்கும் எதிரான கருத்துக்கள் வெளியாகியிருக்காது. மாகாண சபை பலப்படுத்தப்படுமே தவிர அரசியல் காரணிகளுக்காக ஒருபோதும் இரத்து செய்யப்படமாட்டாது என்றார். (ம-03)

## திலீபனின்...

கடிதத்தில் கையெழுத்திட்டனர்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் த. சிற்பரன் கடிதத்தில் கையெழுத்திட்டார்.

புளொட் சார்பில் கலந்து கொண்ட பா.கஜதீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் மற்றும் ஈ.பி.ஆர். எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கடிதத்தில் கையெழுத்திட்டனர்.

மேலும், தமிழ் தேசியக் கட்சி சார்பில் எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ஸ்ரீகாந்தா, ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகம் சார்பில் அனந்தி சசிதரன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

தியாகி திலீபனின் நினைவு நாள் ஆரம்பமாகியுள்ள நிலையில் தாயகப் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவு கூரல் நிகழ்வுகளுக்கு நீதிமன்றங்கள் ஊடாக தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நீதிமன்ற உத்தரவை மீறி நினைவு நிகழ்வு நடத்தியதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கைதுசெய்யப் பட்டிருந்தார்.

இதையடுத்து, தமிழ் தேசிய நிலைப்பாட்டில் இயங்கும் கட்சிகள் மாநாடு நேற்று முன்தினம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அழைப் பின்பேரில் நடைபெற்றது.

இதன்போது, தமிழ் மக்களின் உரிமைக்கான 30 வருட போராட்டத்தில் உயிரிழந்த மக்களையும், போராளிகளையும் நினைவுகூருவது தமிழ் மக்களின் கடமையும் உரிமையுமாகும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில், இவ்வாறு நினைவுகூருவதை தடை விதிப்பதானது தமிழர்களின் உரிமைகளை மறுதலிப்பதாகும் என்பதால் அரசாங்கம் இந்தத் தடைகளை அடுத்த சில நாட்களில் அகற்ற வேண்டும் என கோரிக்கை விடுக்கப் பட்டது.

இதைத் தொடர்ந்து, இதுகுறித்த வலியுறுத்தலை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு தெரிவிக்கும் வகையிலும், தியாகி திலீபனின் நினைவுகூரலுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை விலக்கக் கோரியும் நேற்று மேற்படி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ம-03)

## எதிர்வரும்...

நோக்கி செல்ல இடமளிக்க போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட்டிடம் ராஜித இதனை குறிப்பிட்டுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற வரவேற்பறையில் நசீர் அஹமட்டுடன் உரையாடியுள்ள ராஜித சேனாரத்ன, ஆறு மாதங்களுக்குள் அரசாங்கத்தை கவிழ்க்க உள்ளதால், அரசாங்கத்துடன் இணைவது குறித்து எண்ணிக்கூட பார்க்க வேண்டாம் என தெரிவித்துள்ளார். (ம-03)

அமெரிக்க லொத்தர் விசா
2020
நீங்களும் இந்த ஆண்டு அமெரிக்க லொத்தர் விசா அதிஸ்டசாலி ஆகலாம்.
இறுதி நேர ஏமாற்றத்தினை தவிர்த்திட
உடனடியாக கடவுச்சீட்டினை எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்
என்றும் உங்கள் மீது அக்கறையுடன் V2 TRAVELS
0768226244
(C-112)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-112)

வீடு வாடகைக்கு
யாழ். நகரில் Annex வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு (4025)
077 873 4805

விற்பனைக்கு
Nissan Sunny 2001 N16 HF XXXX
எனும் இலக்கமுடைய கார் விற்பனைக்கு உண்டு.
[15 இலட்சம்]
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு (4020)
077 957 0599

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
லண்டன்-1050/=, பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலன்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது (C-305)
இந்தியா - டுபாய் - சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துனுக்காய் மன்னார்/வவுனியா

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
Care Giver Course - பராமரிப்பாளர் பயிற்சி நெறி
சிறுவர் பராமரிப்பு / முதியோர் பராமரிப்பு
விசேட தேவையுள்ளோர் பராமரிப்பு /வீட்டு பராமரிப்பு
● கனடாவில்/வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ள
● படித்துக்கொண்டே 50'000/= சம்பளம் பெறலாம். (C-112)

CIMS
அனுமதிகளுக்கு-0777-069-777

உடனடி வேலைவாய்ப்பு
VACANCY AVAILABLE
எமது MB நிறுவனத்தின் கிளைகள் ஒவ்வொன்றுக்கும் 15 - 20 பேர் இணைக்கப்படவுள்ளனர். ஆர்வமிக்க இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்கலாம்.
➤ 10, O/L, A/L படித்தவர்கள் நேர்முகத் தேர்வில் பங்குபற்றலாம்.
➤ கிளை முகாமையாளர், உதவி முகாமையாளர், மேற்பார்வையாளர், கணக்காளர் போன்ற பலதரப்பட்ட வேலை வாய்ப்புக்கள் உள்ளன.
➤ நேர்முகத் தேர்வில் ஆட்கள் தெரிவு செய்யப்படுவர்.
➤ முன் அனுபவம் அவசியமில்லை.
➤ 15,000 /= - 35,000 /= வரை அடிப்படைக் கொடுப்பனவு உண்டு.
➤ வெளி மாவட்டங்களில் இருந்து வருவோருக்கு உணவு, தங்குமிடம் இலவசம். (4028)
தொடர்புகளுக்கு : 077 200 0018/ 021 431 0018

சிறுநீரகம் தேவை
B,O இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.
தொடர்பு (4031)
076 239 9874

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்


# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 276

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 20.09.2020 தொலைபேசி : 021 222 3378



## துளிரும் ஒற்றுமை



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இறைவணக்கம் முடிந்த கையோடு பண்டிதர் பரமலிங்கம் தான் கொண்டு வந்த தியாகி திலீபனின் உருவப் படத்தை ஆலடியில் வைக்க, விதானையார் விசுவலிங்கம் தீபத்தை ஏற்றினார்.

அனைவரும் எழுந்து எங்கள் தியாக தீபமே... எங்கள் தியாக தீபமே... என்றும் நீ எங்கள் இதய தீபம் எனக்கூட்டாகப் பாடி மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்கை வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரன் வாபஸ் பெற்றுள்ளாராம். கங்காணி கார்த்திகேயன் கூறினார்.

மூப்பர்: நல்லது. எங்கட இனம் ஒன்றுபட வேணும் என்பதுதான் எங்கட விருப்பமும்.

சிறாப்பர்: அப்ப டெனீஸ்வரன் விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சியோட சேருவாரோ?

சாத்திரியார்: அரசியலில எதுவும் நடக்கலாம். அரசியலைப் பொறுத்தவரை நிரந்தரப் பகையும் இல்லை, நிரந்த நட்பும் இல்லை என்பதுதான் முடிவு. ஆகையால விக்னேஸ்வரன் ஐயாவின்ர கட்சியில டெனீஸ்வரன் சேர்ந்தால் நல்லதுதானே.

சிறாப்பர்: நீதிமன்ற வழக்கில விக்னேஸ்வரன் ஐயா மாட்டுப்படுவார் என எதிர்பார்த்திருந்தவியளுக்குப் பலத்த ஏமாற்றம் தான்.

பண்டிதர்: சிறாப்பர் சொல்லுறது உண்மைதான். விக்னேஸ்வரன் ஐயாவை சிறைக்குள்ள விட்டிட்டால், எல்லாம் சரியாப் போயிடும் என்று நினைத்தவர்கள் இப்ப வாய் பொத்தி நிற்கினம்.

வாத்தியார்: ஓமோம். மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு விக்னேஸ்வரன் ஐயா கொழும்புக்குப் போவாரெண்டு சொன்னவியளும் இருக்கினம் தானே.

சாத்திரியார்: அதுசரி, தமிழ்மக்கள் பேரவையின்ர இணைத்தலைவர் பதவியில இருந்து விக்னேஸ்வரன் ஐயா விலகியிருக்கிறார். தமிழ் மக்கள் பேரவை ஒரு தூய மக்கள் இயக்கமாகச் செயற்படவேணும் எண்ட ஒரே காரணத்திற்காக அவர் தன்ர இணைத் தலைவர் பதவியை விட்டுக் கொடுத்திருப்பது ஒரு நல்ல முன்னுதாரணம்தானே.

விதானையார்: தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சிகளைக் கைவிட்டு மக்கள் இயக்கமாகச் செயற்படவேண்டும் எண்ட கருத்து இருந்தது. அப்ப இனி எல்லாரும் தமிழ் மக்கள் பேரவையில இணைந்து அதனைத் தமிழ் மக்களுக்கான பேரியக்கமாக ஆக்குவினம்தானே.

வாத்தியார்: என்னைப் பொறுத்தவரை தமிழ் மக்கள் பேரவை தமிழ் அரசியல் கட்சிகளை இணைத்து ஓர் அரசியல் உயர்மட்ட அமைப்பை உருவாக்க வேணும்.

விதானையார்: வாத்தியார் நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால், தமிழ் மக்கள் பேரவையில அரசியல் கட்சிகள் அங்கம் பெற வேணும் எண்டு சொல்லுறியளோ.

வாத்தியார்: விதானையார் தேவை எண்டால் தமிழ் மக்கள் பேரவையின் மத்திய குழுவில அரசியல் கட்சிகள் இடம் பெறாமல் இருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் பேரவையின்ர ஓர் அங்கமாக தமிழ் அரசியல் கட்சிகளின்ர ஓர் கூட்டு அங்கத்துவம் இருந்தால்தான் அரசியல் விவகாரங்களை ஒற்றுமையாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

மூப்பர்: வாத்தியார் சொல்லுறதிலும் உண்மை இருக்கத்தான் செய்யுது. தமிழ்மக்களின்ர அரசியல் பலம்தான் எங்களுக்கான உரிமையைப் பெற்றுத்தரும். எனவே அரசியல் கட்சிகளை ஒதுக்கிவிட்டு பேரவை தனித்து இயங்கிறதென்பது பேரவையின்ர பலத்தைக் குறைப்பதாகத்தான் இருக்கும்.

ஆகையால் தமிழ் மக்கள் பேரவை பல உப குழுக்களைக் கொண்டிருப்பது போல, தமிழ் அரசியல் கட்சிகளையும் ஒன்றுபடுத்தி பேரவையின்ர ஒரு பெரும் பலமான கட்டமைப்பாக வைத்திருக்கும் போதுதான் அது தமிழ் மக்களுக்குப் பலமாக அமையும்.

சாத்திரியார்: இண்டைக்கு எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றுபடவேணும் எண்ட கருத்தியல் வலுப் பெற்றிருக்கிறதெண்டால், அதற்கு மூலகாரணம் தமிழ் மக்கள் பேரவைதானே.

தமிழ்மக்கள் பேரவை எண்ட அமைப்பு உருவானதால தமிழ் மக்கள் மத்தியில ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது.

விதானையார்: சாத்திரியார் நீங்கள் சொல்லுறது நூறுவீதம் உண்மை. இண்டைக்கு தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபடுவதற்குத் தயாராக இருக்கினம். அண்டைக்கு தமிழ் மக்கள் பேரவையை ஆரம்பித்து தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்திய போது, தோற்றவர்களின் கூடாரம்தான் பேரவை எண்டு நக்கல் நளினம் விட்டவியள் இண்டைக்கு ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்திருக்கினம்.

கங்காணி: 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்மக்கள் பேரவையாலதான் இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டது என்பதில எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஆனால்...

கங்காணி கார்த்திகேயன் சற்றுத் தாமதிப்பதை அவதானித்த சிறாப்பர் என்ன கங்காணியார் ஆனால் எண்டு இழுக்கிறியள். சொல்ல வந்ததைச் சொல்லுங்களன்.

கங்காணி: விதானையார் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே ஓர் ஒற்றுமை ஏற்படவேணுமெண்டால், அதனைச் செய்யக்கூடிய ஒரே அமைப்பு தமிழ்மக்கள் பேரவைதான். இதைவிட்டிட்டு நாங்கள் அரசியல் கட்சிகளை ஒன்றுபடுத்திப் பயணிப்போம் எண்டு எந்தத் தமிழ் அரசியல் கட்சி நினைத்தாலும் அது சாத்தியப்படப் போவதில்லை. அவ்வாறு சாத்தியப்பட்டாலும் அதன் ஆயுள் குறுகியதாகத்தான் இருக்கும்.


பண்டிதர்: கங்காணியார் இப்ப என்ன செய்ய வேணுமெண்டு சொல்லுறியள்.

கங்காணி: பண்டிதர் ஐயா தமிழ் மக்கள் பேரவை தமிழ் அரசியல் விவகாரங்களைக் கையாள்வதற்கு உயர்மட்ட அரசியல் குழுவொன்றை உடனடியாக உருவாக்கவேணும். அந்த அரசியல் உயர்மட்டக் குழுவென்பது தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டாக இருக்கும்.

கூட்டுத் தொடர்பான விதிமுறைகள், நிபந்தனைகளை தமிழ்மக்கள் பேரவை கையாளவேணும். இதைச் செய்தால் தேர்தல் விவகாரங்களில் கூட ஒற்றுமையான முடிவுகளை எடுத்து தமிழ் மக்களுக்கான பலமான அரசியலை உருவாக்க முடியும்.


இவ்வாறு கங்காணி கூறியதும் அதனை ஆலடி மாநாடு ஏகமனதாக ஏற்றுக்கொள்ள, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையாரின் ஆசியும் கிடைப்பது போல கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## தமிழ் மக்கள் பேரவைக்கு அரசியல் பலமும் தேவை

# காலத்தின் அசைவு தந்துள்ள ஒற்றுமைக்கான சூழமைவு



நினைவேந்தல் என்பது உலகம் முழுவதிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடயம்.

தவிர, நினைவுகூருவது அடிப்படை உரிமை என்பதை ஐ.நா. சபை அங்கீகரித்துள்ளது.

ஆக; இன, மத,. மொழி பேதங்களோடு நினைவுகூரலைத் தொடர்புபடுத்தலாகாது என்பதே அடிப்படை உரிமையின் சாரம்.

எனினும் இலங்கையில் நினைவுகூருதல் என்ற அடிப்படை உரிமை மறுக்கப்பட்ட ஓர் இனமாகத் தமிழ் இனம் உள்ளது.

அதாவது, தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி மரணித்தவர்களை தமிழ்மக்கள் நினைவேந்துவது ஒரு பெரும் குற்றமாக சிங்கள ஆட்சியாளர்களால் கருதப்படுகின்றது.

இதுமட்டுமல்ல, அகிம்சை வழியில் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகி திலீபன், முள் ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்ட அப்பாவித் தமிழ்மக்கள் என்போரை நினைவுகூருவது பயங்கரவாதக் குற்றத்திற்கு ஒப்பானதாகக் கருதப்படுகிறது.

இவ்வாறு சிறுபான்மைத் தமிழ் மக்களின் அடிப்படை உரிமையாகிய நினைவுகூரல் தொடர்பில் ஆட்சியாளர்களின் நிலைப்பாடுகள் இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு உதவமாட்டாது என்பதையே சுட்டி நிற்கின்றது.

ஆக, தலைநிமிர்ந்து வாழ்வதற்காகப் புறப்பட்ட தமிழினம் இன்று தன் இனம் சார்ந்தவர்களை நினைவேந்துவதற்குக்கூட முடியாமல் நிற்கிறது எனும்போது, எங்களின் எதிர்காலம் எப்படியாகும் என்ற கேள்வி எழவே செய்யும்.

நல்லாட்சியில் புதிய அரசியலமைப்பு அரங்கேறும். அதுவரை நாம் மௌனமாக இருக்க வேண்டுமெனக் கூறிய தமிழ் அரசியல் தரப்பு இப்போது மௌனமாக இருப்பதை விட வேறு வழியில்லை என்ற கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற நல்லாட்சிக்குக் கால அவகாசம் கொடுக்கவேண்டும் எனக்கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் இப்போது எதுவும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

எனவே, எங்களின் அரசியல் அணுகுமுறைகள் படுதோல்வி கண்டுள்ளன என்பதை நாம் பகி ரங்கமாக ஏற்றுத்தானாக வேண் டும்.

தமிழ் அரசியல் தரப்பின் அணுகுமுறைகள் தோல்வி கண்டன என்பதை ஏற்றுக் கொள்ளும் போது, தோல்விக்கான காரணம் என்ன? என்ற கேள்வி ஏற்படும். அவ்வாறான கேள்விக்கு விடையைத் தேடுகையில் தமிழ் அரசியல் தரப்புகளிடையே இருக்கக்கூடிய ஒற்றுமையீனங்கள், அரசியல் கட்சிகளிடையே நிலவக்கூடிய உள்ளக முரண்பாடுகள், தமிழ்ப் புத்திஜீவிகளின் கருத்துக்களை உள்வாங்காமை, தமிழ்மக்களின் மனநிலைகளை அறிவதற்கான ஏற்பாடுகள் இல்லாமை போன்ற பல காரணங்கள் தெரியவரும்.

இதில் தமிழ் அரசியல் தரப்புகளிடையே நிலவிய வேற்றுமைகள், முரண்பாடுகள் மற்றும் தனிமனித தீர்மானங்கள், அரச சார்புப் போக்குகள், பதவி விருப்புக்கள் என்ற காரணிகள் தமிழர்களின் அரசியல் பலத்தைக் கடுமையாகச் சிதைத்தன என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில், கடந்த பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் ஒருபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்தத் திருப்பமானது தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான சூழமைவை உருவாக்கியுள்ளது எனலாம்.

அதிலும் குறிப்பாக பொதுத் தேர்தலுக்குப் பின்பாக நடந்துள்ள மூன்று சம்பவங்கள் தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமை துளிர்விடுவதற்கான கால சூழலைத் தந்துள்ளது.

இதில், நீதியரசர் சி.வி. விக் னேஸ்வரனுக்கு எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கை வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் வாபஸ் பெற்றுக் கொண்டமை.

தியாகி திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி ஒற்றுமையாக நிலைமையை ஆராய்ந்தமை.

தமிழ் மக்கள் பேரவையில் அனைத்து அரசியல் கட்சிகளை யும் ஒன்றுசேருமாறும் அரசியல் சாராத மக்கள் இயக்கமாக தமிழ் மக்கள் பேரவை இயங்குவதற்காக எனது இணைத்தலைவர் பதவியை விட்டுக்கொடுக்கின்றேன் என நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அறிவித்தமை

ஆகிய மூன்று விடயங்கள் தமிழ் அரசியல் தரப்புகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தைத் தந்துள்ளன.

இச்சந்தர்ப்பத்தைத் தமிழ் இனத்திற்காக நாம் அனை வரும் பயன்படுத்திக் கொண்டால், எங்களின் எதிர்காலம் நிச்சயம் வெற்றிக்குரியதாக ஆக்கப்படும்.

விதுரன்




## புள்ளி மான்கள்

ஒரு காட்டில் இரண்டு புள்ளி மான்கள் ஒரே மாதிரியாக இருந்தன. இணை பிரியாத நண்பர்களாக இருந்தன. எங்கு சென்றாலும் சேர்ந்தேதான் செல்லும்.

ஒரு நாள் மழை பெய்தது. மான்களால் விளையாட முடியவில்லை. மழை நின்ற பிறகு வெளியே சென்று இன்னும் மழை பெய்யுமா என்று இரண்டு மான்களும் மேலே பார்த்தன.

அப்போது மேகத்திற்குள்ளிருந்து வெளியே வந்தது சூரியன். மான்கள் இரண்டும் சூரியனிடம் இன்னும் மழை வருமா? என்று கேட்டன.

அதற்கு சூரியன் நான் வந்து விட்டேனே. இனி எப்படி மழை வரும்? என்று சொல்லி மான்களைப் பார்த்து சிரித்தது. "எங்களைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய் என்றது ஒருமான்.

"நீங்கள் இருவரும் ஒரே மாதிரியாக இருக்கிறீர்கள்! அதுதான் எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

நீங்கள் யார்? நாங்கள் தான் அழகான இரண்டு புள்ளி மான்கள். நாங்கள் இருவரும் நண்பர்கள். என்றன புள்ளி மான்கள்.

சரி. உங்களில் யார் திறமையானவர்கள் என்று கேட்டது சூரியன். "நாங்கள் இருவருமே திறமையானவர்கள் தான் என்றன புள்ளி மான்கள்.

சூரியன் சற்று யோசித்து விட்டு சரி. அப்படியென்றால் நான் ஒரு போட்டி வைக்கிறேன். அதோ அங்கு ஒரு மரம் இருக்கிறது பாருங்கள். உங்களில் அந்த மரத்தை யார் முதலில் தொடுகிறார்களோ அவர்கள் தான் திறமையானவர்கள். இந்தப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு நான் ஒரு பரிசு தருவேன் என்றது.

சூரியன் பரிசு தருவதாகச் சொன்னதும் இரண்டு மான்களும் ஓடத்தொடங்கின. ஆனால் மரத்தைத் தொடா மல் அப்படியே நின்று கொண்டிருந்தன.

சூரியன் ஏன் மரத்தைத் தொடாமல் அப்படியே நின்று கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டது. ஒரு புள்ளிமான் சொன்னது. நான் என் நண்பனுக்கு விட்டுக்கொடுத்து விட்டேன் என்றது.

இன்னொரு புள்ளிமானும், நானும் என் நண்பனுக்கு விட்டுக்கொடுத்து விட்டேன் என்று சொன்னது.



இதைக் கேட்டு பெரிதும் மகிழ்ந்த சூரியன். அழகான இரண்டு புள்ளி மான்களே உங்கள் ஒற்றுமையைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நீங்கள் இருவரும் எப்போதும் இப்படியே இருக்க வேண்டும். உங்களுக்கு நான் ஒரு வானவில்லை பரிசாகத் தருகிறேன்.

நீங்கள் எப்போது விரும்புகிறீர்களோ அப்போதெல்லாம் வானவில்லே வருக என்று சொன்னால் போதும். வானத்தில் அழகான வான்வில் ஒன்று தோன்றும். நீங்கள் அதைப் பார்த்து ரசிக்கலாம் என்று சொல்லி விட்டு சூரியன் விடை பெற்றது.

மான்கள் இரண்டும் மகிழ்ந்தன. அவற்றிற்கு விருப்பமான நேரத்தில் வானவில்லை வரச்செய்து பார்த்துப் பார்த்து ரசிக்கும்.

**நீதி: நண்பர்களே விட்டுக்கொடுத்து வாழ்ந் தால் வாழ்க்கை வளமாக இருக்கும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

கல், சுதை, வெண்கலம் மற்றும் பஞ்சலோகம் ஆகிய மூன்றைக் கொண்டு விதவிதமான, அழகழகான சிற்பங்களை அமைத்து சோழர்கள் வித்தை காண்பித்திருக்கிறார்கள்.

மற்றச் சிவாலயங்களைப் பார்க்கும்போது இங்குள்ள சிற்பங்கள் மட்டும் தனித்துவமிக்கதாகத் தெரியும்.

இக்கோயில்களின் புறச்சுவர்களில் உள்ள சிற்பங்களில் காணப்படும் உணர்ச்சி வெளிப்பாடுதான் சிற்பங்களுக்கு அழகையும் பிரமிப்பையும் கொண்டு வருகின்றன.

நெளிவு சுளிவுகளுடன் கூடிய கற்சிலைகளும் செப்புச் சிலைகளும் சிற்பங்களின் அதிரூபமும் பார்க்குமெல்லோரையும் அசர வைத்து விடும்.

முதலில் கற்கள் கொண்டு வந்து பதிக்கப்பட்டு


73

தஞ்சையில் வரையப்பட்ட பிராஸ்கோ ஓவியங்கள்

அதற்குப் பிறகுதான் சிற்ப வேலைகள் தொடங்கியிருக்கின்றன.

சிற்ப மகரிஷிகள் படைத்தருளிய சாஸ்திரங்களான காஸ்யபம், மயன்மதம் போன்ற வழிமுறைகளைக் கொண்டு கற்சிலைகளும் கற்சிற்பங்களும் செய்யப்பட்டன.

பெரிய கோயிலைச் சுற்றியும் புடைப்புச் சிற்பங்களைப் பார்க்க முடியும். கற்தூண்களில் நடன மங்கைகள் உருவம் செதுக்கி வைக்கப்பட்டுள்ளன.

நுழைவாயிலில் யாழியின் வித்தியாசமான தோற்றம் பெரிய கோயிலின் பிரகாரங்களில் உள்ள பிட்சாடன மூர்த்தி, ஆலிங்கன சந்திரசேகரமூர்த்தி போன்ற சிற்பங்களில் கலையின் உச்சத்தைக் காணமுடியும்.


கற்சிலைகள் தவிர உலோகச் சிற்பங்களும் உண்டு. சோழர்காலத்தின் கலையுச்சம் என்பது செம்பு, வெண்கலம், ஐம்பொன் சிற்பங்கள்.

செம்பு என்கிற உலோகம் ஐயாயிரம் ஆண்டு காலம் புழக்கத்தில் இருந்தாலும் அந்தச் செம்பைக் கொண்டு கடவுள் உருவங்கள் செய்யப்படும் போது தான் அது கலை வடிவமாக மாறுகிறது.

உலோகச் சிற்பங்கள் என்கிற கலை சோழர் காலத்தில்தான் முறைப்படுத்தப்பட்டது. சோழர் காலச் செம்புச் சிலைகளை அவற்றின் நளினமான தோற்றத்தை வைத்து அடையாளம் சொல்லி விடலாம்.

சோழர்காலச் செம்புச் சிலைகள் ஐம்பொன்னால் (தாமிரம், துத்தநாகம், வெள்ளீயம், தங்கம், வெள்ளி) செய்யப்பட்டவை.

(தொடரும்)



கொரோனா இந்த உலகத்தை விட்டு அகலாது என்கிறார்களே வியா மாமா?




எல்லாம் விதி என அனைத்தையும் விட்டு விட முடியுமா வியாசரே?



திலீபனுக்காக தமிழ்த்தேசியக் கட்சிகள் ஓரணியில் திரண்டு விட்டனவே?

**தர்ஷன் — வடமராட்சி**

**திலீபனுக்காக தமிழ்த்தேசியக் கட்சிகள் ஓரணியில் திரண்டு விட்டனவே?**

இந்தக் கூட்டம் ஒற்றுமையும் எப்போதும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்பதே எமது (தமிழ் மக்கள்) ஆசை.

எப்போதும் ஒன்றுபட்டு நிற்பதுதான் பலம்.

பிரிந்து நின்றால் அது பலவீனமே தவிர பலமாகாது.

இதை விளங்காத ஜென்மங்கள் சில, இல்லை நாம் தனித்துத்தான் நிற்போம் என அடம்பிடித்தால் என்ன செய்ய முடியும்.

மக்கள் தீர்ப்பென்பது ஒன்று உண்டு என்பதை மறந்து செயற்படுகிறார்கள் சிலர் என்பதே கவலை.

**இந்து — மானிப்பாய்**

**காலம் முழுவதும் தமிழன் அடிமையாகத்தான் இருக்க வேண்டுமா வியாசரே?**

அடிமை என்பது எது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

ஒருவனுக்கு நடப்பது அடிமைத்தனம் எனத் தெரிந்தும் அதற்கு எந்தவித எதிர்ப்பையும் காட்டாமல் இருப்பதே அடிமை. மாறாக எனக்கு நடப்பது அநீதி. இதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டிய நேரம் வரும் என்ற எதிர்ப்பைக் காட்டினாலே போதுமானது.

ஆண்டான் அடிமை என்பது வட்டம் போன்றது. மேலே நிற்பது கீழே வந்துதான் ஆக வேண்டும்.

**ஆகாஸ் — எழுதுமட்டுவாழ்**

**கல்வியின் சிறப்பை உணராதவர்கள் பற்றி?**

பட்டுணர்வு என்ற ஒன்று உண்டல்லவா! அது வரும் போதுதான் நமக்கு நாம் விட்ட தவறுகள் என்ன என்பது புரியும். இது மனித இயல்பு.

தனது தந்தை தன்னை படிபடி என வலியுறுத்தியது எதற்காக என பட்டு உணர்ந்த பின்பு தன் மகனிடம் படிபடி என வலியுறுத்துவதே பட்டறிவு.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**இந்தியாவால் இலங்கைக்கு கொரோனா வருமா வியாசரே?**

வடக்கு மாகாணத்திற்கு இந்தியர்களால் கொரோனா பரவும் அபாயம் அதிகம் இருக்கிறது.

கடலில் இந்திய-இலங்கை மீனவர்கள் சந்திப்பது, சட்டவிரோத பொருட்கள் கைமாற்றம், கேரளக் கஞ்சா பரிமாற்றம், சட்டவிரோதமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருதல் போன்றவற்றினால் கொரோனா பரவும் அபாயம் உண்டு.

ஒருவேளை அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டு சமூகத் தொற்று ஏற்படுமானால் நிலையினைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.

எம்மக்கள் இப்போது மாஸ்க் போடுவதுமில்லை, சமூக இடைவெளி பேணுவதுமில்லை, கை கழுவி சுத்தம் செய்வதுமில்லை. கடவுளே நினைத்துப் பார்க்கவே பயங்கரமாக இருக்கிறது.

**வியாசர் பதில்கள்**
**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கு**
**SMS**
**அனுப்புங்கள்**

**தாரா — யாழ்ப்பாணம்**

**எல்லாம் விதி என அனைத்தையும் விட்டு விட முடியுமா வியாசரே?**

விதி என விட்டு விடுவதற்கென சில விடயங்கள் இருக்கின்றன. ஒருவருக்கு பாம்பு கடித்து விட்டது. கடித்தது பாம்பு எனத் தெரிந்தும் எல்லாம் விதி என்று சொல்லிவிட்டு வைத்தியசாலைக்குப் போகாமல் இருந்தால் வாயால் நுரை தள்ளுவது விதியாகிவிடும்.

விதி என்பது மனித சக்திக்கு அப்பாற்பட்டது. ஒரு விடயம் எமக்கு நடக்கும் போது நம்மை நாம் திடப்படுத்திக் கொள்ள அதைப் பயன்படுத்த வேண்டுமே தவிர அதே விதி என்பது எம் அழிவுக்குக் காரணமாக இருந்து விடக் கூடாது.

**தரன் — வவுனியா**

**தடைகளை உடைப்பது அவ்வளவு சுலபமானது இல்லைத்தானே வியாசரே?**

தம்பி தரன் ஒரு பாரிய பாறாங்கல்லை உடைக்க அதன் பக்கங்களில் சிறிய ஆப்புகள் வைக்கப்படுகிறதல்லவா.

அந்த ஆப்புகளில் தலா ஒவ்வொரு அடி போட்டுவிட அந்தப் பாறாங்கல்லு உடைந்து விடுகிறதா? இல்லையே.

பொறுமையாக இடம்பார்த்து சரிபார்த்து அடிக்க அடிக்க அது அழகாய் பலாப்பழம் போல பிரியுமல்லவா.

இதுதான் தம்பி வாழ்க்கையும். எடுத்தவுடன் நமக்கு வெற்றி கிட்டிவிடாது. முயற்சி என்கின்ற மடத்தலால் வாழ்க்கையை மெல்ல மெல்ல அடித்து வாழப் பழக வேண்டும்.

**தனுஷன் — மந்துவில்**

**கொரோனா இந்த உலகத்தை விட்டு அகலாது என்கிறார்களே வியா மாமா?**

உண்மை. அண்மையில் உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், இன்னும் பத்து வருடங்களுக்கு கொரோனா வைரஸ் அழியாது. கொரோனாவுடன் வாழப் பழகுங்கள் என்று தெரிவித்திருக்கிறது.

கொத்துக் கொத்தாய் மனித உயிர்களை எடுத்துக் கொண்டிருக்கும் கொரோனாவுடன் எப்படி வாழப்பழகுவது என்பதுதான் இன்னும் புரியவில்லை.

பழகுவதற்கு கொரோனா பக்கத்துவீட்டு பரமசிவம் அண்ணையா? ஆட் கொல்லிடா.

இதற்கெல்லாம் ஒரே வழி தடுப்பூசியை விரைவாகத் தயாரிப்பதே. இல்லையேல் இந்த உலகம் இன்னும் பல அழிவுகளை எதிர்கொள்ளும் என்பது திண்ணம்

**சிவம் — வதிரி**

**எம் இளம் சமூகத்தின் மத்தியில் போதை உச்சம் தொட ஆரம்பித்துவிட்டதே?**

எம் சமூகம் மீண்டுவரும் என்ற நம்பிக்கை அற்றுப் போய்விட்டது. ஓடும் மோட்டார் சைக்கிளில் இருந்து போடும் ஜீன்ஸ், தலைவெட்டு எல்லாத்திலும் மாற்றம். மொத்தத்தில் எம் சமூகத்தின் கட்டமைப்பு அத்தனையும் தகர்க்கப்பட்டு விட்டது என்றே கூறமுடியும்.

கோவிலுக்குச் சென்று சாமி கும்பிடுவது, பெரியவரை மதித்து அவர்களுக்கு கடமை செய்வது என எதுவும் இல்லாமல் போதைக்குள் புதைந்து வீதியில் தறுதலையாகத் திரிகிறது எம் இனத்தின் எதிர்காலங்கள். இது மீள்வது போல எமக்குத் தெரியவில்லை.

## ஏங்கிடும் இதயங்கள்

தப்பேதும் செய்யாது
தமிழினம் என்பதனால்
அப்போது இருந்தோம்
அகதி முகாம்களில்
முட்கம்பி வேலிக்குள்
இப்போது எங்கள்
இனிய விளை நிலங்கள்
பாதுகாப்பு வலயமென
முட்கம்பி வேலிக்குள்
எப்போது தீருமோ?
எம்மைவிட்டு இந்த
முட்கம்பி வேலியென
ஏங்கிடும் இதயங்கள்


சி.கஜா. முரசுமோட்டை

## புதுமைப்பெண்

காடுகள் செய்தோம்
களனிகள் செய்தோம்
மலைகள் அமைத்தோம்
மறுகரை காண
வீதிகள் அமைத்தோம்
இருள் நீங்க ஒளி செய்தோம்
பயிர் செய்தோம்
பருக குடிநீர் செய்தோம்
குறை ஒன்று வைத்ததில்லை
கூனிக்குறுகுவது
நம் வாழ்க்கை என்றாலும்
நிறைவொன்றை
உணர்ந்ததில்லை ஊதியப்பயன்
உயர்ச்சி பற்றி உரைத்தலுமிங்கு
பாரதியின் கவி உய்த்து நிற்கிறதே

வி.டிலக்ஷன்
யா/ தும்பளை சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்

# புதிய நகரம் வந்தோம்



நாங்கள் ஈழத்தமிழர்கள் வந்திருக்கிறோம் தேசியத்தின் முதுகெலும்புடைந்து
துரோகத்தில் தூண்கள் சாய்ந்து சிறகுடைந்த குறை இனமாய் வந்திருக்கிறோம்
வாகன இரைச்சல்களையும்- பல வல்லூறுகளின் கண்களையும் தாண்டி
புதிய நகருக்குள் வந்திருக்கிறோம் வெளிச்சவீதிகளும் விண்ணதிரும்
ஆர்ப்பரிப்பும் ஒருபுறம் இருக்க அலங்கோல அவதியில் அந்தரித்து வந்திருக்கிறோம்
இரசாயன நஞ்சுகளை உண்ட உடலும் குண்டுமழையில் குறுகிய நரம்பும்- எம்
குப்பிவிளக்கின் நிம்மதி இழந்து வந்திருக்கிறோம் எங்கள் அடையாளங்கள்
எங்கோ புதைக்கப்பட்டு தெரியாத தெளியாத ஜடமாய் வந்திருக்கிறோம்
உடைபட்ட நம்பிக்கைகளைத் தாண்டி அடைபட்ட சுவருக்குள்
ஆளுக்காள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறோம்
நாளும் பொழுதும் வாழ்ந்த வாழும் பொழுது அறியாமல்
பொய்யாத் தமிழாய்ப் போவது தெரியாமல் வந்திருக்கிறோம்

சி.சிறி, நெடுந்தீவு-2

# அழிவு கொடிது

அழிவைக் கண்டு பயம் கொள்ளாதே!
ஆக்கத்தின் பின் அழிவும்
அழிவின் பின் ஆக்கமும்
இயற்கையின் நியதி

அழிவுகளைக் கண்டு அமைதியாய் இராதே!
இருப்பாயானால்
உன் இனம் இருந்ததாய்
வரலாறுகூட இராது

அழிவுக்கெதிராய்ப் போராடு!
அப்போதுதான் உன் இனம்
காக்கப்படும்

அழித்தவருக்கு அழிவு கொடு
அதுவே உன் இனத்தில்
நீ கொண்ட பற்றின் வெளிப்பாடு

அழிவின் பாதிப்பை எதிரிக்கு உணர்த்து
இது அவன் மனம் திருந்திட
உன்னால் உபதேசிக்கப்படும் கீதை

அழிவு முடிவுதராது
இதை உன் மனதில்
நிலை நிறுத்திக்கொள்

கொடிது அழிவு கொடிது
ஆக்கம் மிக மிகக் கடிது
புரிந்து கொள் மனிதா
புத்தி பேதலித்திடாதே!

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்- 495



## வரிசையில் வாடியும்

அரிசி சீனி மண்ணெண்ணெய்
அன்றாடம் வாங்குவதும்
தரிக்கும் மனையதோ
தகரும் நிலை லயனும்
வரிசையில் வாடியும்
கொழுந்து
வாங்குவோர்
நிறை குறைப்பர்
உரிமையிலா சீவன்களாய்
உழைப்பவர் மாய்வதாமோ

த.சிவகாமி
கொக்குவில்

# மௌனத்தின் தேடல் -496



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ ஈனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## முதுகில் சுமக்கும் கொழுந்து மட்டும்

கொடூரக் குளவிகள்
கொட்டி நின்
குற்றுயிரை மாய்ப்பதுவும்
கடித்து உறிஞ்சும்
அட்டை உனது
நடுகளவு இரத்தம் உறிஞ்சுவதும்
அடுப்பங்கரையில்
பூனை உறங்குவதும்
அடிவயிறு எக்குவதும்
துடிதுடித்துப் பாலுக்கு
துவளும் பாலகனின்
துயரத்தைத் தூக்குவதும்
முதுகில் சுமக்கும்
கொழுந்து மட்டும்
கம்பனிகள் கோடி குவித்திடுமாம்

வைகதன்
கொக்குவில்

## தேநீரும் கண்ணீரும்

நாம் பருகி மகிழ்ந்திட
சுவையாய் தேநீர்
அதற்காகத்
தேயிலைத்
தோட்டத்தில்
கொழுந்து பறிக்கும்
இந்தப் பெண்
தொழிலாளி
வாழ்விலோ
நியாயமான ஊதியம்
கிடைக்காமல்
என்றும் கண்ணீர்

சுப்பிரமணியம்
ஜெயரூபன்
பருத்தித்துறை

## உழைப்பும் ஊதியமும்

மென்மையானாலும்
மேன்மையை வாரித்தரும்
தேயிலைக்கொழுந்துகள்
தேசிய வருமானத்தில்
பெரும் பங்குதாரர்
இருந்தபோதும்
உழைப்புக்கேற்ற
ஊதியத்தை மறுப்பது
ஒரே நாடு
ஒரே சட்டத்தில் விழும்
ஓட்டையென்பதை
ஒருவரும் உணர்வதில்லை

க.நாகராசா
நுணாவில்

## ஏதிலியாய் தொடரும்

என்புடன் தோல் ஒட்டி
இளைத்த உடல்
மட்டும் ஊரும்
வலிமை பெற்றதெங்கணம்
வாழ்வு நிமிர்ந்திடக்
கொழுந்து வளத்தினைத்
தருவதில்லை எம்
ஏழ்மை மட்டுமே எம்மோடு
இரட்டையராய்
பிறந்ததுவாய்
ஏதிலியாய் தொடரும்
கதை எமதே

வை.க.தவமணிதாசன்
நல்லூர்

## ஆயிரம் ரூபாய்

ஆயிரம் ரூபாய்
ஆனது கனவில்
அத்தனையும்
பொய்யுரைகள்
போயும் போயும்
ஓட்டுப்போட்டே
புரிந்தது நம் ஏலா நிலைமை
வாயிலாச் சீவனாய்
வாழும் எமக்கு வளங்கொளி
மலையகமாயினும்
பேசித்தீர்த்திட
யாருளரோ இங்கு
பெரும் புள்ளிகள்
தானே இரங்குவரோ

கந்தன்மைந்தன்
காவலூர்

# கடல் புறா

## இளையபல்லவன் 01


"காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த களப்போர் பாடத் திறமினோ" என்று "கலிங்கத்துப் பரணி"யில், பரணிக்கோர் புலவரான செயங்கொண்டார் தமிழக மகளிரை அறைகூவி அழைத்து, மகளிர் தத்தம் கணவருடன் நடத்திய கலவிப் போரையும் கழற்சென்னியான முதலாம் குலோத்துங்கன் கலிங்கத்தின்மீது நடத்திய ஆயுதப் போரையும் சிலேடை கோத்துப் பாடியது பல வருடங்களுக்குப் பின்பு தானென்றாலும், அந்தப் போருக்கு வித்திடுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே காரணமாயிருந்த கலிங்கத்தின் பாலூர்ப் பெருந்துறை, சித்திரா பௌர்ணமியின் அந்திமாலை நேரத்தில் இயற்கை வனப்பின் எல்லையை எட்டிக் கொண்டிருந்தாலும், இயற்கை வனப்புடன் இணையும் எத்தனை எத்தனையோ செயற்கைக் கஷ்டங்களையும் சுட்டிக்காட்டிக் கொண்டுதானிருந்தது.

மாலைக் கதிரவன் தன் மஞ்சள் நிறக் கதிர்களை எதிரேயிருந்த வங்கக் கடலின் நீலநிற அலைகளின்மீது பாய்ச்சி, மயில்துத்தத்தை தங்கமாக அடிக்கும் ரசவதியைப்போல, அலைகளின் நிறத்தைப் பொன்னிறமாக மாற்றிக்கொண்டிருந்தாலும், அந்த மாற்றமும் ரசவாதி அகன்றவுடன் மறைந்துவிடும் மாயா ஜாலத்தைப் போலவே, ஆதவன் மறைய அகன்று அகன்று சிருஷ்டியின் அநித்தியத்தை நிரூபித்துகொண்டிருந்தது.

அத்தகிரியில் தோன்றி மைஞ்சூரை, பூரணை, பிராணிஹிதை, பேன கங்கை, வேணு கங்கை, இந்திராவதி ஆகிய ஆறு உபநதிகளையும் சேர்த்தணைத்துக் கொண்டதால் பிரமாண்டமாகப் பெருகித் தொண்ணூறு காத தூரம் ஓடிவந்த களைப்பைப் போக்கிக்கொள்ள பாலூர்ப் பெருந்துறைக்கருகில் கடற் கணவனுடன் வேகமாக மோதிக் கலந்துவிட்ட புண்ணிய நதியான கோதாவரியின் வண்டல் கலந்த செந்நிற நீரும் ஆதவனுக்குத் துணை செய்து நீலக்கடலின் நிறத்தை சங்கமப் பகுதியில் சிறிது தங்கமாக மாற்றியதென்றாலும், மாலை நேரக் காற்றால் திரும்பத் திரும்ப எழுந்த பெரும் அலைகள் கோதாவரியின் பொன்னிற நீருக்கும், பழைய மயில் துத்தத்தின் நிறத்தையே அளித்துப் "பிற்காலத்தில் இந்தக் கலிங்கத்தின் பொன்னும் மணியும் சூறையாடப்படும், நிலைப்பது மதிப்பற்ற மயில் துத்தம் தான்" என்பதை அறிவுறுத்திக் கொண்டிருந்தன.

சில வருடங்களுக்குள்ளாகவே கலிங்க நாடு நிலைகுலைந்து கலங்கிப் போய் விடும் என்பதை முன்கூட்டி அறிவிக்க விரும்பியதுபோல் ஓரத்தே அடிக்கடி கலங்கிப் பொன்னிறம் பெற்ற வங்கக் கடல்நீரை வானிலிருந்து கவனித்த இரண்டொரு வெண்ணிற மேகங்களுக்கும் அந்திச்சூரியன் தனது பொன்னிறத்தைப் பூசத்தான் முயன்றான்.

ஆனால் அந்த மாயையிலிருந்து தப்ப முயன்றனபோல் மேகத் துண்டுகள் கிழக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தன. கோதாவரியின் முகத்துவாரத்தை அடுத்தாற்போல் பிரமாண்டமாக எழுந்த பெரும் கோட்டை மதில்களுக்குப் பின்னாலிருந்த அரண்மனை உப்பரிகை உச்சியில் தெரிந்த




**அன்பு வாசகர்களே!**
**வாசிப்புப் பழக்கத்தை மாணவர்களிடத்தே ஊக்குவிக்கவும் தமிழ்மொழி யின் ஆழத்தை உணர்த்திடவும் சாண்டில்யன் எழுதிய கடல்புறா சரித்திர நாவல் ஒவ்வொரு ஞாயிறும் உங்கள் சங்குநாதத்தில் தொடராக வெளிவரும். (ஆ-ர்)**

கலிங்கத்தின் பெருங்கொடி தனக்கு நிகரில்லை யெனக் காற்றில் படபடத்துக் கொண்டிருந் தாலும், எதிரே கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்ற பலநாட்டுக் கப்பல்களின் கொடிகள், அலைகளால் உந்தப்பட்ட நாவாய்கள் முன்னும் பின்னும் ஆடியதன் விளைவாக, தங்கள் கொடி மரங்களுடன் முன்னால் முன்னால் சாய்ந்து "சீக் கிரம் உனக்குத் தண்டனை இருக்கிறது ஆணவம் வேண்டாம்" என எச்சரித்துக் கொண்டிருந்தன.

அந்த நாவாய்களிலிருந்து கரையை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த வணிகப் படகுகளின் துடுப்புகள் சரேல் சரேலென்று துழாவப்பட்டதாலும் கரையோரம் வந்து இழுக்கப்பட்ட படகுகளாலும், படகிலிருந்து குதித்த வணிகர்களாலும், கரையோரத்திலும் சற்றுத் தள்ளியும் இருந்த கட்டுமரங்களில் மீன்பிடிக்க மீனவர் வீசிய வலைகள் பலமாகப் பல இடங்களில் இழுக்கப்பட்டதாலும், அந்த பெருந்துறையின் கரையோர நீர் பெரிதும் குழம்பியும் கலங்கியும் இருந்தது.

தமிழர்கள் அதிகமாகக் குடியேறியதால், தமிழகத்தில் சாதாரணமாக வைக்கப்படும் ஊர்ப் பெயரைப் போல கலிங்கத்தின் அந்தப் பெருந்துறைக்குப் பாலூர் என்று பெயர் வைக்கப்பட்டிருந்தாலும், அந்த பெயரைப் "பாலூரா" என்று கிரேக்க வணிகர்களும், அரேபியரும் சீனத்தவரும் அழைத்தார்களாதலால் சரித்திரத்தில் பாலூரா என்றே அந்தத் துறைமுகத்தின் பெயர் நிலைத்து விட்டது.

இருப்பினும், பாலுக்கும் அந்த ஊருக்கும் சம்பந்தமில்லை என்பதைச் சுட்டிக் காட்ட இஷ்டப்பட்டவன்போல் சித்திரா பௌர்ணமி தினத்தின் அந்த மாலை நேரத்தில் கதிரவன் மறையும் சிறிது நேரத்திற்கு முன்பாகவே தன் பால் நிறத்தை வெளிக்குக் காட்டாமல் ஏதோ பெருங்கோபத்துடன் விழிப்பவன்போல் சிவந்த பந்தாக முழுச் சந்திரனும் மெல்ல வானவெளியில் தோன்றினான்.

தங்கச்சூரியன் மறைய முற்பட்டுத் தங்கமதி தலையெடுத்த பின்பு பாலூர்ப் பெருந்துறையின் அழகு முன்னை விடப் பன்மடங்கு அதிகமாகக் கண்ணையும் இதயத்தையும் கவர்ந்தது. அத்துடன் அந்தத் துறைமுகத்தே வேதனையும் கூச்சலுங்கூடக் கலந்துதான் கிடந்தது. அந்த மாலைநேரத்தில் நகருக்குள்ளிருந்து திடீரென வானத்தில் கூட்டமாக பறந்து வந்து எதையோ மறந்து வைத்து விட்டனபோல் வெகு வேகமாகக் கூட்டமாகவே திரும்பிய புள்ளினங்கள் பாடிச் சென்ற இசை காதுக்கு மிக இன்பமாக இருந்ததென்னமோ உண்மைதான்.

ஆனால், துறைமுகக் கரையில், இழுக்கப்பட்ட படகுகளிலிருந்து பெரும் பொதிகளை இறக்கி மூட்டைகளைத் தோள்மேல் சுமந்து சுங்கக் கொட்டடிக்குச் சென்றுகொண்டிருந்த ஊழியர் கூட்டம் சுமைகளை ஏற்றிக்கொள்ளப் போட்ட சத்தமும் சுமந்து சென்றபோது போட்ட முனகலும், இன்பமான இந்த துறைமுகத்தில், மாந்தர் துன்ப மூச்சு விடும் காலம் அதிக தூரத்தில் இல்லையென்பதை அறிவுறுத்தின.

அத்துடன் கடற்கரையின் அலை ஓரத்திலிருந்து சற்று தூரத்தேயிருந்த சுங்கச் சாவடிகளை நோக்கிப் போடப்பட்டிருந்த ஒரே ஒரு பெரும் கப்பிச்சாலையில் தென்கலிங்கத்தின் பெரும் மாடுகள் இழுத்துச் சென்ற நானா தேசத்துப் பொதி மூட்டைகளும் பெட்டிகளும் கர்ண கொடூரமான சத்தத்தை விளைவித்தன. வண்டிகளில் ஏற்றப்பட்ட பெரும் சுமையைத் தாளாத மாடுகள் விட்ட பெருமூச்சையும், ஆயாசத்தையும் தலைதூக்கிப் பார்த்த கரையோரக் கடல் நாரைகள், "குவா குவா" என்று தங்கள் நீண்ட அலகுகளை விரித்துப் பரிகசித்துப் பிறர் துன்பப்படுவதைப் பார்த்து மகிழ உலகத்தில் ஜீவராசிகள் என்றும் உண்டு என்பதை நிரூபித்தன.

இப்படி இன்பத்தையும், துன்பத்தையும் கலந்து புகட்டிக்கொண்டிருந்த பாலூர்ப் பெருந்துறை, மேல் நாட்டாரும் கீழ் நாட்டாரும், தூரக் கீழ்த்திசை நாடுகளுக்குச் செல்வதற்கு ஒன்று கூடும் ஒரே துறைமுகமாதலால், அந்தப் பெருந்துறையில் யவனரும், சீனரும், அரேபியரும், தமிழரும், ஆந்திரரும், வடநாட்டாரும் கலந்து காணப்பட்டது என்றும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்ததல்லாமல், நல்லெண்ணம் மட்டும் இருந்தால் உலகம் ஒன்று கூடுவது சாத்தியம் என்பதை வலியுறுத்திக் கொண்டும் இருந்தது.

இந்தக்கதை தொடங்கும் 1063 ஆவது வருடத்துச் சித்திரா பௌர்ணமியன்று வழக்கத்துக்கதிகமாகவே, பல நாட்டு மரக்கலங்கள் அங்கு கூடியிருந்ததால் பலதரப்பட்ட வெளிநாட்டவர் கூட்டம் அன்று துறைமுகத்தில் ஏராளமாகி, சிறு உலகம் ஒன்றே அங்கு சிருஷ்டியாகிவிட்டது போன்ற பிரமையை அளித்தது. தட்டை முகமும் மஞ்சள் நிறமும் உள்ள குள்ளச் சீனரும், ஆஜானுபாகுவாய் உஷ்ண பூமியின் விளைவாகக் கன்னிச் சிவந்தச் சிவப்புடன் காணப்பட்ட யவனரும் மொட்டையடித்துத் தலைக்குத் துணி கட்டி, தொள தொளத்த உடைகளுடன் உடைகள் நாலா பக்கமும் காற்றில் அலைய நடந்த சிவந்த மேனியும், திடகாத்திர தேகமும் உள்ள அரேபியரும் அதிக உயரமோ அதிக குள்ளமோ இல்லாத தமிழகத்தாரும் உயர்ந்தும் கனத்தும் பயங்கரமாக விளங்கிய நீக்ரோவரும் கலந்து நின்ற காட்சி, நவதானியங்கள் கலந்த மங்கலப் பாலிகை போல் அந்த பெருந்துறையை விளங்க வைத்தாலும், அந்தப் பாலிகைகளை உடைக்க விரும்பிய அமங்கலத் தூதர்கள்போல் கூட்டங்களை விலக்க முற்பட்ட கலிங்கத்தின் சுங்கக் காவல் வீரர்கள், "உம் இப்படி வா! அந்தப் புறம் போகாதே" என்று ஆணையிட்டு, சுங்கத்திலிருந்து யாரும் தப்ப முடியாதபடி கட்டுப்பாடு செய்து பொதி தூக்கும் ஊழியர்களை விரட்டிக் கொண்டிருந்தார்கள். அந்த விரட்டலுக்குப் பணியாத ஊழியர்களை மென்னியைப் பிடித்துச் சுங்கச் சாவடிகளின் பக்கம் தள்ளவும்செய்தார்கள். (தொடரும்)

சாண்டில்யன்

# இலங்கை அரசியலும் அரசியலமைப்புத் திருத்தங்களும்



கடந்த வாரத்திலே இலங்கை அரசியல் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது அரசியல் திட்டச் சீர்திருத்தம் பற்றிக் குறிப்பிடும் போது அந்த திருத்தத்தில் காணப்பட்ட குறைபாடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டது. தமிழர் தரப்பிலிருந்து நோக்கும் போது அதில் முக்கியமான குறைபாடுகளுள் ஒன்றாகக் காணப்படுவது தமிழரின் பூர்வீகத் தாயகமாக காணப்படும் வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு என்றவிடயமாகும். இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் தற்காலிகமாக இணைக்க முடியுமெனவும் அந்தத் தற்காலிக இணைப்பை உறுதிப்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் ஜனாதிபதி கையொப்பமிட வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.


அதனால் தான் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ரணசிங்க பிரேமதாஸ, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா குமாரதுங்க போன்றவர்கள் தமது பதவிக்காலங்களின் போது தற்காலிக இணைப்பை உறுதிப்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் கையொப்பமிட்டு வந்தனர். இந்த தற்காலிக இணைப்பு 2005 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியின் கையொப்பம் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால் இந்த இணைப்புக்கெதிராக மக்கள் விடுதலை முன்னணி உயர் நீதிமன்றில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது. அப்போது உயர்நீதிமன்ற நீதியரசராக இருந்த சரத் என் சில்வா தலையிலான ஏழு நீதியரசர்கள் கொண்ட நீதிபதிகள் குழாம் ஜே.வி.பியின் மனுவைப் பரிசீலித்து தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பின்படி வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. அதாவது இந்த இணைப்பு தற்காலிகமானது என்றும் பாராளுமன்றத்தினால் சட்டத்தால் அங்கீகரிக்கப்படாமல் ஜனாதிபதி ஒவ்வொரு ஆண்டும் கையொப்பமிட்டு நீடிக்க முடியாதென்றும் சரத் என் சில்வா தனது தீர்ப்பை வெளியிட்டிருந்தார்.

ஏழுபேர் அடங்கிய நீதியரசர்கள் குழாமில் இரண்டு நீதியரசர்கள் வடக்குக் கிழக்கு மாகாணம் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருப்பதை பிரிக்க விரும்பவில்லை. இருந்தபோதிலும் ஐந்து நீதியரசர்கள் அதற்கு சம்மதம் தெரிவித்ததால் பெரும்பான்மைத் தீர்ப்பாக தற்காலிகமாக இருந்த அந்த இணைப்பு இரத்துச் செய்யப்பட்டது.

வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்பென்பது இலங்கை,இந்தியா என்ற இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டதொன்று. இவ்வாறான ஒரு சர்வதேச ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஏற்பாட்டை குறித்த ஒரு திறத்தவர்கள் மீறினால் அதற்கெதிராக பாதிக்கப்பட்ட நாடு சர்வதேச நீதிமன்றில் **(International Court of Justices -ICJ)** முறையிட முடியும். அவ்வாறு ஏன் இந்தியா சர்வதேச நீதிமன்றத்தை நாடவில்லை என்ற நியாயமான கேள்வியும் கூடவே எழுகின்றது. இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான நெருக்கமான இராஜதந்திரத் தொடர்புகள் இவ்வாறு செய்வதிலிருந்து இந்தியாவைத் தடுத்திருக்கக் கூடும்.

### 14 ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (24.05.1988)



இந்தத் திருத்தமானது நடைமுறையிலுள்ள யாப்பலிருந்த சில குறைபாடுகளை நீக்குவதற்காக கொண்டுவரப்பட்டதொன்றாகும். விகிதாசார பிரதிநிதித்துவ முறை மற்றும் தேர்தல் பிரிவுகளைப் பிரிப்பது என்பன தொடர்பான சட்டங்கள் இங்கு உள்வாங்கப்பட்டன. இத்திருத்தத்தின்படி ஒரு தேர்தல் பிரிவிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட வாக்காளர் தொகையில் 1/8 பங்கினைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விதி அறிமுகப்படுத்தப்பட்டது.

### 15 ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (17.12.1988)

இந்தத் திருத்தம் சிறிய கட்சிகளுக்கும் சுயேட்சைக்குழுக்களுக்கும் பாதுகாப்பளிக்கும் ஒரு திருத்தமாக காணப்படுகின்றது. அத்திருத்தத்தின் கீழ் 14 ஆவது திருத்தத்தின் கீழான ஏற்பாடான கட்சி அல்லது சுயேட்சைக்குழு ஒன்று வழங்கப்பட்ட மொத்த வாக்குத் தொகையில் குறைந்தபட்சம் 1/8 பங்கினைப்பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலை இந்தத் திருத்தத்தின் மூலம் 1/20 **(5%)** பங்கினைப் பெற்றால் போதும் என்ற நிலைக்கு குறைக்கப்பட்டது.

அதன்மூலம் சிறுபான்மை அரசியல் கட்சிகள் மற்றும் சிறு சுயேட்சைக் குழுக்களும் நன்மையடைந்தன. அவர்கள் சிறியளவேனும் ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியநிலை உருவானது. மக்கள் விடுதலை முன்னணி மற்றும் சிங்கள கெல உறுமய போன்ற சிறிய கட்சிகளும் கணிசமானளவு ஆசனங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஏதுநிலை தோற்றம் பெற்றது.

### 16 ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் (18.12.1988)

இலங்கை அரசியல் வரலாற்றில் அடுத்தடுத்த இரு நாட்களில் இரண்டு அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன (15 மற்றும் 16). இந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் நோக்கம் மாகாண சபைகள் நிறுவப்பட்டதன் பின்பு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய பல மாற்றங்களைச் சட்டமாக்குவதாகும். இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பில் மொழிகள் பாவனை சம்பந்தமான சட்டமூலங்களும் இத்திருத்தத்திற்குள் அடக்கப்பட்டது.

அதாவது இலங்கையில் மாகாண சபையின் அறிமுகத்தின் பின்னர் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் முன்னுரிமை வழங்கப்பட்ட விடயங்கள் சிலவற்றுக்கு தீர்வு காணவும், இலங்கையின் நிர்வாகத்துறையில் பலதரப்பட்ட மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் இத்திருத்தம் மூலம் மாற்றம் ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

இங்கு நாம் அவதானிக்கக் கூடிய ஒரு முக்கிய விடயம் யாதெனில், 1978 முதல் 1989 ஆம் ஆண்டுவரையுள்ள பத்தாண்டு காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட 16 திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டமையானது 5/6 பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த ஜெ.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலப்பகுதியிலாகும். அதிகூடிய பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றத்தில் ஜெ.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான அரசாங்கம் கொண்டிருந்தமையானது அரசியலமைப்பில் திருத்தங்களை இலகுவாக மேற்கொள்ள ஏதுவாக அமைந்தது. பல அரசியல் விமர்சகர்கள் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது உலகத் தலைவர்களுள் அரசியல் யாப்பினை தான் விரும்பியவாறு எந்



நேரத்திலும் திருத்தம் செய்வதற்கு பாக்கியம் பெற்ற நாட்டின் தலைவராக ஜெ.ஆர்.ஜெயவர்த்தன விளங்கினார் எனக் குறிப்பிடுகின்றனர்.

சர்வவல்லமை பொருந்திய நிறைவேற்று அதிகாரம்மிக்க ஜனாதிபதி ஆட்சி முறைமையே இவற்றுக்கு காரணமாக அமைந்தது என்றால் மிகையில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜெ.ஆர்.ஜெயவர்த்தனவின் வார்த்தைகளில் குறிப்பிடுவதானால் ஆணைப் பெண்ணாக்கவும் பெண்ணை ஆணாக்கவும் முடியாவிட்டாலும் அரசியலமைப்பை பொறுத்தவரை விரும்பியவாறு திருத்தங்களை மேற்கொள்ள முடிந்தது.

ஜெ.ஆர்.ஜெயவர்த்தனவின் பதவிக்காலத்தின் பின் 1988 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் குறைந்தளவு வாக்கு வித்தியாசத்தில் கடினமான வெற்றியைப் பெற்று ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இவர் **50.43%** வாக்குகளைப் பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் 1989 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் விகிதாசார பிரதிநிதித்துவ முறை மூலம் நடைபெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கட்சி வெற்றி பெற்றாலும் பாராளுமன்றத்தில் 2/3 அதிகூடிய பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இத்தேர்தலில் ஐ.தே.கட்சி நாடளாவிய ரீதியில் **50.7 %** வாக்குகளைப் பெற்று மாவட்ட ரீதியாக 110 ஆசனங்களையும் தேசியப்பட்டியல் மூலம் 15 ஆசனங்களுமாக மொத்தமாக 125 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. இதன் காரணமாக 1989 தொடக்கம் 1994 ஆண்டுவரை அரசியலமைப்புத் திருத்தங்கள் பற்றி சிந்திக்க முடியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் கொலைக்குப் பின்னர் இலங்கையின் அரசியலில் திருப்பங்கள் ஏற்பட்டன. 1977இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மிக மோசமான தோல்வியைச் சந்தித்து நீண்ட காலமாக எதிர்க்கட்சியில் இருந்த இலங்கைச்சுதந்திரக் கட்சிக்கு 1994 இல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது. அக்காலத்திலிருந்து 2000 ஆம் ஆண்டு வரை யாப்புச் சீர்திருத்தம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் 2000 இல் அரசாங்கம் சமர்ப்பித்த புதிய யாப்புச் சீர்திருத்தம் தோல்வியில் முடிவடைந்தது.

பாராளுமன்றம் அதனுடைய பதவிக்காலமான 6 ஆண்டுகள் முடிவடைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் 18 ஒகஸ்ட் 2000 அன்று ஜனாதிபதி சந்திரிகாவினால் கலைக்கப்பட்டது. பாராளுமன்றத் தேர்தல் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆம் திகதி நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்தது. இந்த அறிவிப்பு வருவதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் புதிய அரசியலமைப்பு ஒன்றை ஆக்குவது தொடர்பிலான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதன் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைவு அரசியலமைப்பு ஜனாதிபதிக்கிருந்த அபரிமிதமான அதிகாரங்களை நீக்கி பிரதமருக்கும் பாராளுமன்றத்திற்கும் அதிக அதிகாரங்களை வழங்கும் உத்தேச திட்டத்தைக் கொண்டிருந்தது.

இந்தத் தேர்தலை நடத்தி 2/3 பெரும்பான்மையைப் பெற்று புதிய அரசியலமைப்பை ஆக்குவதுதான் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவின் திட்டமாகவிருந்தது.

இந்தத் தேர்தலில் சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுக் கூட்டமைப்பு **45.11 %** வாக்குகளைப் பெற்று 107 ஆசனங்களையே பெற்றுக் கொள்ள முடிந்தது. இதன் காரணமாக சிறுபான்மை அரசாக இருந்த பொதுக்கூட்டமைப்பு பாராளுமன்றத் தேர்தலில் 10 ஆசனங்களைப் பெற்ற மக்கள் விடுதலை முன்னணியுடன் நெருங்கிச் செயற்பட வேண்டியேற்பட்டது. இந்த பொதுக்கூட்டமைப்பிற்கும் மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையிலான நல்லுறவு 17 ஆவது அரசியல் திட்ட சீர்திருத்த்திற்கு காரணமாக அமைந்தது.

இறைமையானது மக்களிடம் உள்ளதென அரசியலமைப்பின் உறுப்புரை 3 குறிப்பிடுகின்றது. அத்துடன் அது எவ்வாறு பிரயோகிக்கப்பட வேண்டுமென உறுப்புரை 4 குறிப்பிடுகின்றது. மக்களது உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் பாதுகாப்பதற்கும் அரசாங்கத்திற்கு ஓர் வழிகாட்டியாக அரசியலமைப்புக் காணப்படுகின்றது. எனினும் காலத்திற்குக் காலம் மக்களால் வழங்கப்பட்ட ஆணையை மீறி ஆட்சியாளர்கள் செயற்படுவதும் அரசியலமைப்புக்களிலுள்ள ஏற்பாடுகளை ஆட்சியாளர்கள் தமக்குச் சார்பாக மாற்றும் நிலைமையையும் காணக்கூடியதாகவுள்ளது.

(தொடரும்...)

-பிரணவன்-

# அமெரிக்காவுக்கு இடமளிக்குமா?

# இலங்கை அரசு

**50 ஆண்டுகளாக பாலோவ்வை அமெரிக்கா தனது பிடியில் வைத்திருந்தாலும், அங்கு இப்போது தான் தளத்தை அமைப்பதற்கு அடித்தளம் போடுகிறது. அதேவேளை, அமெரிக்காவின் பிரசன்னம் இல்லாத நாடுகளில், CAT குழுக்களை அனுப்பி, மூலோபாய ரீதியாக தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த முனைகிறது. இதற்கு இலங்கை இடம்கொடுக்குமா?**

அமெரிக்க பாதுகாப்புச் செயலர் மார்க் எஸ்பர், செப்டெம்பர் 30 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன், தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவதற்கு இரண்டு நாட்கள் முன்னதாக, பசுபிக் நாடாகிய பாலோவ்வுக்குப் பயணம் மேற் கொண்டிருந்தார்.

இலங்கையின் தென்பகுதிக்கு நேர் கிழக்காக இந்தோனேசியா, சிங்கப்பூர், புரூணை, பிலிப்பைன்ஸ் போன்றவற்றுக்கு அப்பால், பப்புவா நியூகினியாவுக்கு வடக்காக இருப்பது தான் பாலோவ் குடியரசு.

இது சுமார் 340 தீவுகளைக் கொண்ட ஒரு தேசம். இதன் மொத்த குடித்தொகை வெறும் 20 ஆயிரத்துக்குள் தான் இருக்கிறது.

பெரிய தீவான - சுமார் 60 சதுர கி.மீ பரப்பளவுள்ள தலைநகர் **Koror** இல், அதிகபட்சம் 12 ஆயிரம் பேர் வரை வசிக்கிறார்கள்.

இரண்டு சிறிய தீவுகளைக் கொண்ட ஒரு சதுர கிலோ மீற்றர் கூட பரப்பளவைக் கொண்டிராத, பாலோவ்வின் 16 ஆவது மாகாணமான, **Hatohobei** இல், 25 பேர் மாத்திரமே வசிக்கிறார்கள்

சுயாட்சி பெற்ற குடியரசு நாடாக இருந்தாலும், அமெரிக்க டொலர் தான் புழக்கத்தில் உள்ளது. இங்கு தனியான இராணுவம் இல்லை, இதன் பாதுகாப்பு அமெரிக்காவிடமே இருக்கிறது. இங்குள்ளவர்கள் 500 பேர் அமெரிக்க படைகளில் பணியாற்றுகிறார்கள்.

3000 ஆண்டுகளாக கிழக்காசிய குடியேற்றவாசிகள் வாழ்ந்து வரும் இந்த நாட்டை, 16 ஆம் நூற்றாண்டில் ஸ்பானியர்கள் கண்டுபிடித்தனர்.

அதன் பின்னர், ஸ்பானியர்கள், ஜேர்மனியர்கள், ஜப்பானியர்கள் என்று கைமாறி, இப்போது அமெரிக்கர்களிடம் இருக்கிறது இந்த நாடு.

முதலாம், இரண்டாம் உலகப் போர்களின் போது, கடும் உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்த இடங்களில் இதுவும் ஒன்று.

இங்கு அமெரிக்காவின் தளம் இல்லை. ஆனால், அமெரிக்க இராணுவத்தின் மறைமுகமான பிரசன்னம் இருக்கிறது.

அமெரிக்க பாதுகாப்புச் செயலர் மார்க் எஸ்பர் இங்கு பயணத்தை மேற்கொண்டிருந்த போது, பாலோவ் அரசாங்கம், அவரிடம், தென்சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கத்தை முறியடிக்க தமது நாட்டில் நிரந்தரத்தளத்தை அமெரிக்கா அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளது. பாலோவ்வில் மார்க் எஸ்பர் பயணம் மேற்கொண்டிருந்த போது அங்கு பணியாற்றும் CAT எனப்படும் Civic Action Teams உடன் கலந்துரையாடியிருந்தார்.

அப்போது அவர், பாலோவ்வுக்கு வெளியே இத்தகைய குழுக்களை அனுப்புவதற்கான வாய்ப்புகள் குறித்து பேசியிருக்கிறார்.

ஏன் இவ்வாறான குழுக்களை ஏனைய நாடுகளுக்கு அனுப்பக்கூடாது என்று Military Times இற்கு வழங்கிய செவ்வி ஒன்றில் கேள்வியும் எழுப்பியிருக்கிறார்.

முதலில், CAT எனப்படும் Civic Action Teams பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

CAT எனப்படுவது அமெரிக்க படைகளின் ஒரு அங்கம்தான். பொறியியலாளர்கள் போன்ற துறைசார் வல்லுநர்களைக் கொண்ட ஒரு குழு.

பாலோவ் குடியரசில், 50 ஆண்டுகளாக CAT குழுக்கள், இயங்குகின்றன. ஆனால் நிலையாக அல்ல.


அமெரிக்க இராணுவம், கடற்படை, விமானப்படை என, மாறி மாறி, இங்கு பொறியியலாளர் குழுக்களை அனுப்புகின்றன.

6 மாதங்களுக்கு அங்கு தங்கியிருக்கும் இந்த CAT குழுக்கள், தீவில் கட்டடங்களை அமைத்தல், பழுது பார்த்தல், பாலங்களை அமைத்தல், மருத்துவ முகாம்களை நடத்துதல் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை வழங்குவதுடன், தீவில் உள்ளவர்களுக்கு தொழில்சார் பயிற்சிகளையும் அளித்து வருகிறது.

இது பாலோவ் மக்களுடன் இணைந்து கொள்வதற்காக, அவர்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்காக அமெரிக்க படைகளால் கையாளப்படும் ஒரு வழிமுறை.

அமெரிக்காவின் முப்படைகளையும் சேர்ந்த CAT குழுக்கள், இங்குள்ள மக்களை மகிழ்விக்கும் பல்வேறு செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றன.

அதாவது வாகனங்களை இலவசமாக பழுதுபார்த்துக் கொடுப்பது, விளையாட்டு மைதானங்களை அமைப்பது, இரவில் சினிமா படங்களை திரையிட்டுக் காட்டுவது, வானொலி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதிலும்கூட இந்த குழுக்கள் ஈடுபடுகின்றன.



குறைந்த செலவில் இராஜதந்திரத்தை செயற்படுத்துவதற்கான மிகப் பெரிய சொத்து என்று இவர்களை வர்ணித்திருக்கிறார் மார்க் எஸ்பர்.

ஏனைய நாடுகளிலும் இது போன்ற CAT குழுக்களை, சுழற்சி முறையில் ஈடுபடுத்துவதற்கு அமெரிக்கா விரும்புகிறது. அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் கட்டளைப் பீட மூலோபாயத்தின் ஒரு பகுதியாக இந்தக் குழுக்களை பயன்படுத்தலாம் என்று அமெரிக்கா கருதுகிறது.

ஜப்பானிலும், தென்கொரியாவிலும் உள்ள நிரந்தரத் தளங்களுக்கு அப்பால், அமெரிக்காவின் மூலோபாய நலன்களைப் பேணுகின்ற ஒரு அம்சமாக இவற்றைக் கையாள முனைகிறது.

இதனை இந்தோ-பசுபிக் கட்டளை பீடத்தின் அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

நிலையான தளங்களை வைத்திருப்பதற்குப் பதிலாக, இந்தோ -பசுபிக்கில், அமெரிக்காவின் பிரசன்னம் இல்லாத நாடுகளில் இந்த CAT குழுக்கள் ஊடுருவக்கூடும் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ்வாறு CAT குழுக்கள் நுழையக் கூடிய நாடுகளில் ஒன்றாக இலங்கையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பங்களாதேஷ், கம்போடியா, இலங்கை அல்லது இந்தோனேசியா ஆகிய நாடுகளில் அமெரிக்காவின் CAT குழுக்களின் பிரசன்னம் எதிர்பார்க்கப்படுகிறது.

50 ஆண்டுகளாக பாலோவ்வை அமெரிக்கா தனது பிடியில் வைத்திருந்தாலும், அங்கு இப்போது தான் தளத்தை அமைப்பதற்கு அடித்தளம் போடுகிறது.

அதேவேளை, அமெரிக்காவின் பிரசன்னம் இல்லாத நாடுகளில், CAT குழுக்களை அனுப்பி, மூலோபாய ரீதியாக தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த முனைகிறது.

இதற்கு இலங்கை இடம் கொடுக்குமா? என்ற கேள்விக்கு அடுத்து வருவோம்.

அமெரிக்க பாதுகாப்புச் செயலர், பாலோவ்வுக்குப் பயணம் மேற்கொண்டு, அங்கு செயற்படும், CAT குழுக்களை ஏனைய நாடுகளிலும் ஈடுபடுத்துவதற்கான யோசனை குறித்து ஆராய்ந்து கொண்டுதான், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியிருக்கிறார்.

CAT குழுக்களை இலங்கையில் ஈடுபடுத்துவது குறித்து இதன்போது பேசப்பட்டதா? என்று தெரியாது.

ஆனால் ஏற்கனவே அமெரிக்காவின் பசுபிக் கட்டளை பீடம் CAT போன்ற வேறு சில குழுக்களை தற்காலிகமாக இலங்கையில் செயற்படுத்துவதற்கான நகர்வுகளை முன்னெடுத்திருக்கிறது.

பசுபிக் கட்டளைப் பீடத்தினால், மனிதாபிமான உதவிப் பணிகள், மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

அதுமாத்திரமன்றி, அனர்த்த காலங்களில் பொதுமக்கள் தங்கக்கூடிய எல்லா வசதிகளையும் உள்ளடக்கிய பாடசாலைகளை வடக்கு, கிழக்கில் அமைக்கும் யோசனையையும் பசுபிக் கட்டளை பீடம் முன்னர் முன்வைத்தது.

ஆனால் அமெரிக்காவின் இந்த திட்டத்துக்கு முன்னைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இணங்கவில்லை.

இப்போதுகூட CAT குழுக்களை இலங்கைக்குள் ஊடுருவ அரசாங்கம் அனுமதிக்குமா? என்பது சந்தேசம் தான்.

எனினும் அதற்கு அமெரிக்கா அழுத்தங்களைக் கொடுக்கக் கூடும்.

இறைமை, சுதந்திரம் பற்றி அதிகளவில் பிரசாரங்களை முன்னெடுத்து ஆட்சியைப் பிடித்த அரசாங்கம் அமெரிக்காவின் CAT குழுக்களை இங்கு அனுமதிக்க இணங்கினால், பெரும் சர்ச்சைகள் வெடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

**சுபத்ரா**

# குறிவைக்கப்படும் 13-வது சட்டத்திருத்தம்

நவம்பர் 2019 ஜனாதிபதித் தேர்தலிலும், ஒகஸ்ட் 2020 பொதுத் தேர்தலிலும் ராஜபக்ஷக்கள் வென்ற பிறகு, இலங்கை அரசமைப்பின் இரண்டு முக்கியமான சட்டங்கள் மீது எல்லோருடைய கவனமும் குவிந்துள்ளது. ஒன்று, 19 ஆவது சட்டத் திருத்தம் இது ஜனாதிபதியின் வானளாவிய அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும் பாராளுமன்றம், சுயேச்சையான ஆணையங்கள் ஆகியவற்றை வலுப்படுத்தவும் 2015 இல் கொண்டுவரப்பட்டது. ராஜபக்ஷ அரசாங்கமானது ஏற்கனவே 20ஆவது சட்டத் திருத்தத்தின் வரைவை உருவாக்கி அரசிதழில் வெளியிட்டது. அதிக கவனத்துக்கு உள்ளாகியிருக்கும் இன்னொரு சட்டமானது, 1987இல் நிறைவேற்றப்பட்ட 13ஆவது சட்டத் திருத்தம். இது அந்த நாட்டின் 9 மாகாணங்களை ஆள்வதற்கு ஏதுவான வகையில் மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை வழங்குகிறது.


### 13ஆவது சட்டத் திருத்தம் என்ன சொல்கிறது?


1987இல் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இடையிலான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவு இந்தச் சட்டமாகும்.

முழு அளவிலான உள்நாட்டுப் போராக உருவாகிய இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சி அது. மாகாண சபைகளின் உருவாக்கத்துக்கு வழிவகுத்த 13ஆவது சட்டத் திருத்தமானது சிங்களவர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகள் உட்பட 9 மாகாணங்களும் சுயாட்சி மேற்கொள்ளும் வகையில் அதிகாரப்பகிர்வு கிடைப்பதற்கு உறுதிப்படுத்தியது.

கல்வி, ஆரோக்கியம், விவசாயம், வீட்டுவசதி, காணி, பொலிஸ் போன்ற பிரிவுகளில் மாகாண நிர்வாகங்களுக்கு அதிகாரம் தரப்பட்டது. ஆனாலும், நிதி அதிகாரங்களில் உள்ள கட்டுப்பாடுகள் காரணமாகவும், ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டிருந்த அளவுக்கதிகமான அதிகாரங்கள் காரணமாகவும் மாகாண நிர்வாகங்களால் பெரிதும் முன்னேற்றம் காண முடியவில்லை.

குறிப்பாக, பொலிஸ், காணி போன்ற பிரிவுகளில் வழங்கப்பட்டிருந்த அதிகாரங்கள் அமுலாக்கப்படவேயில்லை. ஆரம்பத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டு வட-கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டது. ஆனால், 2007 இல் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி இந்த இரண்டும் பழையபடி பிரிக்கப்பட்டன.





> **அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டது என சிங்களவர்களும் அதிகாரங்கள் போதாது என விடுதலைப் புலிகளும் 13 ஐ எதிர்த்தனர்.**

### இது ஏன் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது?

13ஆவது சட்டத் திருத்தமானது இலங்கையின் உள்நாட்டுப் போர் நடந்த ஆண்டுகளின் பொதியைக் கணிசமாகச் சுமந்துகொண்டிருந்தது. அது ஒரே நேரத்தில் சிங்கள தேசியக் கட்சிகளாலும் விடுதலைப் புலிகளாலும் முழுமூச்சாக எதிர்க்கப்பட்டது. அளவுக்கு அதிகமான அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டதாக சிங்கள தேசியர்களும், மிகக் குறைவான அதிகாரங்களே பகிர்ந்தளிக்கப்பட்டதாக விடுதலைப் புலிகளும் கருதினார்கள். இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து ஆயுதமேந்திய இடதுசாரி தேசியக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன உட்பட சிங்கள அரசியலில் பெரும்பான்மையானோர் இந்த ஒப்பந்தத்தையும் அதன் விளைவான சட்டத்தையும் இந்தியத் தலையீட்டின் தாக்கம் என்று கருதினார்கள்.

சக்திவாய்ந்த ஜனாதிபதியான ஜெயவர்த்தன இதில் கையெழுத்திட்டிருந்தபோதும் அண்டை நாடு ஒன்று தனது மேலாதிக்கத்தைத் திணித்த முயற்சியாகவே அது பரவலாகப் பார்க்கப்பட்டது. தீவிர தமிழ்த் தேசியர்கள் உட்பட தமிழ் அரசியல் உலகில் அது போதுமானதாக இல்லை என்றே கருதப்பட்டது. சமீபத்திய தேர்தலில் பின்னடைவைச் சந்திக்கும் வரை நாடாளுமன்றத்தில் வடக்கு, கிழக்கு தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களான 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்' உள்ளிட்ட சிலர் இதை ஒரு முக்கியமான தொடக்கப் புள்ளி யாகவும், மேற்கொண்டு முன்செல் வதற்கான பாதையாகவும் கருதினார்கள்.

### 13-வது சட்டத் திருத்தம் ஏன் முக்கியமாகிறது?

தமிழர் பிரச்சினை குறித்துப் பேசும் ஒரே அரசமைப்புச் சட்டப் பிரிவாக 13-வது சட்டத் திருத்தம் மட்டுமே இன்று வரை இருந்து வருகிறது. சில அதிகாரப் பகிர்வுகள் மட்டுமல்லாமல் 1980 களிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான நல்விளைவுகளின் பகுதியாக இது கருதப்படுகிறது. முக்கியமாக, 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து சிங்கள-பௌத்த பெரும் பான்மைவாதம் வளர்ந்துகொண்டிருக்கும் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது.

### இது நீக்கப்பட வேண்டும் என்று கேட்பது யார், ஏன்?

புதிய அரசு பதவியேற்றதிலிருந்து தற்போதைய அரசில் செல்வாக்கு மிக்கவர்களாக இருக்கும் அமைச்சர்களிலிருந்து மாகாண அமைச்சர்கள் உட்பட பலரும் மாகாண சபைகளை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று கோரிவருகிறார்கள். இந்தச் சபைகளை 'வெள்ளை யானைகள் (தேவையற்ற சுமை)' என்று அவர்கள் அழைக்கிறார்கள். ஒரு சிறிய நாட்டில், மாகாணங்களை மத்திய அரசே திறம்பட நிர்வகிக்க வேண்டும் என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

சிறுபான்மைத் தமிழர்களுக்கு எந்த அதிகாரத்தையும் பகிர்ந்தளிக்கக் கூடாது என்று சொல்லிவரும் எதிர்க் கட்சிகளும்கூட இந்த சட்டத் திருத்தத்தை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று கோருகின்றனர். ஆனால், இந்த அமைப்பைத் தீவிரமாக எதிர்த்த எல்லா அரசியல் முகாமைச் சேர்ந்தவர்களும் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிட்டார்கள். அடிமட்ட அளவிலும் அமைப்பு ரீதியிலும் தேசியக் கட்சிகள் தங்களை வலுப்படுத்திக் கொள்ள மாகாண சபைகள் காலப்போக்கில் உதவியிருக்கின்றன.

### ராஜபக்ஷ அரசின் நிலைப்பாடு என்ன?

2005இல் தொடங்கி இரண்டு முறை ஜனாதிபதியாக இருந்த கால கட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ 13-வது சட்டத் திருத்தத்தை அமுல்படுத்தப் போவதாகவும், அதில் உள்ள வழிவகைகளுக்குக் கூடுதலாக அம்சங்களைச் சேர்க்கப்போவதாகவும் அப்போது உறுதியளித்திருந்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க வடக்கு மாகாணத் தேர்தலை 2013-ல் நடத்தியது வரவேற்கத் தகுந்தது. ஆனால், அவரது அரசு காணி, பொலிஸ் ஆகிய அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளத் தயங்கியது. இலங்கையின் கடந்த கால வாக்குறுதிகள் குறித்து இந்தியா கொண்டிருந்த சந்தேகம் ஒன்றும் பெரிய ரகசியம் இல்லை.

2011இல் விக்கிலீக்ஸ் மூலம் 'த இந்து' ஆங்கில நாளிதழுக்குக் காணக்கிடைத்த அமெரிக்கத் தூதரகத்தின் தந்திகள் இதை உறுதிப்படுத்துகின்றன. பிரதமர் நரேந்திர மோடி இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றி ஒன்றுக்கும் மேற்பட்ட முறை குறிப்பிட்டிருக்கிறார். குறிப்பாக, இரு தரப்பிலும் பரஸ்பரம் சந்தித்துக்கொண்டபோது. ஆனால், புவியரசியலில் நிலவும் பாதுகாப்பற்ற தன்மை அதிகரித்துக்கொண்டிருக்கும் வேளையில், இலங்கையில் உள்ள தமிழர்களின் பிரச்சினையில் இந்தியா எந்தளவுக்குத் தலையிட முடியும் என்பது கேள்விக்குரியது என்றே இலங்கையிலுள்ள அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

தமிழர் பிரச்சினை குறித்துப் பேசும் ஒரே அரசமைப்புச் சட்டப் பிரிவாக 13வது சட்டத் திருத்தம் மட்டுமே இருந்து வருகிறது. சில அதிகாரப் பகிர்வுகள் மட்டுமல்லாமல் 1980 களிலிருந்து பெறப்பட்ட சில முக்கியமான நல்விளைவுகளின் பகுதியாக இது கருதப்படுகிறது. முக்கியமாக, சிங்கள-பௌத்த பெரும்பான்மைவாதம் வளர்ந்து கொண்டிருக்கும் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது! இவை தெளிவாகப் புலப்படுகின்றன.

த ஹிந்து

# சீமானிசம் பிரபாகரனிசம் 'நாம் தமிழர்' தகராறுகள்

**"சீமான் தன்னை மட்டுமல்ல பிரபாகரனையும் சேர்த்து கேலிப் பொருளாக மாற்றுகிறார்' என்று ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் கண்டனங்கள் வலுத்தன. 'சீமான் பொய் சொல்கிறார். அவர் பிரபாகரனைச் சந்தித்ததே எட்டே நிமிடங்கள் தான்" என்றார் வைகோ. கொளத்தூர்மணியும் சீமானின் 'தமிழீழ சமையல் சாதம், ஆமைக்கறி பிரமாதம்' பேச்சுகளை மறுத்தார்."**



**2009** இலங்கை இறுதிப் போரை யடுத்து, ஏற்கனவே சி.பா.ஆதித் தனாரால் நடத்தப்பட்ட 'நாம் தமிழர் கட்சி' என்னும் பெயரைத் தூசுதட்டி எடுத்து 2010 இல் கட்சியைத் தொடங்கினார் சீமான்.

**"உறவுகளே"**

சீமான் தன் கட்சித் தொண்டர்களை இப்படித்தான் அழைப்பார். அந்த உறவுகளில் ஏற்பட்டுள்ள பிரிவும் பிரச்சினைகளும்தான் இப்போது பரபரப்பாகப் பேசப்படுகின்றன. என்ன ஆச்சு நாம் தமிழர் கட்சிக்கு?

கொளத்தூர் மணி, கோவை ராமகிருஷ்ணன், ஆனூர் ஜெகதீசன், விடுதலை ராசேந்திரன் ஆகியோர் இணைந்து உருவாக்கிய 'தந்தை பெரியார் திராவிடர் கழக' மேடைகளில் பகுத்தறிவு, தமிழின உணர்வு, ஈழ ஆதரவு, சாதி மறுப்பு ஆகியவற்றைப் பேசக்கூடிய பேச்சாளராக அரசியல் உலகத்துக்கு அறிமுகமானார் சீமான்.

2009 இலங்கை இறுதிப்போரை யடுத்து, ஏற்கனவே சி.பா.ஆதித்தனாரால் நடத்தப்பட்ட 'நாம் தமிழர் கட்சி' என்னும் பெயரை தூசுதட்டி எடுத்து 2010 இல் கட்சியைத் தொடங்கினார் சீமான். திராவிடக் கட்சிகளின்மீது அதிருப்தியில் இருந்தவர்கள், 2009 இற்குப் பிறகு ஈழ ஆதரவு அரசியலைப் பேசிய இளைஞர்கள் என இருதரப்பினரையும் தன் பேச்சால் கவர்ந்தார் சீமான்.

2012 இல் வெளியிடப்பட்ட 'நாம் தமிழர் கட்சி ஆவணம்', தமிழ்பேசும் சாதிகள்தான் தமிழர்கள் என்று வரையறுத்து, பட்டியலினத்தைச் சேர்ந்த அருந்ததியர், மலைவாழ் மக்கள், உருது பேசும் முஸ்லிம்கள் எனப் பலரையும் தமிழர் அடையாளத்திலிருந்து தள்ளிவைத்தது. 'கன்னடரான பெரியார் தமிழர்களின் விரோதி' என்று நாம் தமிழர் கட்சியினர் விமர்சித்தது, 'ஆடு மேய்ப்பதை அரசு வேலையாக்குவேன்', 'சிங்களர்களால் நம் மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க, எங்கள் ஆட்சியில் ஐம்பதாயிரம் பேரைக் கொண்ட சிறப்புக் காவல் படை அமைப்போம்' என்றெல்லாம் அவ்வப்போது அதிரடிக் கருத்துகளை அள்ளிவிடுவது, பகுத்தறிவு பேசிய சீமான் திடீரென்று 'வீரத் தமிழர் முன்னணி'யை ஆரம்பித்து, 'முப்பாட்டன் முருக'னுக்குக் காவடி தூக்கியது என்று தொடர்ந்து சர்ச்சைகளில் சிக்கியது 'நாம் தமிழர்.'

இவையெல்லாம்கூட கொள்கை அடிப்படையில் சீமானிடம் ஏற்பட்ட மாற்றங்கள். ஆனால் சீமான் தன் பிம்பத்துக்குத் தானே குழி தோண்டியது, ஈழம் - பிரபாகரன் சந்திப்பு குறித்த பேச்சுகளின்போதுதான். 'அண்ணன் என்னை ஆமைக்கறி சாப்பிடச் சொன்னார்', 'பிரபாகரன் நாற்பதாயிரம் தொன் உள்ள அவுஸ்திரேலிய அரிசிக் கப்பலை சுட்டுப்பழகப் பயிற்சி கொடுத்தார்', 'பிரபாகரன் நான் சாப்பிடும்போது என்னென்ன சாப்பிடுகிறேன் என்று குறிப் பெழுத ஒருவரை நியமித்தார்', 'பொட்டு அம்மான் வீட்டில் சாப்பிட்ட இட்லியை உடைத்துப்பார்த்தால் உள்ளே கறி இருந்தது' என்றெல்லாம் அவர் பேசிய பேச்சுகள் சீமானைக் கேலிப்பொருளாக்கின. 30 ஆண்டுகள் ஆயுதப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த ஒரு விடுதலை இயக்கத்தை 'தமிழீழ முனியாண்டி விலாஸ்'-ஆக சீமான் மாற்றுகிறார் என்று குற்றச்சாட்டுகள் வலுத்தன. 'சீமான் தன்னை மட்டுமல்ல, பிரபாகரனையும் சேர்த்து கேலிப்பொருளாக மாற்றுகிறார்' என்று ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் கண்டனங்கள் வலுத்தன. 'சீமான் பொய் சொல்கிறார். அவர் பிரபாகரனைச் சந்தித்ததே எட்டே நிமிடங்கள்தான்" என்றார் வைகோ. கொளத்தூர்மணியும் சீமானின் 'தமிழீழ சமையல் சாதம், ஆமைக்கறி பிரமாதம்' பேச்சுகளை மறுத்தார். இதனாலேயே சீமான் கடும் கண்டனங்களுக்கும் கிண்டல்களுக்கும் ஆளானார். சரி, இப்போது நாம் தமிழர் கட்சியிலிருந்து வெளியேறிய கல்யாணசுந்தரமும் ராஜீவ் காந்தியும் என்ன குற்றச்சாட்டுகளை முன்வைக்கிறார்கள்?

'தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் வசூலிக்கப்பட்ட நிதிக்கு முறையான கணக்குவழக்குகள் இல்லை. 'மது அருந்தக்கூடாது, புகை பிடிக்கக்கூடாது' என்று மேடையில் பேசிவிட்டு சீமான் மது அருந்துகிறார், புகைபிடிக்கிறார். நாங்கள் போன் செய்தால் சீமான் எடுப்பதில்லை, எஸ்.எம்.எஸ் அனுப்பினால் பதில் அனுப்புவதில்லை.' இதற்கு சீமானின் பதில்கள் என்ன?

"அவர்கள் என் மனதைப் புண்படுத்தியதால்தான் நான் போனை எடுப்பதில்லை. அவர்கள் கட்சியை வளர்க்கவில்லை, அவர்களைத்தான் வளர்த்துக்கொண்டார்கள். பேஸ்புக்கில் எனக்கு எதிராகப் போடப்படும் பதிவுகளை அவர்கள் தடுப்பதில்லை.'

மொத்தச்சண்டையே 'சிகரெட் குடிக்கிறார், பேஸ்புக் பதிவு, போனை எடுக்கவில்லை' என்கிற தனிப்பட்ட குற்றச்சாட்டுகளாக இருக்கின்றனவே தவிர, கொள்கை ரீதியிலான பிரச்சினைகளாகத் தெரியவில்லை. "சீமானிசத்தை ஏற்கமாட்டோம் என்கிறார்கள்" - இது சீமானின் ஆதங்கம். "நாங்கள் பிரபாகரனிசத்தைத்தான் ஏற்போம்" - இது கல்யாணசுந்தரத்தின் பதில்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று 30 ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளே 'பிரபாகரனிசம்' என்று எதையும் முன்வைத்ததில்லை.

சமூகத்தின் பிரச்சினைகளுக்கான காரணங்கள், அதன் இயங்குநிலை, தீர்வுகள் குறித்த தத்துவப்பார்வைகளே 'இயம்' என்று அழைக்கப்படுகின்றன. மார்க்சியம், அம்பேத்கரியம், பெரியாரியம் என்பவை இந்த அடிப்படையிலானவைதான். தத்துவத்தைச் செயற்படுத்துபவர்கள், போராளிகள் எவ்வளவு முக்கியமானவர்களாக இருந்தாலும் அவர்கள் பெயரால் சேகுவேராயிசம், காஸ்ட்ரோயிசம், நல்லகண்ணுயிசம் என்றெல்லாம் அழைக்கப்படுவதில்லை. எனவே, 'சீமானிசமா, பிரபாகரனிசமா' சண்டைகளில் எந்த அர்த்தமும் இல்லை.

மேடைகளில் சீமானின் உடல் மொழியிலேயே பேசும் கணிசமான இளைஞர்களைச் சீமான் உருவாக்கியிருக்கிறார். சாதாரணமாகப் பேசிக் கொண்டிருக்கும்போதே, கொசுபேட் அடிப்பதைப்போல சட்டென்று கைகளை உள்வாங்கி, மைக் உள்ள மேசையில் அடித்து உரத்த குரலெழுப்பிப் பேசுவது, ஏற்ற, இறக்கப்பேச்சுகள்ளென்று அப்படியே டிட்டோ சீமான்கள். ஆனால் அவர்களுக்கான எதிர்காலப் பாதைதான் என்ன?

'பொதுத்தொகுதிகளில் பட்டியலினத்தவர் போட்டி' 'கூட்டணி இல்லை', 'மகளிருக்கு 50 சதவிகித இடங்கள்' ஆகிய சீமானின் முயற்சிகள் நிச்சயம் பாராட்டத்தக்கவை.

ஆனால் நடைமுறை யதார்த்தத்தில் 1969இல் இருந்து இங்கே பெரிய கட்சிகள்கூட கூட்டணி வைத்தே வெற்றிபெற்றிருக்கின்றன. நாம் தமிழர் கட்சியின் வாக்குவங்கி அதிகரிக்கிறது, சில இடங்களில் மூன்றாம் மற்றும் நான்காமிடம் கிடைக்கிறது. ஆனால் இவையெல்லாம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றப் போதாது. ஒவ்வொரு தேர்தலிலும் செலவழித்து, பணமிழந்து அதன்பின் ஒதுங்கிப்போகிற நாம் தமிழர் தம்பிகள் எத்தனையோபேர்!

தேர்தல் அரசியலிலும் நடைமுறை யதார்த்தைப் புரிந்து கொள்ளவில்லை. லட்சியவாதத்திலும் சாத்திய மற்ற, நம்ப முடியாத பேச்சுகளால் கிண்டலுக்கு ஆளாகும்நிலை. தன்னை நம்பி வந்த ஆயிரக்கணக்கான தொண்டர்களின் நம்பிக்கைக்கும் எதிர்கால த்துக்கும் சீமானிடம் என்ன தீர்வுகள் இருக்கின்றன? ஒதுங்கிப் போன உறவுகளுக்கு உள்ளூர இந்தக் கேள்விகள் இருந்திருக்கும்.

-ஜூனியர்விகடன்-

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : ரிஷிமூலம்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : இளையராஜா
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



நேரமிது நேரமிது நெஞ்சில் ஒரு பாட்டெழுத
இன்பம் என்னும் சொல் எழுத
நீ எழுத நான் எழுத
பிறந்தது பேரெழுத பிறந்தது பேரெழுத

நேரமிது நேரமிது நெஞ்சில் ஒரு பாட்டெழுத
இன்பம் என்னும் சொல் எழுத
நீ எழுத நான் எழுத
பிறந்தது பேரெழுத பிறந்தது பேரெழுத

மேகத்திலே வெள்ளி நிலா
காதலிலே பிள்ளை நிலா
தாகம் எல்லாம் தீருவது பிள்ளையின் தாலாட்டிலா

மேகத்திலே வெள்ளி நிலா
காதலிலே பிள்ளை நிலா
தாகம் எல்லாம் தீருவது பிள்ளையின் தாலாட்டிலா
கூண்டுக்கிளிக்கொரு ஆசை பிறந்தபின்
கோலம்போடும் நேரங்கள்

நேரமிது நேரமிது நெஞ்சில் ஒரு பாட்டெழுத
இன்பம் என்னும் சொல் எழுத
நீ எழுத நான் எழுத
பிறந்தது பேரெழுத பிறந்தது பேரெழுத

திங்கள் ஒளி திங்களைப்போல்
உங்கள் பிள்ளை உங்களைப்போல்
உங்களைத்தான் நாடுகிறான்
என்னிடம் ஆசையில்லை

திங்கள் ஒளி திங்களைப்போல்
உங்கள் பிள்ளை உங்களைப்போல்
உங்களைத்தான் நாடுகிறான்
என்னிடம் ஆசையில்லை

நீ பெற்ற பிள்ளையின்
வேகமும் கோபமும்
உன்னைப் போலத் தோன்றுதே

நேரமிது நேரமிது நெஞ்சில் ஒரு பாட்டெழுத
இன்பம் என்னும் சொல் எழுத
நீ எழுத நான் எழுத
பிறந்தது பேரெழுத பிறந்தது பேரெழுத

இன்னும் ஒன்று வேண்டுமென்று
தெய்வத்திடம் கேட்டிருந்தேன்
இந்த ஒன்றே போதுமென்றாள்
தேவி என் காதினிலே
ராத்திரி ராத்திரி தூக்கம் கெட்டாலென்ன
பிள்ளைகூட இன்பமே

நேரமிது நேரமிது நெஞ்சில் ஒரு பாட்டெழுத
இன்பம் என்னும் சொல் எழுத
நீ எழுத நான் எழுத
பிறந்தது பேரெழுத பிறந்தது பேரெழுத

## மாவீரர் புகழ்பாடி

# சுவிஸ் தொலைக்காட்சியில் கலக்கும் ஈழத்துச் சிறுமி


ஐரோப்பாவில் பிரெஞ்ச் மொழியில் முதற்தர தொலைக்காட்சியான TF 1 இல் The voice kids என்கின்ற பாடல் போட்டியில் முதன் முதலாக ஈழத்துச் சிறுமி அசத்துகிறாா்.

புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வலே மாநிலத்தில் வாழ்கின்ற பாலகுமாரன் கனிஷா என்ற 11 வயது சிறுமியே இவ்வாறு அசத்துகிறார்.

இந்தத் தொலைக்காட்சியில் முதன் முதலாக ஈழத்துச் சிறுமி கேட்டறிந்த நடுவர்கள் மெய் சிலிர்த்துப் போனார்களாம். போட்டிக்குத் தெரிவான கனிஷா கடந்த வாரம் நடைபெற்ற முதல் சுற்றில் 85 போட்டியாளர்களோடு போட்டியிட்டு தென்னிந்திய இசையமைப்பாளர் இமானின் இசையில் உருவான "சொப்பன சுந்தரி" பாடலை பாடி பிரெஞ்ச் மொழியிலான பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைக் கவர்ந்துள்ளார்.

அத்தோடு நடுவர்களின் அமோக தெரிவுடன் அவர் யோகபூர்வ டுவிட்டரில் கனிஷாவைப் பாராட்டி "வாழ்க தமிழ் வளர்க தமிழ்" என்று பதிவிட்டுள்ளார்.

கனிஷாவின் பெற்றோர் யாழ்.சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர்கள். கனிஷா சுவிஸ் தமிழர் "நினைவேந்தல் அகவம்" கடந்த 8 வருடமாக நடத்தி வருகின்ற விடுதலைப் போராட்டத்திற்கு வலுச்சேர்த்த அனைத்துக் கலைஞர்களினதும் நினைவு சுமந்த எழுச்சிப் பாடல் போட்டியில் ஒவ்வொரு



யொருவர் இந்தப் பாடல் போட்டியில் கலந்து கொள்வதாக தெரிய வருகிறது.

இவர் இந்தப் போட்டிக்கென தொலைக்காட்சியினரால் நடத்தப்பட்ட உள்ளகச் சுற்றுப்போட்டியில் விடுதலைப் புலிகளின் எழுச்சிப் பாடல்களான: "கல்லறைகள் விடை திறக்கும்", "இனிதான உலகத்தில் அழகான தமிழீழம்" என்ற இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

பாடல் வரிகளின் பொருளைக் களின் பாராட்டினையும் பெற்று இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகியுள்ளார்.

இரண்டாம் சுற்று அடுத்த மாத முற்பகுதியில் இடம்பெறவுள்ளது. அதில் பிரெஞ்ச் மொழிப் பாடலை பாடுவதற்கான அறிவுறுத்தல்களை நடுவர்கள் வழங்கியுள்ளனர்.

தனது இசையிலான பாடலை பாடியமைக்காக இசையமைப்பாளர் இமான் தனது உத்தி தடவையும் பங்கு பற்றி தனது வெற்றியைப் பதிவாக்கி சுவிஸ் கலை நெஞ்சங்களின் பாராட்டுக்களையும் வெகுவாகப் பெற்றவர்.

கனிஷா தனது 3 வயதிலிருந்து இசைத்துறையில் பாடல்களை பாடி வருகிறார். பிரெஞ்சு மொழி தொலைக்காட்சியில் கலக்கிய, அசத்திய கனிஷா பாலகுமாரனை நாமும் மனதார வாழ்த்துவோம். வீழ்வது நாமாகினும் வாழ்வதும் எழுவதும் தமிழாகட்டும்.

---



"நான் கோழை என்று எதிரிக்குத் தெரிவியுங்கள் அமைச்சரே!"
"ஏன் மன்னா?"
"கோழையுடன் போரிட மாட்டேன் என்று எதிரி ஒரு பத்திரிகைக்குப் பேட்டி கொடுத்திருக்கிறான் அமைச்சரே!"



"போருக்குத் தயாரா எனக்கேட்டு நான் எதிரி மன்னனுக்கு ஓலை அனுப்பியதற்கு பதில் வந்ததா அமைச்சரே?"
"மன்னரே மன்னர் ஜோக் எழுதுவதை ரசித்ததாகச் சொல்லி, பத்துப் பொற்காசுகளை சன்மானமாக அனுப்பியுள்ளான் மன்னா!"



"நான் சொல்வதை யாரும் நின்று கேட்கக்கூடத் தயாராக இல்லை அமைச்சரே!"
"சரி மன்னா, நான் கிளம்பறேன்!"

# அனுஷ்காவின் "சைலன்ஸ்" OTT இல் அதிகாரபூர்வ திகதி அறிவிப்பு






ஹேமந்த் மதுக்கூர் இயக்கத்தில் அனுஷ்கா, மாதவன் நடித்துள்ள சைலன்ஸ் படத்தின் ஓடிடி ரிலீஸ் திகதி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.ஹேமந்த் மதுக்கூர் இயக்கத்தில் உருவாகி இருக்கும் படம் 'சைலன்ஸ்'. இதில் மாதவன் நாயகனாக நடித்துள்ளார். அவருக்கு ஜோடியாக அனுஷ்கா நடித்துள்ளார். இந்த படத்தில், அனுஷ்கா காது கேளாத, வாய் பேசமுடியாத மாற்றுத்திறனாளி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். 4 இந்தியர்களுக்கும், அமெரிக்க பொலிஸ்'க்கும் இடையே நடக்கும் கிரைம் திரில்லர் படமாக சைலன்ஸ் தயாராகி உள்ளது. ஷெனியல் டியோ ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்திற்கு கோபி சுந்தர் இசையமைத்துள்ளார். இந்நிலையில், இப்படத்தின் ஓடிடி வெளியீட்டு திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம்திகதி காந்திஜெயந்தி அன்று தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் வெளியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.




(C-1035)

# ஐ.பி.எல். திருவிழா

## அசத்தப்போகும் அணி எது?

**நடக்குமா நடக்காதா, நடந்தால் எப்படி நடக்கும், யாரெல்லாம் இருப்பார்கள், யாராவது ஒருவருக்கு தொற்று ஏற்பட்டால்கூட மொத்தத் தொடரும் என்னாகும் என ஆறு மாதங்களாக கிரிக்கெட் ரசிகர்களை குடைந்துகொண்டிருந்த கேள்விகளுக்கு எல்லாம் விடை 19 ஆம் திகதி இரவு சுண்டப்படும் டொஸ் கொயினில் ஒளிர்ந்திருக்கிறது. தொட்டுவிடும் தூரத்தில் ஐ.பி.எல்.தொடங்க இருக்கும் நேரத்தில் இந்த ஆண்டு அணிகளின் ப்ளஸ், மைனஸ் அலசல் இது.**



### சென்னை சுப்பர்கிங்ஸ்

தொடரில் அதிக ரசிகர்களைக் கொண்ட அணிகளுள் ஒன்று. சும்மாவே கொண்டாடித் தீர்க்கும் ரசிகர்கள் இனி டோனியை சிஎஸ்கே முகாமில் மட்டுமே பார்க்க முடியுமென்றால் சும்மா இருப்பார்களா? வெறித்தனமாய்க் காத்திருக்கிறார்கள். ஆனால் அதேசமயம் தொற்று, ரெய்னா குறித்த செய்திகள் என அணியைச் சுற்றி நெகட்டிவ் அதிர்வுகளும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இருக்கின்றன.

வழக்கமாய் வீக்காக இருக்கும் பவுலிங்கில் இந்த முறை ஹெசல்வுட், சாம் கர்ரன் போன்றவர்கள் கொஞ்சம் பலம் சேர்க்கலாம். யு.ஏ.இயிலும் ஸ்லோ பிட்ச்கள் என்பதால் சென்னை ஸ்பின்னர்களுக்கு செம. வேட்டை காத்திருக்கிறது.

### டில்லி கப்பிடல்ஸ்

கண்டிப்பாக ப்ளே ஓப் சுற்றுக்குள் நுழைந்துவிடும் என நம்பி பந்தயம் வைக்கும் குதிரை இது. முதல் ஐந்து பட்ஸ்மன்கள் அனைவருமே இந்தியர்கள் என்பதால் வெளிநாட்டு வீரர்களை தேவைக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளலாம்.

அஷ்வினின் விரல் வித்தை பவர்ப்ளேயில் வெகுவாக கைகொடுக்கும், ஆனால் ஒரு அனுபவம் வாய்ந்த பினிஷர் இல்லாதது சேஸிங்கில் மிகப்பெரிய சறுக்கலைக் கொடுக்கலாம். ஸ்டாய்னிஸ், கேரி போன்றவர்கள் க்ரீஸில் டைம் எடுத்து ஆடுவார்கள் என்பதால் அவர்களால் அதைச் செய்யமுடியுமா என்பதும் சந்தேகமே.

### கிங்ஸ் லெவன் பஞ்சாப்

புத்தம்புது கப்டனோடு களமிறங்குகிறது பஞ்சாப். கே.எல்.ராகுல் இருபது-20களில் தொடர்ந்து தன் திறமைய்யை நிரூபித்துவந்தாலும் ஐ.பி.எல்லில் கப்டனாக எப்படி பிரஷரைத் தாங்குவார் என்பதுதான் அந்த அணியைத் தற்போது சுற்றிவரும் கேள்வி.

ஒருவேளை பூரனுக்குப் பதில் கீப்பிங்கையும் அவரே செய்தால் அது கூடுதல் பிரஷரை உருவாக்கும். கருண் நாயர், சர்ஃபராஸ் கான், மந்தீப் என இந்திய மிடில் ஓடர் பெர்போர்ம் செய்வதைப் பொறுத்துத்தான் அணியின் வெற்றிவாய்ப்புகள் இருக்கின்றன.


### கொல்கத்தா நைட்ரைடர்ஸ்

இருபது-20 ஸ்பெஷலிஸ்ட்டான மக்கல்லம் அணியின் கோச்சாக பதவியேற்றிருப்பது நிச்சயம் பொசிட்டிவ் விளைவுகளை உண்டாக்கும். மோர்கன் ஆடும் பட்சத்தில் அவரின் அனுபவம் கப்டன் தினேஷ் கார்த்திக்குக்கு கைகொடுக்கும். அணி பெரிதும் நம்புவது பலகோடி கொடுத்து எடுத்த பேட் கம்மின்ஸைத்தான்.

நரைன், கம்மின்ஸ், ரஸல் ஆகியோர் எல்லாப் போட்டிகளிலும் அணியில் கட்டாயம் இருப்பார்கள் என்பதால் மிச்சமிருக்கும் ஒரு வெளிநாட்டு வீரர் இடத்தை எப்படி நிரப்பப்போகிறார்கள் என்பதுதான் பெரிய கேள்வி.

MUMBAI INDIANS

**மும்பை இந்தியன்ஸ்**



ரோஹித் சர்மா

**கவனிக்க வேண்டிய வீரர்:**



**பாண்ட்யா பிரதர்ஸ்**



\+ மிகவும் பலம் வாய்ந்த பேட்டிங் லைன் அப்

− ரோஹித் ஷர்மாவின் ஐ.பி.எல் ஃபார்ம், சொல்லிக்கொள்ளும் படியான ஸ்பின்னர்கள் இல்லாதது. டெத் ஓவர்களில் திறமையாக சமாளிக்கும் பவுலர்கள் இல்லாதது.

### மும்பை இந்தியன்ஸ்

தொடரிலேயே நன்றாக செட்டில் ஆகியிருக்கும் ஒரே அணி இதுதான். ரோஹித், பும்ரா, சூர்யகுமார் யாதவ், பாண்ட்யா சகோதரர்கள் என அசைக்கமுடியாத கோர் டீம் தான் அணியை வெற்றிக்கு வழிநடத்துகிறது. டொப் ஓடரில் மேலும் பலம் சேர்க்கிறது க்றிஸ் லின், டி காக் இணை. ஒரு பெரிய இடைவெளிக்குப் பின் களத்திற்கு வரும் ஹர்திக் போர்மில் இருக்க வேண்டியது அணிக்கு மிகவும் முக்கியம். மலிங்கவை டெத் ஓவர்களில் நிச்சயம் மிஸ் செய்வார்கள்.

### ராஜஸ்தான் ரோயல்ஸ்

'பதிமூணுமே ரம்மி கார்டுனா என்னப்பா பண்றது?' லெவலில் இருக்கிறது ராஜஸ்தானின் வெளிநாட்டு வீரர்கள் லிஸ்ட். ஸ்மித்-கப்டன், ஸ்டோக்ஸ் ஓல்ரவுண்டர், ஆர்ச்சர்-முதன்மை பவுலர் என மூன்று இடங்கள் கிட்டத்தட்ட உறுதியென்பதால் எஞ்சிய ஒரு இடத்தில்தான் மற்றவர்களை யோசிக்க வேண்டும். அதிலும் அநேகமாய் பட்லர்தான் ஆடுவார். உத்தப்பா, சஞ்சு சாம்சன், உனட்கட் என மூன்று இந்திய வீரர்களைத் தவிர்த்து மீதி எல்லோருக்குமே ஐ.பி.எல். அனுபவம் போதுமான அளவி ற்கு இல்லாதது கொஞ்சம் பிரச்சினைதான்.


### சன்ரைஸர்ஸ் ஹைதராபாத்

ஏறக்குறைய எல்லோருடைய இரண்டாவது பேவரட் அணியாக சன்ரைஸர்ஸ்தான் இருக்கும். காரணம் வோர்னரும் கேன் வில்லியம்சனும். ஆனால், போன தடவை போலவே இம்முறையும் வில்லியம்சனுக்கு அடிக்கடி வாய்ப்பு கிடைக்காது என்பதே உண்மை. வோர்னர், பேர்ஸ்டோ, ரஷித் மூவரும் கண்டிப்பாக ஆடுவார்கள். ஆக, அந்த நான்காவது வெளிநாட்டு வீரர் யார் என்பதுதான் பெரிய குழப்பம். மனிஷ் பாண்டே, விஜய் ஷங்கர் இருவரின் போர்மும் வெற்றிக்கு மிகமுக்கியம்.

### ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்

இந்தமுறையும் 'ஈ சாலா கப் நமதே' கோஷம்தான். அதற்கு ஓரளவிற்கு நியாயம் செய்யுமளவிற்கு அணியும் இருக்கிறது என்பதையும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். பின்ச்சின் வருகை அணியின் நீண்டகாலக் கவலையான டொப் ஓடர் பிரச்சினையைத் தீர்க்கும். ஸ்லோ ட்ராக்குகள் கொண்ட யு.ஏ.இ.மைதானங்களில் ஸ்பின் பவுலிங்கில் பலமான அணியாக கெத்து காட்டுகிறது ஆர்.சி.பி. கோலியின் அணித் தேர்வு முந்தைய ஆண்டுகளைப் போல சொதப்பலாக இல்லாவிட்டால் நிச்சயம் ப்ளே ஓப் வாய்ப்பிருக்கிறது.

# தமிழர் அடையாளம்!



இலங்கையில் காலனித்துவ வருகையினைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட கருத்தாடலே அடையாளம். காலனியினர் தம்மால் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் குழுவினை அவர்களுடைய கலாசாரம், நம்பிக்கைகள், நடைமுறைகள், வெளிப்பாடுகளிற்கு ஊடாக வேறுபடுத்தி அடையாளப்படுத்தினர். அவ் அடையாளங்களை தமக்கான அடையாளமாக குறித்த குழு தெரிவுசெய்யப்பட்டமையினைத் தொடர்ந்து அடையாளம் பற்றிய கருத்தியல் உருவாகியது. இதற்கூடாக தோற்றம் பெற்ற எண்ணக்கருவே தமிழடையாளம். இவ் அடையாளம் பற்றிய பிரக்ஞையே பிற்காலத்தில் இனம் எனும் கருத்தாடலின் தோற்றத்திற்கு வித்திட்டது.

ஒரு தமிழனுடைய அடையாள தோற்றம் எப்படி இருக்கும் எனக் கேட்டதும் பெண்கள் சேலை அணிவதும், பொட்டு வைத்தலும், ஆண்கள் வேட்டிகட்டுவதும் முறுக்கு மீசை வைத்திருப்பதும் இது தமிழனின் உருவ அடையாளத் தோற்றமாக குறிப்பிடப்படுகிறது. இதுதவிர தமிழர் கலைகள் திராவிடக் கட்டடக்கலை, பரதம், தமிழிசை என்றும், தமிழர் பண்டிகையாக தீபாவளி, சித்திரை வருடப்பிறப்பு, தைப்பொங்கல் என்றவாறு அடையாளப்படுத்தப்படுவதனைக் காணலாம். அடையாளம் என்பது வரலாற்றுத் தெரிவு என்பதற்கேற்ப இங்கு சுட்டப்படும் தமிழடையாளத்தின் தெரிவு என்பது யாருடையது என்பதும், இவ் அடையாளம் ஒட்டுமொத்த தமிழ்மக்களையும் குறிப்பதாக உள்ளதா என்பதும் இங்கு வரும் கேள்வியாக உள்ளது.

காலனியும் வருகைதருவதற்கு முன்னர் தமிழ் மக்களாக கருதப்படும் மக்களிடம் காணப்பட்ட பண்பாடுதானா இன்றும் அவர்களிடம் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக காலனியம் வருகை தரும் முன்னர் சில தமிழ்ச் சமூகங்களில் பெண்களிடம் மேல்சட்டை அணியும் வழக்கம் காணப்படவில்லை. இவர்கள் வர்க்க ரீதியாக வேறுபடுத்தப்பட்டுக் காணப்பட்டனர். அவர்களுடைய பண்பாடு தமிழடையாளமாக தெரிவுசெய்யப்பவில்லை. இங்கு தமிழ் அடையாளம் என்பது சமூகத்தின் முதன்மைபெற்ற சமூகத்தவரால் கட்டமைக்கப்பட்ட கருத்தாடலிற்கேற்ப தெரிவுசெய்யப்பட்டதாகவுள்ளது.

இவ்விடத்தில் அடையாளம் என்பது பொதுமைப்படுத்தப்பட்டதாகவே நோக்கப்படுகிறது. அடையாளமானது பொதுமைப்படுத்தப்பட்டு நோக்கப்படுவதனால் வீளிம்பு நிலையிலிருக்கும் சமூகத்தினது அடையாளம் என்பது விளிம்பு நிலைக்கு தள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக தமிழர் கலை என்பதும் நினைவிற்கு வருவது பரதநாட்டியமே. ஆனால் சின்னமேளம், கரகம், பொய்க்கால் குதிரை நடனம், கூத்து என்பவற்றினை தமிழடையாளமாக முதன்மைப்படுத்தாதது ஏன் என்பது இங்கு வரும் முக்கியமான கேள்வியாக உள்ளது. இவை முக்கியமற்றுக் காணப்படுவதனால் இவ் அடையாளங்கள் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

இவை தவிர தமிழ் அடையாளத்தினை தீர்மானப்பதில் முக்கிய பங்கு வகிப்பனவாக திராவிடக் கட்டடங்கள் காணப்படுகின்றன. இதனால் தமிழ் அடையாளத்தினை வெளிப்படுத்த வேண்டுமெனில் திராவிடக் கட்டடக்கலைக் கூறினைக் கொண்டிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. திராவிடக் கட்டடக்கலை இந்துமதம்சார்ந்து உரு வாக்கப்பட்ட கட்டடக்கலையாகும். இதற் கேற்ப திராவிடக்கட்டடங்கள் மட்டும் தான் தமிழர் அடையாளமா என்பது மறுபக்கமாக எழுப்பப்படும் வினாவாக உள்ளது.

"அடையாளம் பற்றி எழுதுபவர்கள் ஒரு நேரத்தில் ஒரு சமூக இயக்க விசையிலேயே பெரும்பாலும் கவனம் செலுத்துகின்றனர். உதாரணமாக வகுப்பு அல்லது இனம் அல்லது குடியுரிமை. இது மனித உள்ளடக்கத்தை அதன் அடையாள உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் பலவகையான காரணிகளை நிராகரிக்கிறது" என **Madan Sarup** குறிப்பிடுகிறார். அதாவது அடையாளத் தெரிவு என்பது வகுப்பு, இனம், குடியுரிமை போன்ற சமூக இயக்க விசைகளின்மேல் கட்டப்பட்டவையாகவே காணப்படுகிறது. இதற்கு ஒப்பானதே தமிழ் அடையாளத் தெரிவும்கூட. இதனால் சிறுபான்மையாக காணப்படும் சமூக அடையாளங்கள் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பண்பாட்டு விழுமியங்கள் சிதைக்கப்படும்போது தனித்துவமும் அழிந்துவிடும் என பேராசிரியர் க.சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தற்காலத்தில் காணப்படும் இப் பண்பாட்டு விழுமியங்களுடான தமிழர் எனும் அடையாளத் தெரிவென்பது யாருடையதாக காணப்படுகிறது. எதனை முன்னிறுத்தியதாக உள்ளது என்பதும் பற்றி மேற்கூறப்பட்ட காரணிகளுடன் இணைத்து நோக்கப்படல் வேண்டும். இதன் பிரகாரம் அடையாளம் என்பது ஓர் தெரிவாகவே காணப்படுகிறது. அத் தெரிவானது அதிகாரம், இனம், மதம், பால்,வர்க்க பேதத்திற்கு உட்பட்டதாகவே காணப்படுகிறது.

**சாந்தமூர்த்திசூரியா**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2021

**சசி**



**உங்களுக்கும் உங்க மனைவிக்கும்**
**ஒரே ப்ளட் குருப்!**
**இருக்காதா இருபது வருஷமா என் ரத்தத்தை**
**உறிஞ்சிக்கிட்டு இருக்காளே!**

**உஷா**

**காலையில எழுந்தவுடன்**
**செய்யக்கூடிய யோகா...**



**இன்னும் தூக்கம்**
**போகல சமாளிப்போம்...**

**ரிது**

**நம்மை நல்லவர்கள் என்று**
**மற்றவர்கள் சொல்லக் கூடாது.**



**முதல்ல நம்ம மனச்சாட்சி**
**சொல்லனும்.**

**ஜெயா**

**மனைவி மூலம் சிறந்த**
**அதிர்ஷ்டம் கிடைக்கும் பலருக்கு...**



**அதிர்ஷ்டம் இருந்தால் தான் சிறந்த**
**மனைவியே கிடைக்கும் சிலருக்கு...!**

**கிஷாலினி**



**எவ்வளவு கஷ்டங்கள் இருப்பினும் "நீ நல்லா இருப்பா"**
**என்று யாரே ஒருவர் சொல்லும் வாழ்த்துத்தான்**
**நம்மை இன்னும் உயிர்ப்புடன் ஓடச் செய்கிறது.!**

**லக்ஷ்மி**

**வாழ்க்கையில்**
**அன்பான உறவு**
**கிடைப்பது**
**முக்கியம்**
**அல்ல...**
**வாழ்நாள்**
**முழுவதும்**
**அன்பாக**
**இருப்பதே**
**முக்கியம்**



**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.**
**அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 222

## உங்கள் சந்தேகங்களுக்கான பதில்கள்


**அடிக்கடி தும்மல், மூக்கிலிருந்து நீர் வடிதல் என்பவற்றால் அவஸ்தைப் படுகின்றேன்.இதற்கு காரணம் என்ன? இதை எவ்வாறு தடுக்கலாம்?**



இந்த அறிகுறிகளுக்கு ஒவ்வாமையால் சுவாசப் பாதையில் ஏற்படும் அழற்சியே காரணமாகும். இதை ஆங்கிலத்தில் **Allergic Rhinitis** என்பர். இது கிருமித்தொற்றினால் ஏற்படும் நோய் அல்ல. கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய்களுக்கே அன்ரிபயோட்டிக் **(Antibiotics)** தேவைப்படும். தூசு மற்றும் காற்றில் கலந்துள்ள மகரந்தமணி என்பன சுவாசப் பாதையைத் தூண்டி சில இரசாயனப் பதார்த்தங்களை உற்பத்தி செய்வதால் **Allergic Rhinitis** ஏற்படுகின்றது.

இதனால் அரிப்பு, வீக்கம், மூக்கிலிருந்து நீர் வடிதல், கண்கள் வீங்கி சிவத்தல், மூக்கடைப்பு என்பன ஏற்படுகின்றன. குறித்த ஒரு நபருக்கு சில பொருள்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தும். அவற்றைக் கண்டறிந்து தவிர்ப்பதே இந்த நிலை ஏற்படுவதை தவிர்க்கும் வழியாகும். சிலருக்கு காலநிலை மாறுபாட்டின் போதும் இவ்வாறு ஏற்படலாம். இதனைத் தவிர்க்க முடியாதவர்கள் மருந்துகளைக் குளிகைகளாகவோ அல்லது நாசியினுள் விசிறியோ **(Nasal spray)** உள்ளெடுக்கலாம். அவ்வாறு பாவிக்க வேண்டியவர்கள் வைத்திய ஆலோசனையின் பின்னரே எடுக்க வேண்டும்.

### HbA1C என்றால் என்ன?




நீரிழிவு நோயாளர்களின் குருதிக்குளுக்கோசின் அளவு உணவருந்த முன்னும், உணவருந்திய பின்னும் கட்டுப்பாட்டில் இருப்பதுடன் அவர்களுடைய சராசரி குருதிக்குளுக்கோசின் அளவும் கட்டுப்பாட்டில் இருந்தால் மட்டுமே அவர்களுடைய நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருப்பதாக கருதப்படுகின்றது.

**HbA1C** எனும் குருதிச்சோதனை செய்வதன் மூலம் 3 மாத காலப்பகுதியில் அவரது சராசரி குருதிக் குளுக்கோஸ் மட்டம் எவ்வாறு இருந்தது என்பதை அறிய முடியும். **HbA1C** பெறுமானம் 6.5 தொடக்கம் 7.0 இற்கு இடைப்பட்டதாக இருப்பின் நீரிழிவு பூரணமாகக் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்று கொள்ளப்படும்.

**எனக்கு வயது 51. கொலஸ்ட்ரோல் அதிகமாக உள்ளது. நான் கொழுப்பு வகையான உணவுகளையும் தவிர்த்து விட்டேன். தற்போது 20mg கொலஸ்ட்ரோல் மாத்திரை பாவிக்கிறேன். இருந்தும் கொலஸ்ட்ரோல் குறைவதாக இல்லை. இதற்கு என்ன செய்யலாம்?**

உங்களுக்கு வேறுநோய்கள் வருவதை தடுப்பதற்காக உங்களின் கொலஸ்ரோலை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இதற்கு நீங்கள் ஆரோக்கியமான உணவு வகைகளை அதிகம் உண்ண வேண்டும்.




ஆரோக்கியமான் உணவு வகைகளாவன மீன், கோழி இறைச்சி, இறால், சுறா, பருப்பு, பயறு, உழுந்து, மரக்கறி வகைகள், பழவகைகள், ஆடை நீக்கியபால், முட்டை வெள்ளைக்கரு, கௌப்பி, சோயா அவரை, மோர், முட்டுத்தேங்காய் போன்றவை ஆகும். இவற்றை எல்லாம் அதிகம் உண்பதை கடுமையான உணவுக் கட்டுப்பாடு என்று நீங்கள் கருதத்தேவையில்லை. உணவில் சீனி, எண்ணெய் அல்லது கொழுப்பு அதிகமுள்ள உணவுகளை தவிர்ப்பது அனைவருக்குமே நல்லது.

மேலும் தினந்தோறும் 30 நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்தல் சிறந்தது. உதாரணமாக வேகமாக நடத்தல், மெதுவாக ஓடுதல், சைக்கிள் ஓடுதல், நீந்துதல், விளையாடுதல் போன்றவற்றில் ஈடுபடலாம்.

இவற்றை சரியாக கடைப்பிடித்தும் கொலஸ்ரோல் கட்டுப்பாட்டில் இல்லாவிடில் நீங்கள் தற்போது **Atorvastation 20mg** பயன்படுத்தினால் மேலும் அதன் அளவை கூட்டி பயன்படுத்தலாம். அல்லது **Kosuvastation 20mg** மருந்தை அதற்கு பதிலாக பயன்படுத்தலாம். எதுவாக இருப்பினும் உங்களுடைய மருத்துவரை அணுகி மேற்குறிப்பிட்ட இருமுறைகளில் ஏதேனும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**எனது நிறை அதிகம் என்று வைத்தியர்கள் சொல்கிறார்கள். உணவைக் குறைத்து சாப்பிடாமல் இருந்தால் தலை சுற்றுகிறது. உணவைக் கடுமையாகக் குறைத்தால் உடல் பலவீனப்பட்டு விடும் என்று பயமாக இருக்கிறது. உடற்களைப்பை போக்குவதற்கு எந்த வகையான சத்துமா வகைகளைச் சாப்பிடலாம். உப்புச்சோடா குடித்தால் நிறை அதிகரிக்குமா?**



உங்கள் களைப்புக்கு முக்கிய காரணியாக இருப்பது உங்களது அதிகரித்த உடல் நிறையே. உங்கள் அதிகரித்த உடல் நிறையைச் சமாளிக்கும் வல்லமை உங்கள் உடல் உறுப்புகளுக்குப் போதாமல் இருக்கும் பொழுது களைப்பு ஏற்படுகி றது. உங்கள் களைப்புக்கு வேறு ஏதாவது காரணிகளும் இருக்கிறதா என்று உங்கள் வைத்தியர் உங்களைச் சோதித்து பார்த்திருப்பார். உணவைக் கடுமையாகக் குறைத்து பட்டினி கிடந்து தான் உடல் நிறையைக் குறைக்க வேண்டும் என்பது அவசியமில்லை. அவ்வாறு செய்தால் உங்களுக்கு மட்டுமல்ல யாருக்கும் தலைச்சுற்றும் களைப்பும் ஏற்படுவதுடன் உடலும் பலவீனமாகும். உடல் நிறையைக் குறைப்பதற்குச் சாப்பாட்டு வகையிலேயே மாற்றம் செய்ய வேண்டும் என்பதே முக்கியமானதாகும். நீங்கள் நிறையைக் குறைப்பதற்கு மாப்பொருள் அதிகமுள்ள உணவுகளைத் தவிர்த்து நல்ல ஊட்டச்சத்துள்ள, புரதம் நிறைந்த கனியுப்புகள் நிறைந்த, விட்டமின்கள் நிறைந்த உணவுகளைப் போதியளவில் உண்ண முடியும். நீங்கள் போதியள வில் உண்ணக் கூடிய உணவுகளாவன - ஆடை நீக்கியபால், மரக்கறி வகைகள், கௌப்பி, முட்டை, மீன், இறால், பய்று, பருப்புவகைகள், பழவகைகள், கோழி இறைச்சி, சுறா, சோயா, அவரை, இலை வகைகள், கொண்டல் கடலை போன்றவையாகும். இவற்றைப் போதியளவில் உண்டு நிறை குறைந்து வரும் போது உங்கள் உடல் பலவீனப்படமாட்டாது. நோய்க்கிருமிகள் தாக்கும் ஆபத்தும் ஏற்படாது. மேலதிக சத்துமாக்களும் தேவைப்படாது. சோடா வகைகள் உடலுக்குப் பாதுகாப்பானது அல்ல. அவற்றைத் தவிர்ப்பது நல்லது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்